www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே -பாரதி

**வெங்காயம் - தலை**

துங்கக் கரியோனே தூற்றுகின்ற புண் நாக்கே
சிங்கக் கொடியோனே சிறுமதியே -வெங்காயம்
இவரென்று வெறுங்கையால் நசுக்கிவிட எண்ணுகிறாய்
தவறப்பா; அதுவுன் தலை!

-ஈழமோகம்

இதழ் 52 ஜூலை 28 - ஓகஸ்ட் 10, 1994 விலை 7/=

## ஐ.தே.க. தேர்தல் விஞ்ஞாபனம்:

# தமிழ் மக்கள் மீதான போர்ப் பிரகடனம்!

**இம்முறை ஐ.தே.க வினால் வெளியிடப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபன மானது தமிழர் மீது தெளிவாகவே போர்ப்பிரகடனம் செய்துள்ளது.**

**இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் வரையறைகளின் உள்ளேயே இனப்பிரச் சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனவும், வட கிழக்கு இணைப் பிற்கு தாம் எதிர் எனவும், அதிகாரப் பகிர்வு தொடர்பான பேச்சுவார்த்தைக்கு மறுப்புத் தெரிவிக்கும் பட்சத்தில் பலாத்காரத்தைப் பிரயோகிப்போம் என வும் ஐ.தே.க. தன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளது. இனப்பிரச் சினை தொடர்பான ஐ.தே.கவின் இவ் அணுகுமுறை ஒரு திட்டவட்டமான போர்ப் பிரகடனமாகவே வெளிப்பட்டுள்ளது.**

விடிய விடிய ராமர் கதை விடிந்தெ ழுந்ததும் ராமர் சீதைக்கு என்ன முறை என்பது போலத்தான் உள் ளது இலங்கை - இந்திய ஒப்பந்தம் பற்றி ஐ.தே.க கூறியுள்ள விடயம்.

ஒப்பந்தத்தின் கீழ் கொண்டு வரப் பட்ட 13வது திருத்தச் சட்டமும் மாகாணசபை அமைப்பு முறையும் வெறும் கண்துடைப்பு. தமிழருக்கு இதன் கீழ் உண்மையான அதிகாரப் பகிர்வும், மாகாண சுயாட்சியும் இம்மியளவும் கிடைக்க முடியாது என ஒப்பந்தத்தை இந்தியாவும் இலங்கையும் தயாரித்து, கைச்சாத் திட்ட நாளிலிருந்து சகல தமிழ் இயக்கங்கள் கட்சிகள் அனைத்தும் கூறிவருகின்றன. இதனை ஐ.தே.க ஏற்றுக் கொண்டதாலேயே சர்வ கட்சி மாநாடு, பாராளுமன்றத் தெரிவுக்குழு ஆகியவற்றை நிய மித்தது. நாடகமாடியது.

மற்றது அனைத்துத் தமிழ் கட்சிக ளும் இயக்கங்களும் வட கிழக்கு இணைப்பு என்ற விடயத்தில் உறுதி யாகவே இன்றுவரை உள்ளன. இதையும் ஐ.தே.க எதிர்ப்பதாகக் கூறுகிறது.

ஆகவே தமிழருடன் பேச்சுவார்த் தைக்கான கதவை மூடியுள்ளோம் என்பதே ஐ.தே.க. தேர்தல் விஞ் ஞாபனத்தின் சாராம்சமாக உள் ளது.

அதே வேளை பேச்சுவார்த்தைக்கு வராவிடில் பலாத்காரத்தைப் பிர யோகித்து தீர்வு காண்போம் எனத் தெளிவாகக் கூறுகிறது ஐ.தே.க விஞ்ஞாபனம். எனவே ஐ.தே.க வின் தேர்தல் விஞ்ஞாபனம் ஒரு போர் பிரகடனம் என்பது தெளிவு.

## கருணாகரனை ஓரங்கட்டும் ரெலோ?

மட்டக்களப்பில் திரு.கோவிந் தன் கருணாகரனின் பிரச்சார வேலைகள் ஓரளவு மந்தகதியி லேயே ஆரம்பித்ததற்கு கருணாக ரம் (ஜனா) பல நாட்கள் கொழும் பில் தங்கியிருந்தமையே காரணம் என ரெலோ ஆதரவாளர்கள் கூறு கின்றனர். செங்கலடி, வாழைச் சேனை, வாகரைப் பகுதிகளை மையமாக வைத்து இயங்கிவரும் பேட்டோவை ரெலோவின் தற் போதைய பொதுக் காரியதரிசி சிவாஜிலிங்கம் முதன்மைப்படுத்த முற்பட்டமையாலும், அதன் கார ணமாக பிரச்சார வேலைகளுக்குப் பணம் திரட்டிச் செல்ல கொழும்பு வந்த ஜனாவிற்கு நிதி வழங்காமல் காலம் தாழ்த்தியதாலுமே இந் நிலை தோன்றிற்று என ரெலோ வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஐந்து வருடங்களாக பாரா ளுமன்ற உறுப்பினராக இருந்த ஜனாவின் செல்வாக்கு ரெலோ இயக்கத்தினுள் ஏற்கனவே சிக் கலை ஏற்படுத்தியதனாலேயே கடந்த வருடம் நடைபெற்ற இயக் கத்தின் முக்கிய மத்திய குழுக் கூட் டமொன்றின் பின் ரெலோவை கார சாரமாகத் தாக்கி அறிக்கை விட்டு திரு.சிறீகாந்தா வெளியேறினார். அவர் இன்று ரெலோவின் திரு மலை வேட்பாளர்.

இதன் பின்னர் ரெலோவின் தலை மைப்பீடம் இவ்வருடம் புதிய வடி வம் பெற்றது. குகன் சாப்- வினோ தலிங்கம் இயக்கத்தின் தலைவராக் கப்பட்டார், சிவாஜிலிங்கம் பொதுக்காரியதரிசியாகி தம் கையில் பல அதிகாரங்களை எடுத்

→௫




''வெட்கத்தைத் தடை செய்'' -அஸ்வர் !

## அஸ்வர்: வெட்கத்துக்குத்தடை!

சுவாமி விவேகானந்தருக்கு ஒரு அற்புதமான சக்தி இருந்ததாகச் சொல்லப்படுகிறது. எந்தப் பெரிய புத்தகமானாலும் ஆங்காங்கே பக் கங்களை மேலால் தட்டிப் பார்த்து விட்டால் புத்தகத்திலுள்ள முழு விஷயத்தையும் அவர் கிரகித்து விடுவாராம். இந்தக் கதையின் உண் மைத்தன்மை அல்ல இப்போது நமது குறி. அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ் வர் அவர்களுக்கும் இத்தகைய ஒரு அதீத சக்தி சித்தித்துள்ளது என்று தோன்றுகிறது. தஸ்லிமா நஸ்ரினின் நாவலான லஜ்ஜாவை (வெட்கம்) அங்கு மிங்குமாக வாசித்துவிட்டு அதனைத் தடை செய்ய வேண்டுமெ னத் தீர்மானித்து விட்டார். அவருடைய மேலான வேண்டுகோளின் பெயரில் லஜ்ஜா அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டுவிட்டது. இவர்க ளுள் எத்தனை பேர் புத்தகத்தை வாசித்தார்கள் என்பது சொல்லாமலே தெரிந்ததுதான்.

தஸ்லிமாவின் லஜ்ஜா என்கிற நாவலில் இஸ்லாமையோ, இஸ்லாமிய ரையோ தாக்குகிற மாதிரி எந்த விஷயமுமில்லை. வேறுபல இஸ்லா மிய நாடுகளிலும் லஜ்ஜாவோ அல்லது தஸ்லிமாவுடைய ஏனைய

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# யார் இந்த மஜீத்?

அம்பாறை மாவட்டத்தில் ஐ.தே.க சார்பில் போட்டியிடுகிறார் அப்துல் மஜீத். 1989 இலும் ஐ.தே.க சார்பில் போட்டியிட்டு கணிசமான வாக்குகளை பெற்றவர் இவர். அஷ்ரஃப்பிற்கும் பிரேமதாசாவிற்கும் ஏற்பட்டிருந்த இரகசிய உடன்பாடு காரணமாக, ஐ.தே.க வாக்குகளும் அஷ்ரஃப்பிற்கு போகவே, இவருக்கு பாராளுமன்றம் செல்லப் போதியதாக வாக்குகள் கிட்டவில்லை என்று பேசப்பட்டது. ஆனால் இம்முறை அந்தப் பிரச்சினை இல்லை. அஷ்ரஃப் ஐ.தே.க. கூட்டு ஏற்படவில்லை.

ஆனால் யார் இந்த அப்துல் மஜீத்? இவர் இலங்கை தேசிய உளவுத்துறையில் (N.I.B) கடந்த மாதம்வரை உயர் அதிகாரியாகவும், மட்/அம்பாறை மாவட்டங்களுக்கான பொலீஸ் இணைப்பதிகாரியாகவும் இருந்தவர். சொந்த இடம் பொத்துவில். இப்போது தேர்தலை முன்னிட்டு N.I.B யிலிருந்து ஓய்வு (தற்காலிகமாக?) பெற்றுள்ளார். கடந்த 5 வருடங்களாக தேசிய உளவுத்துறை S.P. யாக வேலை பார்த்து வந்தார். இரண்டாம் ஈழப்போர் ஆரம்பமான பின்னர் மட்/அம்பாறை மாவட்டங்களுக்கு பொலீஸ் மேலதிகாரியாக S.S.P நியமிக்கப்பட்ட அதே வேளையில் இவ்விரு மாவட்டங்களிலும் ஐ.தே.கவை மறுசீரமைத்து பலப்படுத்தும் வேலையும் இவருக்குக் கொடுக்கப்பட்டது. மட்/அம்பாறை பிரதான ஐ.தே.க. ஒருங்கிணைப்பாளராக சென்ற மாதம் வரை பணியாற்றி வந்தார். இவ்வருடம் கிழக்கில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களில், குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் S.S.P மஜீத் ஐ.தே.கவின் வேலைகளில் தீவிர பங்காற்றினார். இதனாலேயே பொத்துவில் பிரதேச சபையை முஸ்லீம் காங்கிரசினால் கைப்பற்ற முடியாது போனது. அப்பிரதேச சபையை S.S.P அப்துல் மஜீதின் இளைய சகோதரரின் தலைமையிலான குழுவே கைப்பற்றிது.

ஆட்சிமாற்றம் வந்தால் மஜீத்தினுடைய பிரச்சினை தமக்கு எதிரான சிக்கலுக்கு வழிவகுத்து விடுமோ எனப் பயந்த N.I.B இன் தலைமைப்பீடம் இம்முறை அவர் போட்டியிடுமுன் அவரிடமிருந்து ஓய்வுக்கான ஆவணங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. இதுவும் ஒரு கண்துடைப்பு என்பது தற்போது அம்பலமாகி உள்ளது. ஏனெனில் ஜனாப் மஜீத் அவர்களிடம் தற்போது ஐ.தே.க தேர்தல் பிரச்சார வேலைகளை ஒட்டி கடமைபுரியும் சாரதி N.I.B இன் முழுநேர ஊழியராவார். ஆகவே மீண்டும் 1989 தேர்தலில் செய்த அதே வேலையைத்தான் தேசிய உளவுத்துறை செய்கிறது போல் தெரிகிறது. ஜனாப் மஜீத் அவர்கள் கடந்த காலத்தில் தேசிய உளவுத்துறையில் வகித்து வந்த பொறுப்பினை நோக்கும் போது இவர் தேர்தலில் நிற்பதனால் வடகிழக்குப் பிரச்சினையில் ஐ.தே.க விற்குச் சார்பாக காய் நகர்த்துவதற்கு வசதியாக இருக்கும் என்பது தெளிவு.

85-87 காலப்பகுதியில் தமிழகம் அதிலும் குறிப்பாகச் சென்னை ஈழ விடுதலை இயக்கங்களின் செயல்பாடுகளுக்கு மிக மையமாக இருந்தது. அனைத்துத் தமிழ்த் தலைமைகளும் அங்கேயே வலம் வந்தன. இதன் காரணமாக இலங்கை அரசு சென்னையிலிருந்து தனது உபதூதராலயத்தில் N.I.B பிரிவொன்றை அமைத்தது. அதன் ஊடாக அனைத்து இயக்கங்களுடனும் தொடர்பு ஏற்படுத்தவும் அவர்களது நடவடிக்கைகளை அவதானிக்கவும், தமிழ்கத்தில் தகவல் தரக்கூடியவர்களை (informers) பணங்கொடுத்து வாங்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டது. இதில் சென்னையின் இலங்கை தூதராலய N.I.B பிரிவு கணிசமான வெற்றியும் கண்டது எனலாம். இப்பிரிவிற்கு அந்நேரம் பொறுப்பாக இருந்தவர் ஜனாப் மஜீத் அவர்களே. அப்போது தூதரகத்தின் முதலாவது காரியதரிசி (First Secretary) என்ற பதவியில் இயங்கி வந்தார். பல இயக்கத் தலைவர்களையும், தமிழக நிருபர்கள், அரசியல்வாதிகள் போன்றோரையும் தெரிந்து வைத்திருந்தார்- பழகியும் வந்தார்.

# SOME ONE ELSE'S WAR

மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் (யாழ்ப்பாணம்) ஜனவரி 1989 இலிருந்து நவம்பர் 1993 வரை வெளியிட்ட பன்னிரண்டு அறிக்கைகளில் சுருக்கப்பட்ட வடிவம் ஒன்று இப்பொழுது ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.






ஆங்கிலத்தில் Someone Else's War என்று நூலுக்குத் தலைப்பிடப்பட்டுள்ளது. சாவித்திரி ஹென்ஸ்மன் அவர்களில் தொகுக்கப்பட்ட இந்நூல் இந்த வருடம் பெப்ரவரி மாதம் ராஜினி-றிச்சாட் நினைவுதினத்தையொட்டி 'யுக்திய' பத்திரிகை ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சிகளோடு இணையும் முகமாக வெளியிடப்பட்டது.

நூலின் சிங்கள மொழி பெயர்ப்பு 'தல் அரம்ப யட்ட' எனும் பெயரிலானது. இந்த இரண்டு நூல்களையும் இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் (MIRJE) வெளியிட்டுள்ளது. பிரதிகள் வேண்டுவோர் MIRJE, 4, ஜயரத்தின அவனியு, கொழும்பு -5 என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம். கொழும்பின் முக்கியமான எல்லாப் புத்தக நிலையங்களிலும் இந்த நூல்கள் கிடைக்கின்றன.

# அந்தரங்கத்தைத் தேடும் ஆமிச் சோதனை!

எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு, தமிழ்ப்பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் சோதனை நடவடிக்கைகள் என்பன பலப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள மன்னார் தீவுப்பகுதியிலிருந்து கப்பல், மற்றும் படகுகள் மூலமாக கற்பிட்டிக்குச் செல்லும் பிரயாணிகள் மீது மேற் கொள்ளப்படும் சோதனைகள் முக்கியமானவை.

தாழ்வுபாடு துறையில் கப்பல் அல்லது படகுகளில் ஏறுவதற்கு முன்னர் இராணுவத்தால் சோதனையிடப்படும் பயணிகளது உடமைகள், ஆடைகளில் உள்ள பிரத்தியேகப் பொருட்கள் என்பனவும் அக்குவேறு ஆணி வேறு அட்டை வேறு மட்டை வேறாக பிரித்துச் சோதனையிடப்படுகின்றன. அத்துடன் சோதனைகள் முடிவடைவதும் இல்லை. தனியறைக்குள் விடப்படும் பயணிகளின் ஆடைகள் எல்லாம் அகற்றப்பட்டு உள்ளாடைகளும் கழற்றப்பட்டு 'சோதனை பார்வையிடப்பட்ட' பின்னரே செல்ல அனுமதிக்கின்றார்கள். ஆண்கள் வேறாக பெண்கள் வேறாக மேற்கொள்ளப்படும் இந்த சோதனைகளில் இருந்து, வாடிக்கையான பயணிகள் அரச ஊழியர்கள், வர்த்தகர்கள் யாராயிருந்தாலும் தப்பிவிட முடிவதில்லை. நிர்வாண சோதனைக்கு ஆளாகியே தீர வேண்டும்.

இரண்டு வருடங்களுக்கு முன் பொலிசிடமிருந்து சோதனை நடவடிக்கைகளைப் பொறுப்பேற்ற இராணுவத்தினர் இந்த சோதனையின் மூலமாக எதனைக் கண்டுபிடிக்க முயல்கிறார்களோ என்று பயணிகள் ஒருவித அச்சம் கொண்டுள்ளார்கள்.

''மன்னாருக்குப் போவதும் போதும், இராணுவத்தின் சோதனையில் அனுபவிக்கும் வேதனையும் போதும்'' என கூறும் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மை வியாபாரிகள் பலர் "இனிமேல் அந்தப் பக்கம் தலைவைத்தும் படுப்பதில்லை'' என அடித்துக் கூறிச் சென்று விட்டார்கள்.

அரச அலுவல்கள் காரணமாகவும் அங்குள்ள தமது வீடுகளுக்கு விடுமுறை காரணமாகவும் சென்றுவரும் அரச ஊழியர்கள் ''அடிப்படை மனித உரிமைகளையே மீறும் வகையிலான இராணுவத்தினரின் இந்த அடாவடித்தன சோதனைகள் பற்றி யாரிடம் சொல்லி அழுவது? '' என்று ஆற்றாமையோடு வினவுகின்றார்கள்.

இது, ஆயுதங்கள் வெடிமருந்துகளைத் தேடும் ஆயுத சோதனையா அல்லது 'அந்தரங்கத்தைத் தேடும்' அட்டகாச வக்கிரச் சோதனையா?

# அதிகளவு குற்றங்கள்!

தேர்தல் திணைக்களத்தின் சட்ட விதிமுறைக்கு ஏற்ப ஏனைய பகுதிகளைப் போல் மட்டக்களப்பு மாவட்டத்திலும் ஏனைய கட்சிகள், குழுக்களுடைய, சுவரொட்டிகள் சின்னங்கள் யாவும் அகற்றப்பட்டு விட்டன.

இவ்விதிமுறைக்கு அமைய குறிப்பாக முஸ்லீம் காங்கிரஸின் சுவரொட்டிகளுக்கு தொடர்ச்சியாக திட்டமிட்டு தார் பூசப்பட்டுள்ள போதிலும் ஐ.தே.கவின் சுவரொட்டிகள் யாவும் அழகாக காட்சியளிக்கின்றன. 26.7.94ல் இங்கு நடைபெறவுள்ள ஜனாதிபதி கலந்து கொள்ளும் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தை ஒட்டி நகரமெங்கும் பச்சையாகவே காட்சி அளிக்கின்றன. ஜனாதிபதி பிரதமர் ஆகியோரின் மூவாண சுவரொட்டிகள் இரவோடு இரவாக ஒட்டப்பட்டன. இவற்றை ஒட்டிவிடாது அல்லது ஒட்டியவற்றை அகற்ற வேண்டிய படையினரே அவற்றுக்கு பாதுகாப்பு அளித்துள்ளார்கள் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒட்டுவதும், உரிப்பதும், சட்டம் போடுவதும் அதை மீறுவதும் ஐ.தே.கவினரும் அவர்களின் அரசாங்கமும் அதன் படைகளும் என்பது தேர்தல் ஆணையாளருக்கு நன்றாகவே தெரியும்.

ஆனாலும் என்ன செய்வது? சட்டம் மற்றவர்களுக்கு தானே.... அரசாங்கத்தவர்க்கு அல்லவே!

# எண்ணிக்கை இதுதான்!

ஐ.தே.கவின் 249 பேர் கொண்ட வேட்பாளர் பட்டியலில் 24 பேர் தமிழர்கள் இதில் 14 பேர் இ.தொ.காவைச் சேர்ந்தவர்கள். இதைவிட ஐ.தே.கவின் பட்டியலில் 29 பேர் முஸ்லீம்கள்.

பொது முன்னணியில் வேட்பாளர் பட்டியலில் 20 பேர் தமிழர். 14 பேர் முஸ்லீம்கள் போட்டியிடுகின்றனர்.

இக்கட்சிகளுக்கு தனிப்பட்ட கட்சி ரீதியான ஆதரவுகளை தெரிவிக்கும் தமிழ் முஸ்லீம் வேட்பாளர்கள் இதில் அடங்கார்.

# தேர்தலில் பெண் வேட்பாளர்கள்!

இம்முறை பொதுத்தேர்தலில் போட்டியிடும் 1440 வேட்பாளர்களில் பெண் வேட்பாளர்களாக 45பேர் மட்டுமே போட்டியிடுகின்றனர். இது மொத்த வேட்பாளர்கள் தொகையின் 3.12% வீதமாகும். அதிக பெண் வேட்பாளர்களைப் போட்டிக்கு நிறுத்தியுள்ள கட்சி ஸ்ரீ லங்கா முற்போக்கு முன்னணியாகும். இதில் மொத்தம் 15 பெண் வேட்பாளர்கள் அடங்குகின்றனர். அதிக பெண் வேட்பாளர்கள் போட்டியிடும் மாவட்டம் கொழும்பு. இங்கு மொத்தம் 9 பெண் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

249 பேரைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் 6 பெண் வேட்பாளர்களும் 249 வேட்பாளர்களைக் கொண்ட பொது முன்னணியின் பட்டியலில் 7 பெண் வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

தமிழ்ப் பெண் வேட்பாளர்களாக வன்னியில் ஐ.தே.கவின் பட்டியலில் இராஜமனோகரி புலேந்திரனும் கொழும்பில் குமார் பொன்னம்பலம் தலைமையிலான சுயேட்சைக்குழுவில் உள்ள திருமதி. சரோஜினி யோகேஸ்வரன் , திருமதி. ஜே.பரமலிங்கம் ஆகிய இருவரும், கொழும்பில் 'ரெலோ'வின் பட்டியலில் செல்லச்சாமி விமலேஸ்வரி என்பவரும் உட்பட மொத்தம் நான்கு பேர் போட்டியிடுகின்றனர். இவ்வெண்ணிக்கை மொத்த வேட்பாளர்களில் 0.27 வீதமும் மொத்த பெண் வேட்பாளர்களில் 8.9வீதமாகும்.

ஒரு முஸ்லீம் பெண் வேட்பாளரும் எவரது பட்டியலிலும் இல்லை.

மொத்தம் 113 பேரைக் கொண்ட தேசியப் பட்டியலில் இருவர் மட்டுமே பெண்கள். பொதுமுன்னணியின் பட்டியலில் சிறிமாவோ பண்டாரநாயக்காவும், நவசமசமாஜக் கட்சியின் பட்டியலில் ஜெயந்தி தந்தெனியவுமே அவ்விருவர்.

இவ்வெண்ணிக்கை தேசியப் பட்டியலின் மொத்த எண்ணிக்கையில் 1.76 வீதமாகும்.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எங்கெங்கு காணினும்.....



இலங்கைப் பெண்கள் ஏனைய தென்னாசிய நாட்டுப் பெண்களுடன் ஒப்பிடும் போது மிக முன்னேற்றமான நிலையில் உள்ளனர்; அவர்களது எழுத்தறிவு வீதம், சுகாதார நிலை போன்றவை மிகவும் உயர் நிலையில் உள்ளன என்றெல்லாம் அரசமட்டத்தில் கூறப்படுகிறது.

இது தவிர இலங்கைப் பெண்கள் உயர்நிலையில் உள்ளனர் என சமூகமட்டத்திலும் ஒரு பொதுவான கருத்தும் நிலவுகிறது.

தமிழர் மத்தியில் பெண் தெய்வ வழிபாடு, சீதனம் பெண் வழியாகத் தொடரும் முறை போன்றவற்றை எடுத்துக் காட்டி பெண்கள் உயர்நிலையில் உள்ளனர் எனக் கூறுகின்றனர் மரபுவாதிகள்.

தேசியக் குழுக்களோ தமது கொள்கைப் பிரகடனங்களில் பெண் சமத்துவத்தை ஒரு அம்சமாக சேர்த்துக் கொண்ட காலமும் எண்பதுகளின் ஆரம்பத்தில் நிலவியது.

தமது ஆயுதப் போராட்டத்தின் பயனாகத் தமிழ்ப் பெண்களின் வாழ்க்கை முறையே முற்றிலும் மாறிவிட்டது; அவர்களின் நிலையை உயர்த்தி விட்டோம் என விடுதலைப் புலிகள் உரிமை கோருகின்றனர்.

ஆனால் நடக்கப் போகும் பொதுத் தேர்தலில் பெண்களின் பங்கு என்ன? அரசியல் கொள்கை உருவாக்கல் மட்டத்தில் அவர்களின் பங்கேற்றல் எப்படி உள்ளது?

இம்முறை இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலில் மொத்தமாக 1440 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களில் 45பேரே பெண்கள். அதாவது சுமார் 2.75 வீதம். இந்தத் தேசிய வீதம் தமிழரிடையே இன்னும் குறைவு.

தமிழர் மத்தியில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழர் தேசிய ஒருங்கிணைப்பு முன்னணி ஆகியவையும், பல்வேறு சுயேச்சைக் குழுக்களும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன. ஆனால் கொழும்பில் போட்டியிடும் குமார் பொன்னம்பலம் தலைமையிலான சுயேச்சைக் குழுவில் இடம் பெறும் இரு பெண் வேட்பாளர்களையும், வன்னியில் ஐ.தே.க நிறுத்தியுள்ள ராஜ்மனோகரி புலேந்திரனையும் தவிர வேறு பெண்களை எவரும் பிரேரிக்கவில்லை.

எண்பதுகளில் ஈழப்பெண்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை ஈ.பி.ஆர்.எல்.எப். தமது முக்கிய கிளையாகக் கொண்டிருந்தது. பெண் விடுதலை பற்றி தழல்கக்கும் பிரசுரங்களையும் (செந்தணல்) வெளியிட்டது. 1986 பிற்பகுதியில் யாழ்ப்பாணம் பெருமாள் கோயில் முன்றலில் 'நெருப்புத்தினம்' நடாத்திப் பெண்கள் திரளைக் கொண்டு அராஜகத்திற்கு எதிராக போராட்டச் சபதம் செய்வித்தது. எனினும் புலிகள் ஈ.பி.ஆர்.எல்.எப் மீது போர் தொடுத்த போது தமது மனைவியரையும், காதலியரையும் தவிர ஏனையோரை நட்டாற்றில் விட்டுத் தலைமைப்பீடம் தப்பியோடியது. இலட்சிய வேகத்தில் தமது குடும்பத்திலிருந்து - விலகிப் போராட்டத்துடனும் கட்சியுடனும் தம்மை இணைத்துக் கொண்ட பெண்கள் அன்று எதிர்கொண்ட சமூகக் கேலியும், எதிர்ப்பும் தலைமைப்பீடங்கள் அறியாதவை. அறிந்தும் அலட்சியப்படுத்தியவை.

பின்னாளில் தம்மைப் பற்றிச் சுயவிமர்சனம் செய்த போதிலும் தமது பெண்கள் அணியினரை அநாதைகளாகவிட்டது குறித்து இவர்கள் வாயே திறக்கவில்லை.

இதேபோலத்தான் புளொட்டும், ஈரோஸும் ஏனைய குழுக்களும் பெண்களைப் பொறுத்தவரை இந்தக் குழுக்களினதும், கட்சிகளினதும் வரலாறு ஒன்றுதான். ஆட்பலம் காட்டமறியல் செய்ய, கூட்டத்திற்கு மக்களைக் கவர்ந்திழுக்க என்று பெண்களை இவர்கள் யாவரும் கருவிகளாகவே பயன்படுத்திய பொதுவரலாறு உண்டு.

தமிழர் விடுதலைக் கூட்டணி தனது சத்தியாக்கிரகங்களிலும், மறியற் போராட்டங்களிலும் பெண்களை அதிகமாகப் பயன்படுத்தியது. தமிழரசுக் கட்சித் தலைவர்கள் தமது மனைவியரையும், சகோதரிகளையும் கூட்டத்தில் பாடவும் பேசவும் வைத்தனர். மகளிர் அணி ஒன்றையும் அமைத்தனர். ஆனால் ஒரு போதுமே இவர்கள் பெண்களின் விசேட நலன்களைக் கருத்தில் கொள்ளவில்லை.

இதன் ஒரு வெளிப்பாடுதான் இந்தக் கட்சிகளும் குழுக்களும் பெண்கள் எவரையும் நடைபெறப்போகும் தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்தாமையாகும்.

ஆண் முதன்மையும் ஆண் தலைமைத்துவமும் கொடி கட்டிப்பறக்கும் இந்த அமைப்புகளிடமிருந்து பெண்கள் வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

அரசியல் கட்சிகள் பொதுத் தேர்தல் தொடர்பான கொள்கை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது கவனத்திற்கு எடுக்குமாறு வேண்டி 35 பெண்கள் அமைப்புகள் (இவற்றில் சில பொது அமைப்புகள்) கூட்டாகத் தயாரித்த 7 அம்சம் கொண்ட மகஜர் ஒன்றை சகல கட்சிகளுக்கும் அனுப்பி வைத்தன. ஆனால் இது வரை எவரும் தமது பிரசாரக் கூட்டங்களில் இந்த அம்சங்கள் பற்றிப் பேசவில்லை. நீலன் திருச்செல்வம் மாத்திரம் மட்டக்களப்பில் ஜூலை 10ம் திகதி நடந்த கூட்டத்தில் இடம் பெயர்ந்த பெண்களின் துயர் பற்றி ஒரு வசனம் கூறியிருந்தார். அவ்வளவுதான்!

மீண்டும் மீண்டும் நிகழும் இத்தகைய புறக்கணிப்புகள் பெண்கள் தமக்கெனச் சுயாதீனமான ஸ்தாபனங்களினூடாகப் போராடினாலன்றி அடிப்படையான, பெரிய கோரிக்கைகள் எதையும் அடைந்துவிட முடியாது என்பதையும், தலைமைத்துவத்தில் இடம் பெற முடியாது என்பதையும் காட்டுகின்றன.

**மல்லிகா சிவகடாட்சம்**



# தகுதிமிக்க வேட்பாளர்

மட்டக்களப்பு மாவட்டத் தேர்தலில் வழமைபோல் இம்முறையும் ஐ.தே.கவின் பணப்பரிசைப் பெற்ற இரண்டு சுயேச்சைக் குழுக்கள் தேர்தலில் போட்டியிடுகின்றன. இக்குழுக்களைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் லட்சக்கணக்கான ரூபாய்கள் விலையாகக் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இக்குழுக்களில் ஒரு குழுவின் தலைவரான கோபிதராசா என்பவர், இந்தியாவில் உள்ள நமது இளைஞர்களின் எதிர்காலத்தின் பெயராலேயே தான் தேர்தலில் நிற்பதாகவும் எம்பியாக வந்தால் உடனடியாக அவர்களை மீட்டு வந்து வாழ்வு கொடுப்பதாகவும் கூறி தேர்தல் பிரச்சாரத்தை மேற் கொள்கின்றார். இந்தியாவில் உள்ள நமது இளைஞர்களை மீட்டெடுக்கவுள்ளதாக கூறும் இவர்தான் ஈ.என்.டி.எல்.எப்பின் காளிதாஸ் ஆவர். மாகாணசபை உறுப்பினராகவும் பின்பு சிறிநிவாசனின் மெய்க்காப்பாளராகவும் இருந்தவர். பிற்பாடு, சிறிநிவாசனின் வாகனத்தையும் காசையும் திருடிய குற்றச்சாட்டின் பேரில் பொலிசாரால் தேடப்பட்டு கைது செய்யப்பட்டவர். இந்திய இராணுவத்தினருடன் சேர்ந்து அப்பாவி இளைஞர்களை பலாத்காரமாக பிடித்து தமிழ்த் தேசிய இராணுவத்தில் சேர்க்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டவர் என்ற குற்றச்சாட்டும் இவர் மீது உண்டு.

ஆக, தேர்தலில் நிற்பதற்காக சகல தகுதியையும் பெற்ற ஒரு நட்சத்திர வேட்பாளர் இவர் என்பதில் ஐயமில்லை! மட்டக்களப்பு மாவட்ட வாக்காளர்கள் இதனைக் கவனிப்பது நல்லது!

# த.வி.கூ வினுள் பாரபட்சம்

இம்முறை மட்டக்களப்பு மாவட்ட தேர்தலில் கூட்டணியினர் வெகு சாமர்த்தியமாக காய் நகர்த்தி வருவதாக தெரியவருகிறது. கூட்டணி என்ற அடிப்படையில் பரவலாக வாக்குகளைப் பெறும் வகையிலும் அதேவேளை குறிப்பாக ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் அதிக வாக்குகளைப் பெறும் அடிப்படையிலும் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதாகப் பெயர் குறிப்பிட விரும்பாத கூட்டணி பிரமுகர்கள் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஏனெனில் ஜோசப் அவர்களை விடவும் மட்டக்களப்பில் அதிக வாக்குகளைப் பெறக் கூடியவர்கள் எனக் கருதப்படும் கோபன் கந்தையா, அருளானந்த முதலி ஆகியோர் பட்டியலில் இருந்து விலக்கப்பட்டுள்ளனர். இதனால் கோபமடைந்த கோபன் கந்தையா அவர்கள் பொதுசன முன்னணிப் பட்டியலில் போட்டியிடுகின்றார். இவ்வாறு கடைசி நேரத்தில் முக்கியமான பலரின் பெயர்கள் நிராகரிக்கப்பட்டதற்கு பின்னணியில் வணபிதா ஜோசப்மேரி இவரின் சகோதரர் அல்போன்ஸ் மேரி ஜோசப் பரராஜசிங்கத்தின் மனைவி, சுகுணம் ஜோசப் ஆகியோர் விளங்குகின்றனர் எனவும் தெரியவருகிறது. கூடவே வாக்காளர் பட்டியல் தயாரிப்பின் போது பிரதேசவாதம், சாதி, சமய பேதங்களும் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. மேலும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான பட்டியல் தயாரிப்பின் போது 125,000 வாக்காளர் உள்ள மட்டக்களப்பு தொகுதிக்கு ஜோசப் பரராஜசிங்கத்தை மட்டுமே தெரிவு செய்த கூட்டணியினர் 45,000 வாக்காளர்களைக் கொண்ட கல்குடாத் தொகுதியிலிருந்து 4 வேட்பாளர்களையும் 65000 வாக்காளர்கள் உள்ள பட்டிருப்பு தொகுதியிலிருந்து 3 வேட்பாளர்களையும் பிரதிநிதிகளாக போட்டியில் நிறுத்தியுள்ளனர். இதுமட்டுமன்றி கூட்டணியில் போட்டியிடும் ஏனையவர்கள் பிரச்சாரம் செய்யும் போது தமக்கு முதலாவது விருப்பு வாக்கு எனக் கேட்கும் அதேவேளை பர்ராஜசிங்கம் அவர்கட்கு இரண்டாவது விருப்புவாக்கை அளிக்குமாறு கேட்கப்பட வேண்டும் எனக் கட்டளையிடப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இப்பாரபட்ச நடவடிக்கைகள் பலரையும் ஆத்திரப்பட வைத்துள்ளன. இதன் காரணமாக ஆரையம்பதி, பெரியகல்லாறு, வாழைச்சேனை, மட்டக்களப்பு நகரத்தின் ஒருபகுதி, களுதாவளை ஆகிய பகுதிகள் கூட்டணியினருக்கு எதிரான அலைவீசுவதையும் அவதானிக்க முடிகிறது.

# தமிழருக்கு வீடு கொடாதே!

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தமிழர்களுக்கெதிரான பொலிசாரின் அடாவடித்தனங்கள் இன்னமும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. ஆனால் தமிழர் பிரதிநிதிகள் என்று தங்களைத் தாங்களே அழைத்துக் கொண்டுள்ளவர்கள் சிங்களப் பேரினவாத அரசுகளின் கால்களில் மண்டியிட்டு கொண்டு எதிர்வரும் பாராளுமன்ற தேர்தல்களில் சீற் பிடிப்பதிலே மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

காலிவீதி, கொச்சிக்கடை, கொட்டாஞ்சேனை, மோதர போன்ற இடங்களில் செல்லும் போக்குவரத்து வாகனங்களை வழிமறித்து தமிழர்களை இனம் பிரித்து பிடிப்பதிலுமே பொலிசார் இன்னமும் மும்முரமாக இருக்கிறார்கள்.

வத்தளைப்பகுதியிலுள்ள பொலிசார் அங்குள்ள ஊர் முக்கிய பிரமுகர்களை அழைத்து இனிமேல் தமிழர்களுக்கு வத்தளைப்பகுதியில் வீடு வாடகைக்கு கொடுக்க வேண்டாம் என அறிவித்திருக்கிறார்கள். அதே நேரம் பொலிசில் பதியச் சென்ற பலரை பதிய முடியாதெனவும் துரத்தியுள்ளார்கள். கூட்டிச் சென்ற வீட்டு உரிமையாளர்களை எச்சரித்து விட்டுள்ளார்கள்.

அதேநேரம் இதையே ஒரு சாட்டாக வைத்து வத்தளைப்பகுதியிலுள்ள ஒரு சில வீட்டு உரிமையாளர்கள் வீட்டில் தங்கியிருப்போரை வலுக்கட்டாயமாக வெளியேற்றவும் முயற்சி செய்துள்ளார்கள்.

இதே போல் முகத்துவாரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி [illegible] வராக இருக்கிறார். பிடித்து வருபவர்களை விடுவிப்பதற்கு காசு வழங்கும் புரோக்கராக பொலிஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள ஒரு கொமினிக்கேசன் உரிமையாளருக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளாராம். அவரிடம் சில ஆயிரங்களைக் கொடுத்தால் இவர் கைது செய்து வைத்திருப்பவரை விடுவார்.

ஆயிரம் கொடுத்து எடுக்க முடியாதவர்களிடமும் பொலிஸ்நிலையத்தில் புதிதாக பதியச் செல்பவர்களிடமும் நண்டு, இறால், போத்தல்களுடனும் அடுத்தநாள் வரும்படி சொல்லி அனுப்பிவிடுகிறார்.

யாா யாரைப் பிடித்தால் நமக்கென்ன? எங்களுக்கு கதிரையும் பஜீரோவும் தேவையென்று புலிகளின் அடாவடித்தனங்களுக்குப் பயந்து கொழும்பில் வாழும் தமிழர்களின் வீடுகளைத் தேடிப் பிடித்து புள்ளடி போடும்படி கேட்டு தொலைத்துக் கொண்டிருக்கின்றன இந்தத் தமிழ்க் குழுக்கள்!

— எம்.மைதிலி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





சரிநிகர்
4.ஜெயரட்ன மாவத்தை
திம்பிரிகஸ்யாய
கொழும்பு -05
தொலைபேசி: 584380

## அதிகாரமும் கலையும்

ஜூலை மாதம் பன்னிரண்டாம் திகதி விடுதலைக்கலைஞர்கள் ஒன்றியம் ஒன்றை நிறுவுவது தொடர்பாக சிங்களக் கலைஞர்கள் ஒழுங்கு செய்திருந்த கூட்டத்தைக் குழப்ப முற்பட்டுத் தாக்குதல் நிகழ்த்திய ஐ.தே.கட்சியின் ரகசியக் 'குண்டர்'படை பற்றி எமது விசேட இதழில் சென்ற வாரம் எழுதியிருந்தோம்.

அரசின் சர்வாதிகாரத்தோடு ஒத்தோட மறுத்து எதிர்ப்புக் குரல்களாகச் சிங்களக் கலைஞர்கள் கிளம்புவது அண்மைக் காலங்களாக உக்கிரம் பெற்று வருவது கலையும் சர்வாதிகாரமும் என்ற, எல்லா மொழிக் கலைஞர்களுக்கும் பொதுவான ஒரு எரியும் பிரச்சினை பற்றி எங்களுடைய கவனத்தை இன்னுமொருமுறை குவியச் செய்கிறது.

முக்கியமான எல்லாச் சிங்களக் கலைஞர்களும் (திரைப்படக் கலைஞர் வசந்த ஒபேசேகரா, நாடகர் தர்மசிறி பண்டாரநாயக்கா, பாடகர்கள் நந்தாமாலினி, குணதாச கபுகே, எழுத்தாளர்கள் சுகதபால டி.சில்வா, சுனில் ஆரியரத்ன, பேராசிரியர் கார்லோ ஃபொன்செகா ஆகியோர் இவர்களில் சிலர்) அரசின் சர்வாதிகாரப் போக்கையும் சுதந்திரமான கலை வெளிப்பாட்டுக்கு ஊறு செய்யும் ஐ.தே.கவின் காடைத்தனமான அரசியலையும் மிகவும் துணிச்சலுடனும் பகிரங்கமாகவும் கண்டிக்கின்றனர்.

இத்தகைய காரணங்களுக்காகவும் கலை இலக்கிய வெளிப்பாட்டின் மீது அதிகாரத்தின் நிர்ப்பந்தங்களை எதிர்க்கவுமே விடுதலைக் கலைஞர்கள் ஒன்றியம் உருவாக்கப்பட்டுள்ளது

வரலாற்றில் எப்போதுமே இருவகையான கலைஞர்கள் இருந்து வந்துள்ளனர். ஒரு பிரிவினர் அதிகாரத்துக்கும், சர்வாதிகாரத்துக்கும் இணங்கிப் போய்த் தங்களுடைய கலைப் பிடிப்பையும், சுயகௌரவம், சுதந்திரம் என்ற தலைப்பிடிப்பையும் வீசி எறிந்து விட்டு அதிகாரத்தின் காலடிகள் கிளப்பும் தூசிப்படலத்தில் சுகங்காண்பவர்கள்.

எவ்விதமான விடுதலைப் பிரக்ஞையுமற்று "மாயக் காம உறுப்புகளை மாட்டிக் கொண்டு அவ்வுறுப்புகளை ஓயாமல் நம்மீது உரசிக் கொண்டிருக்கும் அற்பங்களான" இவர்கள் எப்போதுமே தாம் சார்ந்த அதிகாரத்தின் வண்ணமாகவே மாறி விடுபவர்கள்.

இன்னொரு பிரிவினர் விடுதலையையும், கலைஞர்களின் பேச்சு, எழுத்து, கலை வெளிப்பாட்டுச் சுதந்திரத்திலும் எழுத்தின்/ கலையின் உள் ஒளி தங்கியிருக்கிறது என்பதை உணர்ந்து அதிகாரத்தையும், அதிகாரத்தின் சர்வாதிகாரத்தையும் எதிர்ப்பவர்கள்.

கொழும்பில் மையங் கொண்டிருக்கும் தமிழில் எழுதும் எழுத்தாளர்கள், கலைஞர்கள், பத்திரிகையாளர்களில் தொண்ணூறு விதமானோர் அரசின் அதிகாரத்துக்கும், சர்வாதிகாரத்துக்கும் ஆலவட்டம் பிடிப்பவர்களாகவும் அடிவருடிகளாகவும் முதுகெலும்பற்றவர்களாகவும் உள்ளனர்.

அதிகாரத்துக்கும், சர்வாதிகாரத்துக்கும் எதிர்ப்புக் குரல்களைத் தான் தெரிவிக்க முடியாவிட்டாலும் குறைந்த பட்சம் ஒத்தோடிகளாக இருப்பதையாவது தவிர்த்துக் கொள்ளலாம். அதுவும் இல்லை.

தமக்குள்ளேயே பட்டங்கள் வழங்கிக் கொள்வதும், அதையொட்டிப் பரஸ்பரம் 'முதுகு சொறிந்து' கொள்வதற்காகப் பாராட்டுக் கூட்டங்கள் வைப்பதும் வெட்கம் கெட்டு அரசின் அமைச்சர்களையும் அதிகாரத்தின் சின்னங்களையும் துதிபாடுவதும் தான் இவர்களுடைய பணியாக உள்ளது.

எதிர்ப்புக் குரல் கொடுக்கும் சிங்களக் கலைஞர்களிடம் இருந்து பாடம் தான் படிக்காவிட்டாலும் அவர்களுடைய எதிர்ப்புக்கு உங்களுடைய ஆதரவையாவது வெளிக்காட்ட முடியாதா!

எதிர்ப்புணர்வு இல்லாத கலைஞர்கள் மண்ணாங்கட்டி மாதிரி என்பது எங்களைப் பொறுத்தவரை ஒரு சத்திய வசனம்!

## புலிகள் எல்லாம் தமிழர்கள் தமிழர்கள் எல்லாம் புலிகளல்ல!

ஜூன் 16ம் திகதி (இதழ் 49) அன்று வெளிவந்த சரிநிகர் இதழில் 5ம் பக்கத்தில் "மானைப்பிடித்து புலியிடம் கொடுத்த கதையா?" என்ற தலைப்பின் கீழ் தேவதாசன் தேவராஜ் என்பவர் எழுதியிருந்தார். அதில் குறிப்பிட்டிருந்த விடயம் என்னவென்றால் "ஒரே தாய் மொழியைக் கொண்ட தமிழினம் முஸ்லீம் இனத்திற்கு எதிராக செய்த மிலேச்சத்தனமான படுகொலைகளைப் போலவோ, அக்கிரமங்களைப் போலவோ வேற்றினமான சிங்கள இனம் இதுவரை காலமும் எதுவும் செய்யவில்லை என்பது தான் அது. "இது கசப்பான ஆனால் மறுக்கமுடியாத உண்மை" எனக் குறிப்பிட்டிருந்தார். உண்மையிலேயே புலிகள் வேறு தமிழினம் வேறு என்பதை அவர் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். புலிகள் யாரைத்தான் கொல்லவில்லை.

* சிங்கள மக்களை கொல்லவில்லையா? (அனுராதபுரம் படுகொலை)
* தமிழ் தலைவர்களை கொல்லவில்லையா? (அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், பத்மநாபா போன்றோர்)
* புத்திஜீவிகளை கொல்லவில்லையா? (யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி அதிபர், ராஜனி திரானகம, சபாலிங்கம் போன்றோர்)
* சகோதர இயக்க உறுப்பினர்களை கொல்லவில்லையா? (நூற்றுக்கணக்கான இளைஞர்கள்)
* ஏன் தமது இயக்க உறுப்பினர்களை கூட கொல்லவில்லையா? (மாத்தையா குழுவினர்)

எனவே இவர்களை புலிகள் தான் கொன்றார்கள் என்பதற்காக, அவர்களை எல்லாம் தமிழர்கள் தான் கொலை செய்தார்கள் என்று கூற முடியுமா?

இப்படியான வரட்டுத்தனமான போராட்ட சூழ்நிலையிலும் கூட தமிழ் மக்கள் புலிகளின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குகின்றார்கள் என்றால் இவ்வாதரவுக்கு மூன்று முக்கிய காரணங்களை கூறலாம்.

1. இலங்கை அரசு இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை முன்வைக்காமை.
2. போராட்டக்களத்தில் வேற்றியக்கங்கள் இல்லாமை
3. கணிசமான தமிழ் மக்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழ்கின்றமை.

எனவே ஒன்றை மட்டும் நீங்கள் தெளிவாக தெரிந்து கொள்ளுங்கள் புலிகள் வேறு தமிழர்கள் வேறு இது மட்டுமல்லாது புலிகள் எல்லாம் தமிழர்கள் அல்ல. தமிழர்கள் எல்லாம் புலிகளல்ல.

க.பிறிந்தநாத்




## இந்தியா எம்மைக் கைவிடவில்லை எம்மை நாமே கைவிட்டுள்ளோம்!

இந்தியாவும் தமிழ்த் தேசியப் பிரச்சினையும் என்ற டி.சிவராம் இன் தொடர் கட்டுரை எங்கே போகப் போகிறது என்பதையும் எங்கே நிற்கப் போகிறது என்பதையும் அவரது அறிமுகக் கட்டுரை தெளிவாக்குகிறது.

நான் ஒரு முழுநேர எழுத்தாளனோ அல்லது தேர்ச்சி வாய்ந்த ஒரு அரசியல் ஆய்வு எழுத்தாளனோ அல்ல. முரண்பாடானதும், தவறானதும், முட்டாள்தனமான கருத்துக்களை பரவ இடமளிக்கக் கூடாது என்றவகையிலும் எனது அபிப்பிராயங்களை எழுத முனைகிறேன். என்னால் தகுந்த வரலாற்று ஆதாரங்களை சமர்ப்பிக்க முடியாமல் போகலாம். ஆனால் யதார்த்தமான பார்வையிலும், தந்திரோபாய நோக்கிலும் சில விடயங்களை தெளிவு படுத்துகிறேன்.

பெரியார் சொன்னார், அண்ணா சொன்னார் என்ற அடிப்படையில் சுலோகங்களை கொட்டை எழுத்துக்களில் எழுதுவதால் அவை வலிமை பெற்று விட முடியாது. ஒரு மனிதனுக்குப் பின்னால் சில நபர்கள் அணிதிரள்கிறார்கள் என்பதற்காக அவர்கள் தலைவர்களாகவோ அல்லது அவர்கள் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவர்களாகவோ ஆகிவிட முடியாது.

பெரியாரின் திராவிட கோஷம் எவராலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. திராவிடம் என்பது திராவிட மொழியையும் அதன் கிளை மொழிகளையும் பேசுபவர்களையும் குறிக்கும். இந்தியர் என்பது இந்தியா வாழ் மக்கள் அனைவரையும் உள்ளடக்கும். இந்தியர் என்பது கற்பனையானால் எவ்வாறு திராவிடம் மாத்திரம் உண்மையாக இருக்க முடியும். பெரியாரின் திராவிடக் கோஷத்தினை மலையாளிகள், கன்னடர்கள், தெலுங்கர், ஏன் தமிழர்கள் கூட ஏற்றுக்கொள்ளவில்லை. மலையாளிகள், கன்னடர்கள், தெலுங்கர்கள், தமிழர்கள் அனைவரும் தமக்கென தனித்துவமான அம்சங்களை கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை திராவிடம் என்பது வெறும் கற்பனை ஆகும்.

தவறான நபர்களையும் தவறான கருத்துக்களையும் தனது கருத்துக்கு வலிமை சேர்க்கப் பாவிக்கும் டி.சிவராம் குறித்து அனுதாபப்படுகிறேன்.

பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியின் போது இந்தியர்கள் அனைவரும் தாம் இந்தியர்கள் என்ற அடிப்படையில் தான் எழுச்சி பெற்றனர். ஆனால் இவ்வெழுச்சியினை தவிர்க்க முயன்ற பிரிட்டிஷ் அரசு, ஆங்காங்கே இனரீதியான எழுச்சிகட்கு பின்னால் நின்றது. இதன் மூலம் இந்தியர் என்ற ஒற்றுமை தவிர்க்கப்படும் என்றும், இனங்களுக்கிடையில் மோதல்கள் ஏற்படும் என்றும் தொடர்ந்த பிரிட்டிஷ் ஆட்சி உறுதிப்படுத்தப்படும் என்றும் எதிர்பார்த்தது. ஆனால் இந்தியர் என்ற எழுச்சி அனைத்தையும் தவிடு பொடியாக்கியது. திராவிடம் பற்றி வாய்கிழியப் பேசிய பெரியார் வெள்ளைக்காரனின் புகழ் பாடி வலம் வந்ததும் அனைவரும் அறிவர்.

இந்தியா 'ஈழம்' என்ற முட்டையை அடைகாத்து அது பொரித்ததும் அதனை வல்லூறுகளில் இருந்து பாதுகாத்து வளர்த்து அதனை பின்னர் எங்களிடம் ஒப்படைக்கும் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது. அவ்வாறு எதிர்பார்ப்பவன் ஒரு பகுத்தறிவு உள்ள மனிதனாக இருக்க முடியாது. ஆனால் அதிர்ஷ்டவசமாக எவரும் அவ்வாறு எதிர்பார்க்கவில்லை. ஆனால் சில அதீத கற்பனாவாதிகள் மட்டும் மக்கள் அவ்வாறு நினைக்கிறார்கள் என்று கருதிக் கொண்டு தாம் மட்டும் மேதாவிகள் என்ற அடிப்படையில் தம்முடைய புத்தி ஜீவித்தன்மையை வெளிப்படுத்துகிறார்கள். இங்கு வலியுறுத்த விருப்பது என்னவென்றால் எந்த இனவிடுதலையும் அயல் நாடுகளின் தார்மீக ஆதரவு இன்றி சாத்தியப்படாது. எம்மைப் பொறுத்தவரை அயல் நாடு என்று உள்ளது இந்தியா மட்டுமே. இந்தியா ஊடாக நிச்சயமாக நாம் சில விடயங்களை வென்றெடுக்கலாம். மிகுதியை நாம் ராஜதந்திர ராணுவ போராட்டதினூடு வென்றெடுக்கலாம். எமது இந்திய எதிர்ப்பு இயக்கங்கள் அனைத்தும் இந்தியாவுடன் முரண்பட்டதிற்கு அடிப்படைக் காரணம் தம்மை இந்தியா முதன்மைப் படுத்தவில்லை என்ற ஒன்றே அன்றி வேறு எதுவும் காரணமாக இருக்க முடியாது. வரலாறு தெரிந்தவர்கள் எவரும் இதனை மறுக்க முடியாது.

இந்தியா இப்பொழுது தமிழ் மக்களைப் பற்றி கவலைப்படவில்லை என்று கவலைப்படும் கட்டுரையாளர் ஒன்றைப் புரிந்து கொள்ளவில்லை. இலங்கை அரசைப் போன்று இந்தியாவும் புலிகள் குறித்து அவதானமாக இருக்க வேண்டி உள்ளது.

ஒருபக்கத்தில் இந்தியா எம்மக்கள் பற்றி கவலைப்படவில்லை என்று குற்றம் சாட்டும் கட்டுரையாசிரியர், மறுபக்கத்தில் இந்திய மத்திய அரசே எமது போராட்டத்திற்கு முட்டுக்கட்டை என்றும் குற்றம் சாட்டுகிறார். அதிசயமான நிலைப்பாடு. இங்கு த.வி.கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் அவர்களின் கூற்று ஒன்றினை மேற்கோள் காட்ட விரும்புகிறேன். "இந்தியா எம்மை கைவிடவில்லை. எம்மை நாமே கைவிட்டுள்ளோம்."

வசிட்டன்
தெகிவளை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மட்டு: செஞ்சிலுவைச் சங்க விவகாரம்:

## என் மீதான தனிப்பட்ட தாக்குதலே! -தலைவர்

தங்கள் பத்திரிகையின் 16.06.1994 இல் வெளியிடப்பட்ட இதழில் ''மட்டு.செஞ்சிலுவைச் சங்கம் தகிடுதத்தங்கள் அம்பலத்தில்'' என்னும் தலைப்பில் வெளியான செய்தி பற்றிப் பின்வரும் விபரங்களைத் தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மேற்படி செய்தியில் குறிப்பிட்டுள்ள 'தலைவர் ஞானப்பிரகாசம்' என்பவர் நானே. ஏறத்தாழ கடந்த 35 ஆண்டுகளாக, குறிப்பாக ஏழைகளுக்கு மருத்துவ சேவையை மேற்கொண்டு வரும் வைத்திய கலாநிதியாகிய நான் ஒரு சமாதான நீதவான் என்பதையும், மட்டுநகர் மாநகரசபையின் உதவி மேயர், றோட்டறிக் கழகத் தலைவர் போன்ற பல பொறுப்புள்ள பதவிகளையும் வகித்தவன் என்பதையும் அறியத் தருகின்றேன். இவ்வாறா



கப் பொது மக்களிடையே நல்லாபிமானம் பெற்றுள்ள என்னைப்பற்றி தங்கள் பத்திரிகையில் ஆதாரபூர்வமற்றதும், பொய்யானதுமான தீகவல்கள் பிரசுரிக்கப்பட்டது எனது நற்பெயருக்கும், சுய கௌரவத்துக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாய் உள்ளது. தனிப்பட்ட குரோதம் காரணமாக, எனது நற் பெயருக்குக் களங்கம் விளைவிக்க வேண்டி அனுப்பப்பட்ட விஷமத்தனமான விபரங்கள் என்பதனைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

பிரச்சினைகள் உச்சக் கட்டத்தில் இருந்த காலப்பகுதியில், பலத்த சிரமங்களுக்கு மத்தியில் செஞ்சிலுவைச் சங்கக் கிளையொன்றை மட்டக்களப்பில் நிறுவுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சியில் எனக்கும் ஒரு முக்கிய பங்கு இருந்தது என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இதன் காரணமாகவே சங்கத்தின் தலைமைப் பொறுப்பு என்னிடம் கையளிக்கப்பட்டது. பிரச்சினைக்குரிய காலப்பகுதியில் நான் ஆற்றிய சேவைகளை யாவரும் அறிந்திருந்தபடியினாலேயே, நான் மீண்டும் போட்டியின்றித் தலைவராக் கப்பட்டேன். எனவே என்னைப் பற்றியும், சங்கத்தைப் பற்றியும் தங்கள் பத்திரிகையில் வெளியாகியிருந்த விடயங்கள் பற்றிய உண்மை நிலைமையை தங்களுக்கு அறியத் தருகின்றேன். நடுநிலை நின்று, எனது மறுப்பினைத் தங்கள் பத்திரிகையில் வெளியிட்டு, பத்திரிகாதர்மத்தைப் பாதுகாப்பீர்கள் என நம்புகின்றேன்.

1. ''அண்மையில் ஜேர்மன் அரசாங்கம் 12 இலட்சம் ரூபாயை மட்டு.செஞ்சிலுவைச் சங்கக் கிளைக்கு நன்கொடையாகக் கொடுத்திருந்தது'' என்ற பொய்யான தகவலுடன் செய்தி ஆரம்பித்திருந்தது.

அண்மையில் அல்ல, ஏறத்தாழ ஒரு வருடத்துக்கு முன்னர், அதாவது 09.06.93 அன்று அகதிகளுக்கு வழங்குவதற்காக 10 இலட்சம் ரூபாவை ஜேர்மன் அரசாங்கம் வழங்கியிருந்தது. இப்பணம் திட்டமிடல் அதிகாரி திரு.சா.ஜெயராம் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அகதிகளை மீளக் குடியமர்த்துவதற்காகச் செலவிடப்பட்டது. இதன் போது பொலநறுவையில் இருந்த 175 குடும்பங்கள் ஓட்டமாவடியிலும், 118 குடும்பங்கள் வாழைச்சேனையிலும் பேத்தாழையிலும் மீளக் குடியமர்த்தப்பட்டன. இவ்வகதிகள் தமது இருப்பிடங்களை அமைத்துக் கொள்ளவும் தேவையான பொருட்களை வாங்கிக் கொள்வதற்காகவும் ஓட்டமாவடி உதவி அரசாங்க அதிபருக்கூடாகவும், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கக் கிளையினூடாகவும் இப் பணம் வழங்கப்பட்டது. இப்பணத்தில் ஒரு பகுதி ஏறாவூர், மண்டூர் ஆகிய இடங்களில் இருந்த அகதிகளுக்குப் பொருட்களை வழங்கச் செலவிடப்பட்டது. இவற்றுக்கான கணக்கறிக்கைகள் யாவும் சங்கத்தின் செயற்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன், கணக்கறிக்கைகள் யாவும் புனர்வாழ்வு அமைச்சுக்கும். மட்டக்களப்பு அரச அதிபருக்கும் வழங்கப்பட்டன. பணம் செலவிடப்பட்ட முழு விபரமும் மேற்படி அதிகாரிகளிடத்திலும் சங்கக் கிளையிலும் உள்ளன.

2. ''ஓட்டமாவடி பிரதேச செயலகத்திற்கு ஐந்து லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டிருக்கிறது. யாருடனும் கலந்தாலோசிக்காமல் முடிவு எடுத்து தலைவர் ஞானப்பிரகாசமே காசோலையை எழுதியிருந்ததனால் பொருளாளர் கையொப்பமிடத் தயங்கியிருக்கிறார்'' என்ற தகவல் அடுத்து வெளியாகியுள்ளது.

தனிப்பட்ட முறையில் நான் காசோலைகள் எழுதியதில்லை. நிர்வாக உத்தியோகத்தரே காசோலைகளை எழுதுவதுண்டு. அதில் தலைவராகிய நானும், பொருளாளரான வசந்தராசாவும் தற்போதைய (பாபு மாஸ்டர்) இ.செ.செ.தலைவர் கையொப்பங்களை இடுவதுண்டு. பொருளாளர் சமூகம் கொடுக்காத பட்சத்தில் செயலாளர் கையொப்பம் இடுவார். மேற்படி விடயம் சம்பந்தமான பெருந்தொகையான காசோலைகளில் பொருளாளரான திரு.வசந்தராசா அவர்களே கையொப்பம் இட்டிருந்தார் என்பதை அவர் மறுக்கமுடியாது.

இதுபற்றிய கணக்கறிக்கைகளை செயற்குழுக் கூட்டங்களில் சமர்பித்த பொழுதெல்லாம் இது பற்றி அவர் எந்த விதமான கருத்தையும் தெரிவிக்கவில்லை என்பதையும் அவர் உட்பட செயற்குழு அங்கத்தவர்கள் அனைவரினதும் சம்மதத்துடனேயே மேற்படி பணம் செலவழிக்கப்பட்டதென்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

3. ''1990ம் ஆண்டு பிரச்சினைகள் உச்சக் கட்டத்தில் இருந்த போது மக்களுக்கு இலவசமாகக் கொடுப்பதற்காக ரூபா 15 இலட்சம் பெறுமதியான துணி வகைகள் சங்கத்துக்கு வழங்கப்பட்டது. ஆனால் கடந்த மாதம் வரை இத் துணிகள் எவருக்கும் கொடுக்கப்படாமல் வைக்கப்பட்டிருந்தது.'' என்ற தகவல் ஒரு அப்பட்டமான பொய்யாகும்.

1990ம் ஆண்டு மிகவும் சொற்ப அளவான துணி வகைகளே எமக்குக் கிடைத்தது. இத் துணி வகைகள் அனைவரும் அறிய பாடசாலைகளில் தஞ்சம் அடைந்திருந்த அகதிகளுக்கு வழங்கப்பட்டது. வந்து சேர்ந்த துணிகளே சொற்பமாக இருந்த போது ரூபா 3 இலட்சம் பெறுமதியான துணி வகைகள் எவருக்கும் தெரியாமல் புதைத்து வைத்திருப்பதாகத் தெரிவித்திருப்பது விஷமத்தனமானதும், வேண்டுமென்றே சோடிக்கப்பட்டதுமான ஒரு செய்தியாகும்.

4. ''அண்மையில் ஒரு நாள் திட்டமிட்டபடி பின்தங்கிய பகுதிக்குச் செல்ல வேண்டிய அம்புலன்ஸ் அவசரமான சில பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வாகனம் கொழும்புக்குச் செல்வதாகக் கூறப்பட்டது. அது தலைவரின் தனிப்பட்ட தேவைக்காகவே சென்றிருக்கிறது. சாரதி மாத்திரமே வாகனத்தைக் கொழும்புக் கொண்டு சென்றுள்ளார்'' என்ற அடுத்த தகவல் மற்றுமொரு அப்பட்டமான பொய்யாகும்.

குறிப்பிட்ட தினத்தில் வாகனங்களுக்குத் தேவையான சில உதிரிப் பாகங்களை கொள்வனவு செய்வதற்காக அம்புலன்ஸ் வண்டி கொழும்பு சென்ற போது, சாரதியுடன் சங்கத்தின் கணக்காளர் திரு. நல்லையா அவர்களும் கூடவே சென்றார். கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்கான பற்றுச் சீட்டுகளும் பொருட்களும் சங்கத்தில் உள்ளன. மேலும் கணக்காளர் சங்கத்தின் தலைமை அலுவலகத்திற்கும் சென்று முக்கிய விடயங்களைப் பார்த்திருக்கிறார். இவர்கள் இருவருமே அம்புலன்ஸ் வண்டியில் சென்றதற்கான ஆதாரம் நிறம்புவ பொலிசாரிடமும் உள்ளது. அம்புலன்ஸ் வண்டி கொழும்புக்கு அனுப்பப்பட்ட தினத்தில் நடமாடும் வைத்திய சாலைக்கு சொந்தமான மற்றுமொரு வாகனமான ''பிக் அப்'' பயன்படுத்தப்பட்டதால் நடமாடும் வைத்திய சேவை நடைபெறவில்லை எனக் குறிப்பிட்டிருப்பதுவும் பிழையானதொரு தகவலேயாகும். எனக்கும் இரு வாகனங்கள் சொந்தமாக உண்டு. இவ்விரு வாகனங்களும் எவ்வித பண உதவியும் சங்கத்திடமிருந்து பெறப்படாமல் அடிக்கடி சங்கத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தன என்பதையும் இங்கு கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

**ஞானப்பிரகாசம் (ஜே.பி)**
**மட்டக்களப்பு**

## ஏன் இந்த பாரபட்சம்?

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படுகின்ற உயர்தரத்திலுள்ள பாடசாலைகளில் ஒன்று புனிதமிக்கேல் கல்லூரி ஆகும். இப்பாடசாலை கடந்த மாதம் தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. இது ஒரு மகிழ்ச்சிக்குரிய விடயம். இதேவேளை இப்பாடசாலையில் காணப்படுகின்ற மதசார்பான வேற்றுமைகள் மிகவும் வருந்தத்தக்கவை.

இப்பாடசாலையானது கிறிஸ்தவ பாதிரியார்களால் தாபிக்கப்பட்டது. இருப்பினும் இப்போது அரசாங்கமும் இந்தப் பாடசாலைக்கு உதவி கொடுக்கிறது. இப்பாடசாலையில் கல்விகற்கின்ற மாணவர்களில் 40%மானோரே கிறிஸ்தவர்கள். ஆசிரியர்களும் இவ்வாறே. குறைந்த வீதத்தில் கிறிஸ்தவர்கள் காணப்படுகின்ற நிலையிலும் காலை வழிபாட்டு முறையில் பல வேற்றுமைகள் நிகழ்கின்றன.

இங்குள்ள கிறிஸ்தவ மாணவர்கள் தமது வழிபாட்டிற்காக ஒன்று கூடலிற்காகப் பயன்படுத்தப்படுகின்ற ஒலி பெருக்கியைக் கொண்டு, நீண்ட ஒரு மண்டபத்தினுள் மிகவும் சிறந்த முறையில் ஜபம் நடத்துகின்றனர். ஆனால் அதிக வீதத்தில் காணப்படுகின்ற ஏனைய மதமானவர்களோ, காகம் எச்சில் இடும் மரத்தின் கீழும், வெய்யிலும் நின்று கொண்டு ஒலிபெருக்கியிலிருந்து வரும் ஜெபச்சத்தம் செவியைப்பிளக்க, தங்கள் கடவுளை நினைக்க முடியாத நிலையில் இறைவணக்கம் செலுத்துகின்றனர். இது ஒரு ''மதக்கொடுமை'' என்பதை விட இதற்கு வேறு பெயரில்லை.

இவை மட்டுமல்ல, கடந்த இருமாதத்திற்கு முன் பாடசாலையில் கல்விகற்றுக் கொண்டிருந்த உயர்தர கணித, விஞ்ஞான மாணவர்கள் அனைவரும் அழைக்கப்பட்டனர். ஏன் என்று வினாவியபோது, இந்தியாவிலிருந்து ஓர் ''இரசாயனவியல் விரிவுரையாளர்'' ஒருவர் வந்துள்ளாராம். அவர் இரசாயனவியல் கருத்தரங்கு ஒன்றை நிகழ்த்துவாராம் என்று கூறப்பட்டது. மாணவர்கள் அனைவரும் சந்தோஷத்துடன் குறிப்புகள் எடுப்பதற்காக கொப்பிகளுடன் மண்டபத்தை நிறைத்தனர். பல ஆசிரியர்களும் நின்றனர். பின்னர் பாடசாலை அதிபர் விரிவுரையாளரை அறிமுகப்படுத்தினார், ''இவர் இந்தியாவிலிருந்து வந்துள்ளார்; இவர் ஓர் இரசாயனவியல் விரிவுரையாளர் இப்பொழுது இவர் உங்களிற்கு கருத்தரங்கு ஒன்றை நிகழ்த்தவுள்ளார்'' என்று கூறினார். பின் அவர் தமது கருத்தரங்கை ஆரம்பித்தார் அது மாணவர்களுக்கு படு ஏமாற்றத்தையே தந்தது. ஏனெனில் அவர் நிகழ்த்திய கருத்தரங்கிற்கும் இரசாயனவியலிற்கும் சம்பந்தமே கிடையாது. அவர் நடத்திய கருத்தரங்கோ ''கிறிஸ்தவத்தையும் யேசு நாதரையும்'' பற்றியது. அங்கு வந்திருந்த பிற மதமாணவர்களுக்கு எழுந்து செல்ல முடியாத நிலை. ஏனெனில் அதிபர் எதிரில் இருக்கிறார் என்ற பயம். இக்கருத்தரங்கு மூன்று மணித்தியாலங்கள் நீடித்தது. மாணவர்களின் பொன்னான நேரம் இச்செயலால் வீணடிக்கப்பட்டதுடன் மாணவர்களும் ஏமாற்றப்பட்டனர்.

இவ்வாறான மதசார்பான செயல்கள் இப்பாடசாலையில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதைத் தட்டிக் கேட்பதற்கு யாரும் இல்லையா? இங்கு உள்ள ஏனைய மத ஆசிரியர்கள் முதுகெலும்பு அற்றவர்களா? ஏன் இதைப்பற்றி பாடசாலைக் கூட்டங்களில் பேசக்கூடாது? இவ்விடயம் தொடர்பாக கல்வித்திணைக்களம் அக்கறை காட்டி, ஏனைய மதமாணவர்களையும் இறைவனை முழுமனதோடு வழிபடும் நிலைமையை உருவாக்கி, இந்நிலையை மாற்ற உதவ வேண்டும்.

**எஸ்.நிமல்ராஜ்**
**மட்டக்களப்பு**

## ஏன் தான் இப்படியோ?

தங்கள் பத்திரிகையில் மூலை முடுக்குகளில் நடைபெறும் அராஜகங்கள் அனைத்தும் பிரசுரிக்கப்படுகின்றன. எனது நண்பர் ஒருவர் கொழும்பில் இருந்து யாழ் வந்துள்ளார். யாழ் மருத்துவபீடத்துக்கு இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் தான் கொழும்பில் பலத்த றாக்கிங் தொல்லையை அனுபவித்ததாக கூறியிருந்தார். கொழும்பில் 'Current Shot' என்ற ஓர் புதிய றாக்கிங் தொல்லையும் தொடங்கியிருக்கிறதாம். இந்த 'Current Shot' இனால் அனுபவிக்கும் வேதனையை அவர் இராணுவத்தின் தடுப்பு முகாம்களிலும் த.வி.புலிகளின் சித்திரவதை முகாம்களிலும் அனுபவிக்கும் வேதனை போன்றது என குறிப்பிட்டிருந்தார். இதனை பெரும்பாலும் மொறட்டுவ, பேராதனை பல்கலைக்கழக கணித மாணவர்களே நடாத்துகின்றனர். இம்முறை பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் யாழ்ப்பாணத்திலும் வந்து அட்டகாசம் புரிந்து விட்டு சென்றுள்ளார்கள். அராலியை சேர்ந்த ஒரு மாணவனுக்கு சிறுநீரக வாசலில் நெருப்பை கொழுத்தி பிடித்ததாகவும் பின்பு அவரை கிணற்றுக்குள் தள்ளக் கொண்டு போனதாகவும் த.வி.பு.வினால் ஏதாவது பிரச்சினை வரும் என்ற பயத்தினால் கொழும்பு வா கவனிக்கிறோம் என்று விட்டு விட்டு போய் விட்டார்களாம்.

இவ்வாறான செயல்களில் கூடுதலாக மொறட்டுவ பேராதனை பல்கலைக்கழக மாணவர்களே ஈடுபடுகின்றனர். அதிலும் கூடுதலாக தமிழ் மாணவர்களே ஈடுபடுகின்றனர். ஏற்கனவே அரசினால் கொழும்பில் தமிழனுக்கு நடைபெறும் அவலங்களை தாங்கள் அறிவீர்கள். இந்த நிலையிலும் கூட இவர்கள் ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறார்களோ தெரியவில்லை?

**சி.வாஜினி**
**யாழ்ப்பாணம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## எல்லைத் தமிழினி

### யாழ் பல்கலைக்கழகமும் வேளாண்குடி மரபுப் பேராசிரியரும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டுப் பதினெட்டு வருடங்களாகின்றன. இந்தப் பதினெட்டு வருட காலத்தில் சிறப்பு மிக்க அறிஞர்களையும் கலைஞர்களையும் கல்விமான்களையும் அது உருவாக்கியிருக்கிறது. சந்தேக மில்லை.

யாழ்ப்பாணத்தின் மிகப் பெரிய TUTORY என்று ஒரு காலத்தில் வர்ணிக்கப்பட்டது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இப்போது இப்பல்கலைக்கழகத்தை அப்படிக் குறைத்து மதிப்பிடுவது அபசாரம்!!

என்றாலும் யாழ்ப்பாணத்துச் சமூகத்தின் ஆணிவேரில் காணப்படும் அடிப்படைப் பலவீனமான சாதி உணர்வு இன்றுவரையில் பல்கலைக்கழகத்தின் நியமனங்கள் போன்ற விஷயங்களில் தூக்கலாகத் தெரிகிறது.

அண்மையில் தெரியவந்த உதாரணம்:
பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதியைத் தெரிவு செய்வதற்காக நடந்த தேர்தலில் இரண்டு பேராசிரியர்கள் போட்டி போட்டுக் கொண்டார்கள். ஒரு பேராசிரியர் ''இருகுலமும் துய்ய வந்த' உயர் வேளாண்குடி மரபின் கொழுந்து அந்தப் 'பெருமை'யிலும் திமிரிலும் மற்றப் பேராசிரியரின் சாதியை இழுத்து மாபெரும் பிரசாரம் செய்து வெற்றி பெற்றிருக்கிறார் என்று தகவல்.

வாழ்த்துத் தெரிவிக்க விரும்புபவர்கள் பின்வரும் விலாசத்துக்கு வாழ்த்து மடல்களை அனுப்பலாம்:
கலைப்பீடாதிபதி, யாழ் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

### யாழ் பல்கலைக்கழகம்: இன்னமும் கதவடைப்பு!

சைவமும் தமிழும் கொடிகட்டிப் பறக்கும் யாழ்ப்பாணத் திருநெல்வேலித் திருத் தலத்தின் யாழ்பல்கலைக்கழகம் பற்றி இன்னுமொரு கதை. இந்தக் கதை கண்ட இடம் கைலாயம்.
காலத்துக்குக் காலம் அபூர்வமான திட்டங்களை நடைமுறைப் படுத்துவது இப் பல்கலைக்கழகப் பாரம்பரியம். உதாரணமாக ஒருமுறை பட்டமளிப்பு விழா விருந்தில் 'சைவ போஜனமே' பரிமாறப்பட வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

ஏனென்றால் வளாக வளவுள் இருக்கும் கோவில் களங்கப்படக் கூடாது பாருங்கள்!
இப்போது சைவ போஜனமா அசைவ போஜனமா அங்கு வழங்கப்படுகிறது என்பது தெரியாது. எனினும் இந்தச் சம்பவத்தைக் குறிப்பிடுவதற்கான காரணம், யாழ் பல்கலை கழகத்துள் எப்போதுமே உயர்சாதி/ சைவக் கருத்தியலுக்கும் அதனை எதிர்ப்பவர்களுக்குமிடையேயான ஒரு கயிறிழுப்பு நடந்து வந்திருக்கிறது என்பதைச் சுட்டத்தான்.

தமிழ்த் தேசியவாதப் போராட்டமே கிறித்தவத் திருச்சபையின் ஒரு சதி என்று இன்றைக்கும் சொல்லிக் கொண்டிருப்பவர்கள் பல்கலைக்கழக உயர்மட்டங்களில் இருக்கிறார்கள் என்பது வேறு கதை!
இப்படிக் கொத்த இந்தப் பல்கலைக்கழகத்தில் புறநிலை அலகுகள் கற்கை நெறி ஒன்று ஆரம்பமாயிற்று. (Extra Mural Studies). அதாகப்பட்டது யாதெனில் முறைப்படி கல்வியைத் தொடர வாய்ப்பற்றுப் போனவர்களுக்கு பல்கலைக்கழக மட்டத்தில் சில கற்கை நெறிகளை வழங்குவது என்பதாம். இஃது நல்ல காரியம் என்பதில் யாபேருக்கும் இரண்டாங் கருத்தொன்றில்லை.

இந்தக் கற்கை நெறிக்குப் பல்கலைக்கழகத்து விரிவுரையாளர்கள் தவிர, வேறு பல அனுபவம் வாய்ந்த எழுத்தாளர்கள், தொழிற்சங்க அனுபவம் வாய்க்கப் பெற்றவர்கள் அதிதி விரிவுரையாளர்களாக அழைக்கப்படுவது வழக்கம்.
உதாரணமாகப் பத்திரிகைத்துறை பற்றிய கற்கை நெறிக்கான அதிதி விரிவுரையாளராக டொமினிக் ஜீவாவும் அழைக்கப்பட்டிருந்தார்.

பல்கலைக்கழக உயர்மட்டத்தவர்கள் சிலருக்கும் பேராசிரியர் சிலருக்கும் இந்தப் புறநிலை அலகுகளூடாக, 'பிறத்தியான், கண்டவன், நிண்டவன்'' எல்லாம் வருவது பற்றிக் கோபமான கோபம்.

புதிய பீடாதிபதியின் தெரிவுடன். புதிய அலகுகள் கற்கை நெறி புதைகுழிக்குத்தான் போகப் போகிறதோ என்று அங்கலாய்க்கிறார் மாணவர் ஒருவர்! (இந்த மாணவர் 1973 ஆம் ஆண்டு தான் முதன் முதலாக மாவிட்டபுரம் ஸ்கந்தஸ்வாமி கோவிலுக்குள் போய் வந்தவர் என்பது இங்கு இடைப்பிறவரல்!)

### தமிழர்களுடைய பாரம்பரிய உடை எது?

கேள்வி: தமிழர்களுடைய பாரம்பரிய உடை எது?
பதில்: பெண்களுக்குச் சேலை.
கேள்வி பதிலே சிக்கலான ஒன்று. ஏனென்றால் சங்கத் தமிழரின் உடை பற்றி எனக் கொன்றும் தெரியாது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துத் தமிழ்த் துறையிலும் தமிழ் பேணும் துறைகளிலும் தமிழ் பேணாத வேறுபல துறைகளிலும் அடிக்கடி இந்த Dress Code அமுலுக்கு வருவது வழக்கம். அண்மையில் புதிதாகத் தமிழ் கற்பிக்க வந்த அதிதி விரிவுரையாளரான அம்மணி ஒருவர் எல்லா மாணவிகளும் கட்டாயம் சேலை அணிந்தே வரவேண்டும் என்று சொல்லிவிட்டார்.

நல்லகாலம். யப்பானிய உடையான கிமோனா அணிந்து வர வேண்டும் என்று அவர் உத்தரவிடாததையிட்டு மாணவிகள் நிம்மதியடைந்தார்கள்!

சேலை தமிழர்களின் பாரம்பரியத்திலிருந்து அல்ல பார்சி நாகரிகத்திலிருந்தே எமக்கு வந்தது என்பது ஒருபுறமிருக்க ஏன் பெண்களுக்கு மட்டும்தான் இந்த உத்தரவு? ஆண்கள் விரும்பிய எந்த உடையும் அணியலாம். பெண்கள்தான் ''கலாசாரத்தின்'' காவிகளோ?

மிக விரைவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் ஆட்சியாளர்களும் ''தேசிய உடை'' என ஒன்றைப் பிரகடனம் செய்துவிட்டால் பிரச்சினை தீர்ந்து விடும்.

### புலிகளின் ஒளிவீச்சு

தமிழீழ விடுதலைப் புலிகளின் வீடியோ வெளியீடுகள் ஒளிவீச்சு என்ற பெயரில் செய்திச் சஞ்சிகைகளாகத் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. இதுவரை 9 ஒளிவீச்சுக்கள் வெளிவந்துள்ளதாகத் தகவல்.

இந்தச் செய்திச் சஞ்சிகையில் - எல்லாச் செய்தியறிக்கைகளையும் போலவே ஒரு ஆணும் பெண்ணும் செய்தி வாசிக்கிறார்கள். பெண் சேலை கட்டியிருக்கிறார். ஆண் போட்டிருக்கும் சட்டை ரூபவாஹினியில் செய்தி வாசிப்பவர்கள் போட்டிருந்த அதே வகையான சட்டை. அதற்கு குர்தா, ஜிப்பா, சுப்பா, மப்பா என்று வேறு ஏதாவது வட இந்தியப் பெயர்கள் இருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. தெரிந்தவர்கள் எழுதி அனுப்பவும். தேசியவாதமும் உடையும் (Dress and Nationalism) என்ற தலைப்பில் பட்ட மேற்படிப்புக்காக வாசித்துக் கொண்டிருக்கும் போர்த்துக்கேய நண்பர் ஒருவருக்கு இந்தத் தகவல்கள் தேவைப்படுகின்றன.

### சிவாவின் இரகசியம்

கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் அவர்கள் புளொட் சித்தார்த்தனுடைய அறிக்கையொன்றுக்கு பதிலளிக்குமாறு வெளியிட்ட அறிக்கையில் ஒரு தகவலை வெளியிட்டிருந்தார். நாம் ஈழம் பெறுவது எப்படி என்று எமது மனதில் தெளிவாக இருந்தது. இந்த வழியில் செல்லவிடாமல் திசை திருப்பியது நாமல்ல. அதற்குப் பொறுப்பு வேறு சிலர்' என்பதே அவர் வெளியிட்டிருந்த முக்கியமான தகவல்.

இந்த வேறுசிலர் யாரென்றும், அவர் மனதில் தெளிவாக இருந்த ஈழம் பெறும் திட்டம் என்ன என்பதையும் இப்போதாவது அவர் வெளியிலே சொல்லக்கூடாதா? வடக்குக் கிழக்கில் நாளுக்கு நாள் யுத்தத்தாலும் பட்டினியாலும் செத்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு அப்போதாவது விடிவு கிடைக்க வாய்ப்பாக இருக்கும். ஒருவேளை அதைச் சொல்லிவிட்டால் அந்தத் திட்டத்தை வைத்துக் கொண்டு வேறு யாராவது தலைமைக்கு வந்து விடுவார்கள் என்று தலைவர் பயப்படுகிறாரோ என்னவோ? ஆனாலும் எத்தனை நாளைக்குத்தான் இந்த தலைமைப் பதவிக்காக முக்கியமான விடயங்களையும் இரகசியமாக வைத்திருப்பது?

## வடக்கிலும் கிழக்கிலும் தேர்தலை நிறுத்து!



இலங்கையில் மனித உரிமைகளுக்கான அமைப்புகளின் ஒன்றியத்தின் அனுசரணையுடன் சுதந்திரமான நீதியான தேர்தலுக்கான இயக்கம் ஒன்று தொழிற்பட ஆரம்பித்துள்ளது. ஜூலை 16, சனிக்கிழமை இந்த இயக்கத்தின் பேராளர் மாநாடு கொழும்பு சமய, சமூக நிறுவன மண்டபத்தில் நடைபெற்றது. முந்நூறுக்கும் அதிகமான பேராளர்கள் கலந்து கொண்டனர்.

''அச்சம் வேண்டாம், தேர்தல் உரிமையை அமுல்படுத்துவோம்!'' என்ற சுலோகங்களுடன் வெளியிடப்பட்டுள்ள கோரிக்கைகளில் வட மாகாணத்தில் யுத்த நிலைமை நீடிப்பதால் அங்கு தேர்தல் நடாத்தப்படக்கூடாது என்று கேட்கப்பட்டுள்ளது.

தொழிற்சங்கவாதிகள், பெண்ணுரிமைப் போராளிகள், பத்திரிகையாளர்கள், மனித உரிமை இயக்கங்களின் முன்னணி அங்கத்தவர்கள் எனப் பல தரப்பட்டவர்கள் செயல் திட்டங்களைப் பற்றி உரையாற்றினார்கள்.

கடந்த காலங்களில் நடந்த தேர்தல் மோசடிகள் பற்றியும் நீதியான தேர்தல்கள் நடத்தப்படுவதற்கு எல்லாக் கட்சிகளுமே எதிராக இருந்திருக்கின்றன என்றும் பிரதிநிதிகளில் பலர் குறிப்பிட்டனர். பொலிஸ்காரர்களும் பிற பாதுகாப்புப் படையினரும் ஆளுங்கட்சிக்காகவே தொழிற்பட்டு வருவதையும் பலர் சுட்டிக் காட்டினார்கள்.

''யுக்திய'' பத்திரிகையின் ஆசிரியர் சுனந்த தேசப்பிரிய பேசும் போது வடக்குக் கிழக்கு நிலைமையையும் கவனத்தில் எடுக்க வேண்டும் எனவும் யுத்தப் பிரதேசங்களில் தேர்தல்கள் நடாத்தப்படுவது பிழையானது எனவும் குறிப்பிட்டார்.

சுதந்திரமான, நீதியான தேர்லுக்கான இயக்கத்தின் பதினொரு கோரிக்கைகளில் முக்கியமான சிலவற்றை கீழே தருகிறோம்.

அரசாங்கத் தொடர்பு சாதனங்கள் (பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி) ஆகக் குறைந்த பட்சம் தேர்தல் காலத்திலாவது நடுநிலை வகித்தல் வேண்டும்.

வட மாகாணத்தில் யுத்த நிலைமை நீடிப்பதால் அங்கு தேர்தல் நடத்தக்கூடாது.

மக்களின் ஜனநாயக உரிமைகளைக் கட்டுப்படுத்தும் அவசரகாலச் சட்டங்களை தேர்தல் காலத்திலேனும் நீக்குதல் வேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்து செய்தல் வேண்டும்.

இன, மத, சாதி வேறுபாடுகளை கூர்மைப்படுத்தும் பிரச்சார நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். மக்களை ஆவேசப்படுத்தும் பிரகடனங்களைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

### மனைவியரின் மகத்துவம்

இம்முறை மட்டக்களப்புத் தேர்தல் களத்தில் பலசுவையான சம்பவங்கள் நிகழ்கின்றன. வேட்பாளர்களாக நியமனம் பெறப் பலரும் பல மாதிரி 'ஓடிப்' பார்த்தனர். சாதியும், பணமும், வேறு பலங்களும் காரணங்களாகக் காட்டப்பட்டுத் தம்மைத் தான் வேட்பாளராக நியமிக்க வேண்டும் என்று கட்சித் தலைமைப்பீடங்களைக் கேட்டனர். தேர்தல் காலத்தில் வழக்கம் போலச் செய்யப்படும் முக்குவர், வேளாளர் போட்டிகளும் நிகழ்ந்தன.
நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் நாள் நெருங்க நெருங்கப் பலரது பெயர்கள் அடிபடத் தொடங்கின. இவரா? இவருமா? என்று மட்டக்களப்பு மக்கள் திகைத்தனர். திண்டாடினர்; இவர் எம்.பீயாக வந்தால் என்ன நடக்கும் என்று ஒவ்வொரு பெயர்கள் வெளிவரவும் அங்கலாய்த்தனர்.
நல்லவேளை! இந்த வேட்பாளர்களின் மனைவியர் கை கொடுத்தனர்.
''லெக்ஷனுக்கு நின்றால் நஞ்சு குடிப்பேன்'' மனைவியரின் இந்தப் பயமுறுத்தல் சிலரைத் தேர்தல் களத்திலிருந்து பின் வாங்க வைத்திருக்கிறது. மட்டக்களப்பு மக்கள் இவர்களுக்கு நன்றி கூற வேண்டும்.
மட்டக்களப்பில் பாராளுமன்ற அரசியல் பாவப்பட்ட சமாச்சாரமாக மாறிவிட்டமையையும் இது குறிக்கிறது, என்று சொல்லத் தோன்றுகிறது.

www.tamilarangam.net



## மட்டக்களப்பு மாவட்டத்தின் வடமுனையும் தென்முனையும் பற்றி சில குறிப்புகள்:

# தீர்வு பறித்தெடுப்பு தானா?

**பாலையா பத்மநாதன்**

1955ம் ஆண்டுக்கு முன்னர் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு என்ற இரு மாவட்டங்கள் மட்டுமே காணப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தின் வடபகுதி கூடியளவுக்கு தமிழர்களையும் குறைந்தளவு முஸ்லீம்களையும் கொண்டு காணப்பட்ட அதே வேளையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் பகுதி (இப்போதைய அம்பாறை மாவட்டம்) கூடியளவு முஸ்லீம்களையும் அதைவிடச் சற்றுக் குறைந்தளவு தமிழர்களையும் கொண்டு காணப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தின் வடமுனை வெருகல் ஆற்றை எல்லையாகவும், தென்பகுதி கூட முனை வரையும் விரிந்து கிடக்கும் ஒரு நீண்ட பிரதேசம் ஆகும். பட்டிப்பளை ஆறு மாவட்டத்தின் மேற்குப் பகுதியை எல்லைப்படுத்துகின்றது. மொத்தத்தில் மட்டக்களப்பு மாவட்டம் கடல் வளத்தையும் வயல் வளத்தையும் கொண்ட ஒரு செழிப்பு மிக்க மாவட்டமாக காணப்பட்டது.

ஆனால் 1941ம் ஆண்டு டி.எஸ். சேனநாயக்கா அவர்களால் ஏற்படுத்தப்பட்ட கல்லோயக் குடியேற்றத்திட்டத்தின் மூலம் 45க்கு மேற்பட்ட புதிய குடியேற்றத் திட்ட கிராமங்கள் உதயமாகின. இக்குடியேற்றத்திட்டக் கிராமங்களில் 40க்கு மேற்பட்டவை சிங்கள மக்களுக்கு சொந்தமானதாகும். இலங்கையின் தென்பகுதியில் இருந்து இக்கிராமங்களுக்கு சிங்கள மக்கள் கொண்டு வரப்பட்டு குடியேற்றப்பட்டனர். மிகுதியாக உள்ள சில கிராமங்கள் மட்டுமே தமிழ்பேசும் மக்களுக்கு அதாவது தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. இக் கல்லோயாக் குடியேற்றத் திட்டம் ஏற்படுத்தப்பட்டதன் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியில் புதியதாக ''அம்பாறை'' எனப்படும் ஒரு மாவட்டம் 1955ம் ஆண்டு உதயமாகியது. இதன் மூலம் கிழக்கு மாகாணம் மூன்று மாவட்டங்களை உள்வாங்கிக் கொண்டது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்கள அரசியற் தலைவர்கள் குடியேற்ற திட்டங்களை ஏற்படுத்துவதற்கு அடிகோலிக் கொடுத்தவர்கள் ஆங்கிலேயர்கள் ஆவார்கள். அந்நியரின் ஆட்சியால் இலங்கையின் அரசியல் பொருளாதார விடயங்கள் மாற்ற முற்றிருந்தன. இதன் தாக்கங்கள் இன்று வரையும் தொடர்ந்த வண்ணம் உள்ளது. இதில் இன்று வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஏற்படும் இனரீதியான குடியேற்றத் திட்டங்களும் முக்கியம் பெற்றுள்ளன. 1931ம் ஆண்டு டொனமூர் பிரபுவின் அறிக்கையில் இலங்கையில் இதுவரை காலமும் அதாவது 1931ம் ஆண்டுக்கு முன்னர் இருந்த இனரீதியான சட்ட மன்றப் பிரதிநிதிகள் தெரிவு செய்யும் முறை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பிரதேசரீதியான பிரதிநிதித்துவ முறை புகுத்தப்படவேண்டும் என விதந்துரைக்கப்பட்டது. இதன்படி 1931ம் ஆண்டு டொனமூர் அரசியல் திட்டத்தில் முக்கிய அம்சமாக ''பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ'' முறை புகுத்தப்பட்டிருந்தது. 1931ம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில் இருந்த இனவாரிப் பிரதிநிதித்துவ முறை மூலம் இலங்கையில் இனரீதியான முரண்பாடும் கலவரங்களும் வளர்கின்றன எனவும் இதன் மூலம் தமிழ், சிங்கள, முஸ்லீம் இன வேறுபாடுகள் தோன்றி வளர்ந்து வருவதாகவும் காரணங்கள் முன்வைக்கப்பட்டன. இவ்வாறான இனமுரண்பாடுகளை இல்லாது செய்து இன ஒற்றுமையையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்த வேண்டியது அவசியம் என உணரப்பட்டு 1931ம் ஆண்டு புதிதாக பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை ஏற்படுத்தப்பட்டு பிரதேச அடிப்படையில் சட்டமன்றத்துக்கு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டார்கள். இப்பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை 1978ம் ஆண்டு விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை புகுத்தப்படும் வரை சுமார் 47 வருடங்கள் நடைமுறையில் இருந்தது.

இலங்கை சுதந்திரம் அடைந்த கால கட்டங்களில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து குறிப்பாக திருகோணமலை, மட்டக்களப்பு, இப்போதைய அம்பாறை மாவட்டங்களில் இருந்து சட்ட மன்றத்துக்கு சிங்களப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவில்லை. இப்பிரதேசங்களில் வாழ்ந்த குறைந்தளவு சிங்கள மக்களின் எண்ணிக்கை தமது சிங்களத் தலைவர்களை சட்ட மன்றத்துக்கு தேர்தல் மூலம் தெரிவு செய்து அனுப்ப முடியாத நிலைமைகளை ஏற்படுத்தியது. தமிழ் பேசும் மக்களின் தாயக பிரதேசமான இப்பிரதேசத்தில் பாரிய குடியேற்றங்களை ஏற்படுத்துவதன் மூலமாகவே சிங்களப் பிரதிநிதிகள் இப்பிரதேசத்தில் இருந்து சட்டமன்றத்துக்கு அனுப்ப முடியும் என அரசியல் தலைவர்கள் திட்டமிட்டு கந்தளாய், சேருவில, கல்லோயா போன்ற குடியேற்றத் திட்டங்களை ஏற்படுத்தினர். டொனமூர் குழுவினரால் கொண்டு வந்த பிரதேசவாரிப் பிரதிநிதித்துவமுறையின் ஒரு பக்க விளைவாக இது அமைந்துள்ளது.

அம்பாறை மாவட்டம், மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியில் இருந்து உதயமாகிய ஒரு பிரதேசமாகும். இன்று அம்பாறை தேர்தல் தொகுதிக்கு புதிதாக ''திகாமடுல'' என்ற தனிச்சிங்கள நாமம் சூட்டப்பட்டுள்ளது. அம்பாறை என்ற தமிழ்ப் பெயர் இன்று மங்கி மறைந்து கொண்டு போகின்றது. நாம் இங்கு குறிப்பிட வந்த முக்கிய விடயம் என்னவெனில் இன்று அம்பாறை மாவட்டத்தை அண்டியுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்புறக் கொலனிகள் கிராமங்கள் என்பன அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



இப்போது வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இனப்பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு இராணுவத்தினர் தமது நிர்வாகச் செயற்பாட்டிற்காக அல்லது இராணுவ நிர்வாக இலகுபடுத்தலுக்காக இம் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்புறக் கொலனிகள், கிராமங்கள் என்பனவற்றை அம்பாறை மாவட்டத்திற்குரிய இராணுவ நிர்வாகச் செயற்பாடுகளுடன் இணைத்துள்ளனர். இவை இணைக்கப்பட்டமைக்கு காரணம் இராணுவம் தமது செயற்பாட்டை இலகுபடுத்தவே எனக்கூறப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தின் அம்பாறையை அண்டியுள்ள எல்லைப் புறக் கிராமங்களான வங்கியெல்லை, காக்காச்சிவட்டை, சின்னவத்தை, பாலையடிவட்டை, 35ம் கிராமம், 38ம் கிராமம், 39ம் கிராமம் போன்ற எல்லைப்புறப்பகுதிகள் இன்று அம்பாறை மாவட்டத்தின் இராணுவ நிர்வாக செயற்பாட்டில் உள்ளன. இதில் முக்கிய விடயம் என்னவெனில் இனப்பிரச்சினை இன்னும் சில வருடங்களுக்கு நீடிக்குமானால் காலப்போக்கில் இக்கிராமங்களும் கொலனிகளும் நிரந்தரமாகவே அம்பாறை மாவட்டத்துடன் இணைந்துவிடும் அபாயம் உள்ளது. மேலும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் விடப்பட்டுக் கொண்டிருக்கும் இக்கால வேளையில் அம்பாறை மாவட்டத்தை கிழக்கு மாகாணத்தில் இருந்து பிரித்து மொனறாகலை மாவட்டத்துடன் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் சில வருடங்களுக்கு முன்னர் அரசியல்வாதிகளால் முன்வைக்கப்பட்டன. இவ்வாறான நிலைமைகளுக்கு மத்தியில் திரைமறைவில் குடியேற்றத்திட்டங்களும் அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவ்வாறான நிகழ்வுகள் தொடருமானால் தமிழ் பேசும் மக்கள் குறிப்பாக முஸ்லீம் மக்கள் தங்கள் தாயகம் எனப்படும் அம்பாறை மாவட்டத்தை இழந்து விடும் தன்மைகள் தான் மேலோங்கி உள்ளன எனலாம்.

1950ம் ஆண்டு காலப்பகுதியில் எவ்வாறு குடியேற்றத் திட்டங்கள் உருவாகி பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதி அம்பாறை மாவட்டமாக உருமாறியதோ அதே போன்று, இன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் வடமுனை எனப்படும் ஆதிக்குடிகள் வாழும் பிரதேசமும் பொலநறுவை மாவட்டத்துடன் இணைந்து போகக் கூடிய அல்லது புதிதாக ஒரு மாவட்டம் உருவாகக்கூடிய நிலைமைகள் தான் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்போது இராணுவம் தமது இராணுவ நிர்வாக செயற்பாட்டை இலகுபடுத்தவென ஓட்டமாவடி வாவியில் இருந்து வாகரை உட்பட வெருகல் வரையான கடல் பிரதேசம், நிலப்பிரதேசம் என்பன கதுறுவெல பிரதேச இராணுவ நிர்வாக செயற்பாட்டுடன் இணைக்கப்பட்டுள்ளன. இப்போது பொலநறுவை என்ற தமிழ் பெயர் மங்கிக் கொண்டு போகும் அதே வேளையில் ''கதுருவெல'' என்ற சிங்கள நாமம் கொண்ட நகரம் எல்லா வகையிலும் அபிவிருத்தி செய்யப்படுகின்றது. பொலநறுவை மாவட்டத்தின் எல்லாவகையான நிர்வாகச் செயற்பாடுகளும் இப்போது கதுருவெல நகர்ப்பகுதிக்கு மாற்றப்பட்டு புதிய அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் கதுருவெல நகருக்கு கிழக்கே அதாவது மட்டக்களப்பு மாவட்டத்தின் வடமுனை எல்லைப்பகுதியில் எல்லா வசதிகளுடனும் கூடிய ''வெலிக்கந்தை'' குடியேற்றத்திட்டம் முதன்மை பெற்றுள்ளது.

கடந்த காலங்களில் பொலநறுவை மாவட்டத்துக்கு ஒரு கடல் பிரதேசம் தேவை என்ற கருத்து சிங்களப் பேரினவாதிகளால் முன்வைக்கப்பட்டது. இவ்வாறான வேண்டுகோள்களுக்கு மத்தியில் வாகரை கடல் பிரதேசம் கதுருவெல இராணுவ நிர்வாக மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. காலப்போக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆதிக்குடிகள் வாழும் வடமுனைப் பிரதேசம் பொலநறுவை மாவட்டத்துடன் இணைந்து போகலாம். அல்லது வெலிக்கந்தையை மையமாகக் கொண்டு (அம்பாறை மாவட்டம் உருவாகியது போன்று) புதியதாக ஒரு ''வெலிக்கந்தை மாவட்டம்'' காலப்போக்கில் உருவாகக் கூடிய வகையில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. இதற்கு ஏற்ற வகையில் வெலிக்கந்தையைச் சுற்றியுள்ள பகுதிகளில் தனிச்சிங்களக் குடியேற்றத் திட்டங்களும் பாரிய நிர்வாக அபிவிருத்தி திட்டங்களும் முதன்மை பெற்றுள்ளன.

இனப்பிரச்சினைத் தீர்வுகளுக்காக ஒருபுறம் வெளிப் பேச்சுக்களும் மறுபுறம் மறைமுகமாக சிங்கள மயமும் ஓங்கியுள்ளது. திருகோணமலை மாவட்டமும், நகரமும் பறிபோய்விட்டது. இப்போது மட்டக்களப்பு மாவட்டம் பறிபோகிறது. இனப்பிரச்சினை இன்னும் சில வருடங்கள் தொடருமானால் நிலம் மட்டுமல்ல ''இனமும்'' பறிபோய்விடும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தொண்டமான் செய்தது தவறு!

—செல்லச்சாமி

**நாற்பத்தைந்து வருட காலம் நீங்கள் இ.தொ.காவில் இருந்திருக்கிறீர்கள். இதில் இருபத்தேழு வருடங்கள் பொதுச்செயலாளராகப் பணி புரிந்திருக்கிறீர்கள். இதுவரை காலமும் தொண்டமான் அவர்களின் தலைமைக்கெதிராக நீங்கள் நடந்து கொள்ளவில்லை. இப்போது மத்திய மாகாண சபை. விவகாரத்தோடொட்டி நீங்கள் தொண்டமானுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தமைக்கு என்ன காரணம்?**

மத்திய மாகாண சபை விவகாரத்தில் தொண்டமான் அவர்கள் கடைப்பிடித்த வழி மலையக சமுதாயத்துக்கோ அன்றி, இ.தொ.காவுக்கோ நன்மை பயக்கக் கூடியது என நான் கருதவில்லை. தொண்டமான் அவர்களின் தவறான அரசியலுக்கும் அவரது தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யவுமே மத்திய மாகாண சபை விவகாரம் அவருக்கு உதவியது. அதனால்தான் முப்பது வருடங்களாக அவருடைய தலைமையின் கீழ்ப் பொதுச்செயலாளராக இருந்த போதும் இப்போது எதிர்க்க வேண்டி ஏற்பட்டது. கடந்த காலங்களிலும் பல தடவைகள் முரண்பாடுகளேற்பட்டுள்ள போதும் ஸ்தாபன ஐக்கியம் கருதிப் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியதாயிற்று. காமினி திசநாயக்கா அவர்களை மத்திய மாகாண சபை முதலமைச்சராக்குவது மலையக மக்களுக்கு எவ்வித நன்மையையும் தராது என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை.

**தொண்டமான் அவர்களின் தனிப்பட்ட தேவைகள் என்று குறிப்பிட்டீர்கள். கொஞ்சம் விவரமாகச் சொல்ல முடியுமா?**

கடந்த மூன்று அல்லது நான்கு வருடங்களாகத் தன்னுடைய வாரிசுகளை இ.தொ.காவுக்குள் புகுத்த விரும்பினார். முதலில் தன்னுடைய மகனை மாகாணசபை அமைச்சராகக் கொண்டு வந்தார். அது வெற்றியளிக்கவில்லை. இப்போது பேரன். ஆறுமுகத்தைக் கொண்டு வந்தி ்க்கிறார். இருபத்தேழு வருட ங்களுக்கு மேலாகக் காமினி திசநாயககா மீது தொடர்ந்து வெறுப்பையும் குரோதத்தையும் காட்டி வந்தவர் தொண்டமான். எந்தக் காலத்திலும் காமினி திசநாயக்காவை நம்பக் கூடாது என்றவர். இப்போது மட்டும் காமினி திசநாயக்கா மீது திடீரென்று மோகம் ஏற்படுவதற்கு என்ன காரணம்? காமினி திசநாயக்காவைப் பயன்படுத்தித் தனது பேரனின் செல்வாக்கைப் பலப்படுத்துவது ஒரு நோக்கம்.



இந்தியாவில் அவரது பேரனுக்கும் பேத்திக்கும் வர்த்தக நலன்கள் - குறிப்பாக எயர் லங்கா முகவர் வியாபாரம் சர்வதேச அளவில் பெரிதாகி வளர காமினி திசநாயக்காவின் உதவி தேவை என்பது இன்னொரு காரணம்.

**தொண்டமான் அவர்களுக்கும் ஜனாதிபதிக்கும் முரண்பாடு ஏற்படக் காரணமே ஜனாதிபதி தான். தொண்டமானை ஓரங்கட்டி வெளியேற்றி விடுவதன் மூலம் சிங்களவர்களின் ஆதரவை அதிகளவில் பெற்று விடலாம் என ஜனாதிபதி விஜேயதுங்க நினைத்தார். அதனை எதிர்த்தும், ஐ.தே.கவுள் தன்னுடைய இருப்பை உறுதிப்படுத்தவுமே தொண்டமான் மத்திய மாகாணசபை விவகாரத்தில் ஐ.தே.க எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அது நியாயம்தானே?**

எதிரியாக இருந்த காமினி திசாநாயக்காவை முதலமைச்சராக மாற்ற முயன்று ஜனாதிபதியை நிர்ப்பந்தப்படுத்தித் தனது காரியத்தைப் பெற்றுக் கொள்ள முயல்வது நேரான அரசியல் வழியல்ல.

**நீங்கள் கடந்த பல வருடங்களாக ஐ.தே.கவின் ஆட்சி நிலை பெற உதவியிருக்கிறீர்கள். மத்திய மாகாணசபை விவகாரத்திலும் அவர்களுக்கு விசுவாசமாகவே நடந்து கொண்டீர்கள். எனினும் அவர்கள் உங்களைக் கைவிட்டு விட்டார்களே?**



ஐ.தே.கவை ஆதரிக்க வேண்டுமென்பதற்காக நான் அப்படி நடந்து கொள்ளவில்லை. தொண்டமான் அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளால் நமது சமுதாயத்தின் மீது ''சதிகாரர்கள்'' என்ற ஒரு தவறான பெயர் வந்துவிடக் கூடாது என்பதற்காகவே நான் அப்படிச் செய்தேன். அரசாங்கமோ அல்லது ஜனாதிபதியோ நம்மை வெளியேற்ற வேண்டும் என்ற நோக்கத்துக்காக நம்மோடு முரண்படுகிறார்கள் என்றால், நாங்களும் எவ்வளவோ முக்கியமான பிரச்சினைகளை முன் வைத்திருக்கலாம். உதாரணமாக, உறுதி மொழி தந்தபடி தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வு தரப்படவில்லை. தனியார் கம்பனிகளுக்கு நிர்வாகப் பொறுப்பு வழங்கப்பட்டதால் நிறையப் பிரச்சினை இருக்கிறது. மலையகத்தில் இடம் பெறும் அநாவசியக் கைதுகள் என்று முக்கியமான பல பிரச்சினைகள் உண்டு. இவற்றை முன் வைத்து அரசாங்கத்துக்கு முன்னறிவித்தலும் அவகாசமும் கொடுத்து விட்டுப் பேசிப் பார்த்திருக்கலாம். அது சரி வரவில்லை எனில் வேலை நிறுத்தத்தில் இறங்கியிருக்கலாம். இதுதான் அடிப்படையான அரசியல் வழி. இதனை விட்டு விட்டு காமினி திசாநாயக்காவை மத்திய மாகாண முதலமைச்சராகக் கொண்டு வருவதற்கு ரகசியமாக உதவுவதன் மூலம் காரியம் சாதிக்க நினைத்தமை நேர்வழி அல்ல.

**இந்தக் கருத்தையும் வழிமுறையையும் நீங்கள் தொண்டமான் அவர்களிடம் அல்லது இ.தொர்.காவிடம் எழுத்து மூலமாக வைத்தீர்களா?**

என்னுடைய இந்தக் கருத்தை நான் தேசிய சபை முன்வைத்தேன். தேசிய சபையும் அதனை ஏற்றுக் கொண்டது. ஒருமாத கால அவகாசம் அரசுக்கு வழங்குவது என்றும் முடிவெடுக்கப்பட்டது. ஆனால் இந்த முடிவுகளையும் தேசிய சபையையும் உதறி விட்டுத் தான் காமினி திசநாயக்காவுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டியே தொண்டமான் அவர்கள் இவ்வளவு ஜனநாயக விரோதமாக நடந்து கொண்டார். காமினி திசநாயக்கா முதலமைச்சராக வந்திருந்தால் எங்களுடைய பிரச்சினை தீர்ந்திருக்குமா?

**தேசிய சபை உறுப்பினர்கள் ஏனையோரின் ஆதரவு உங்களுக்குப் பின்னர் ஏன் கிடைக்காமல் போயிற்று?**

நான் முன் வைத்த பிரேரணையைச் சபை ஏற்றுக் கொண்டது. ஆனால் தொண்டமான் அவர்கள் அதனை நடைமுறைப்படுத்தவில்லை. மத்திய மாகாண சபை விவகாரம் முடிந்த பிற்பாடு ரகசியமான முறையில் தேசிய சபைக் கூட்டம் ஒன்றைக் கொட்டகலையில் கூட்டினார். எல்லா உறுப்பினர்களையும் கொட்டகலையில் ஒரு சிறைச்சாலை மாதிரிச் சூழலில் தடுத்து வைத் து சாப்பாடு, குடிவகை எல்லாம் தாராளமாக வழங்கி யாரும் வாய் பேச முடியாத ஒரு பயங்கர சூழ்நிலையைத் தன்னுடைய பேரனுடைய கோஷ்டி மூலம் ஏற்படுத்தியே என்க்கெதிரான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இது இ.தொ.கா. யாப்பிற்கு முரணானது. எனவே நான் நீதிமன்றம் போக நேர்ந்தது. நான் இல்லை என்றானதும் தன்னுடைய பேரனைப் பொதுச் செயலாளராக்கி விட்டார். என்னுடைய சந்தேகமும் உறுதியாகி விட்டது.

**இ.தொ.கா வின் நிதி நிலைமை சிக்கலிலுள்ளதாகப் பேசப்படுகிறதே?**

இ.தொ.கா என்ற ஸ்தாபனத்தின் நிதி நிலை அறிக்கைகள் கடந்த ஐந்து ஆண்டுகளாகச் சமர்ப்பிக்கப்படவேயில்லை. ஸ்தாபனத்தின் நிதியிலும் பெருமளவு தொண்டமான் அவர்களின் தனிப்பட்ட தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஸ்தாபனத்தின் கட்டிட நிதியாக ஆரம்பத்தில் 2கோடி ரூபா வழங்கப்பட்டது. அதற்கு என்ன நடந்தது என்று தெரியாது. இப்போது ஸ்தாபனத்தின் சொத்துக்களை வங்கியில் ஈடுவைத்து 2 கோடி ரூபா பெறப்பட்டுக் கட்டிட வேலை நடக்கிறது. இந்தத் தொகைக்கு ஸ்தாபனமே வட்டி கட்டுகிறது. ஒரு பெரிய கடனில் இ.தொ.கா. மூழ்கியுள்ளது.

**இ.தொ.காவில் உங்களுடைய எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறது?**

எதிர்காலத்தில் இ.தொ.கா என்னுடைய தலைமையின் கீழேயே இயங்கும் என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை. மலையக மக்களிடமிருந்து என்னை யாரும் பிரிக்க முடியாது.

படங்களும் நேர்காணலும்: **மூவர்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தொண்டா - காமினி - செல்லா
# உறவும் பிரிவும்
## பின்னணியில் சில கேள்விகள்

மீண்டும் ஒரு பாராளுமன்றத் தேர்தல் நடைபெறப் போகின்றது. இத்தேர்தலிலும், வழமையைப் போலவே மலையக மக்கள் 'அடுத்தவரின் நன்மைகள்' கருதியே தங்களது வாக்குகளை வழங்கப்போகிற நிலைமை பரவலாகத் தென்படுகிறது.

வாக்குகள் என்பது பாராளுமன்ற ஜனநாயக மரபுகளில் பேரம் பேசுவதற்குள்ள மிகச் சிறந்த ஆயுதமாகும். மக்கள் தங்களது கடந்த கால அனுபவங்களை சமகால அரசியல் நிலைமைகளோடும் ஒப்பிட்டுப் பார்த்து தமது எதிர்காலப் பாதுகாப்பிற்கும், அபிவிருத்திக்கும் மிகவும் சாதகமான சூழ்நிலையை உருவாக்கிக் கொள்வதை நோக்கமாகக் கொண்டே தேர்தல்களில் பங்கெடுப்பர். ஆனால் மலையக மக்களைப் பொறுத்தளவில் அவ்வகையான நிலைமைகளைப் பரவலாகக் காண முடியாதிருக்கின்றது.

**இ.தொ.கா - ஐ.தே.கட்சி கூட்டு:**

எல்லோரும் எதிர்பார்த்தபடி இ.தொ.கா, ஐ.தே.கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து தேர்தலில் போட்டியிடுகின்றது. ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜேதுங்கவுடன் ஏற்பட்ட முரண்பாட்டின் போது தம்மை ஐ.தே.கட்சி அரசினுள் முழுமையாக இருத்திக் கொள்ள தொண்டமான் மேற்கொண்ட திருவிளையாடல்கள் எல்லாம் முற்றுப்பெற்றுவிட்டன. தனது கண்டிய சிங்களப் பேரினவாத உணர்வுகளை சற்று ஒதுக்கி வைத்து விட்டு ஜனாதிபதி விஜேதுங்க தொண்டமானைக் கட்டித் தழுவி வரவேற்ற வரவேற்பின் மூலம் ஏற்பட்ட அகமகிழ்வில் 'முரண்பாட்டின் போது' தன்னைப் பலப்படுத்திக் கொள்ள முன்வைத்த மலையக மக்களின் பிரச்சினைகள் எல்லாவற்றையும் தூக்கி கிடப்பில் போட்டுவிட்டு தேர்தல் கூட்டைப் பாதுகாத்துக் கொண்டார் தொண்டமான்.

தனது முன்னைய தலைவர்களான ஜே.ஆர்.ஜயவர்த்தனா, ஆர்.பிரேமதாச போன்றவர்கள் போல, சில எலும்புத் துண்டுகளை முறையாகப் போட்டால் அவற்றைப் பெற்றுக் கொண்டு வாலை ஆட்டிக் கொண்டு பேசாமல் இருக்கும் தொண்டமானின் நிலைமையை விஜேதுங்க உணர்ந்ததுவோ, அல்லது தேர்தலில் எப்படியாவது வெற்றி பெற்று விட்டு பிறகு இவற்றைப் பற்றிப் பார்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணமோ? இந்த விஜேதுங்கவின் 'நிலைப்பாட்டு மாற்றத்திற்கான காரணம் என்பது தெரியவில்லை.

எப்படியோ ஜனாதிபதி பிரேமதாசவின் மரணத்தின் பின் ஐ.தே.கட்சியினுள் நுழைய முடியாமல் தவித்துக் கொண்டிருந்த காமினி திசநாயக்காவையும் சேர்த்துக் கொண்டு ஐ.தே.கட்சியின் அரசுக்குள் இருத்திக் கொண்டார் தொண்டமான். இந்த திருவிளையாடல்களுக்கு மலையக மக்களின் சக்தியை மத்திய மாகாண சபையில் காட்டி விட்டோம்'' என அடிக்கடி வியாக்கியானம் வேறு. கடந்த 54வருட அரசியல் வரலாற்றில் மலையக தொழிலாளர்களுக்கு செய்த தீங்குகளையும், துரோகங்களையும் இவர்களுக்கு செய்த சாதனைகளாக உணரவைப்பதில் கைதேர்ந்த அனுபவம் கொண்டவர் தொண்டமான். இதுதான் இவரின் அரசியல் சாணக்கியமுமாகும்.

**காமினி - தொண்டமான் புது நேசம்:**

கடந்த முப்பது வருட காலமாக ஐ.தே.கட்சியினரை விட ஐ.தே.கட்சிக்கு மிகவும் விசுவாசமாக நடந்து கொள்பவர் தொண்டமான். எனினும் கடந்த 17 வருட காலமாக காமினி திசநாயக்காவை தனது பரம எதிரியாக எண்ணிக் கொண்டுதான் செயற்பட்டு வந்துள்ளார் என்பது வெளியே பலருக்கு தெரியாத விடயமானாலும் இ.தொ.காவினருக்கு நன்றாகத் தெரிந்த விடயமாகும். அதே போல தொண்டமான் பலத்தை சிதறடிப்பதிலும் முக்கிய கவனம் செலுத்தி செயற்பட்டவர் காமினி திசநாயக்கா. ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராக காமினி - லலித் கொண்டு வந்த ஒழுக்கவழுவுரை நடவடிக்கையின் போது காமினிக்கு எதிராக பிரச்சாரம் செய்தவர் தொண்டமான். நிலைமைகள் இப்படி இருக்க, மத்திய மாகாண சபையில் முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்கும்படி காமினி திசநாயக்காவை தொண்டமான் கேட்டுக் கொண்டதும், அதற்கு இ.தொ.காவினரை முழுமையான ஆதரவு வழங்கும்படி வற்புறுத்தியதும் பலருக்கும் ஆச்சரியமான சம்பவமாக அமைந்தது.





இச்சம்பவம் தொடர்பாக இரு விடயங்களை நாம் அவதானத்தில் கொள்ளுதல் வேண்டும். முதலாவது, காமினி திசநாயக்காவை நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூலம் முதலமைச்சர் ஆக்குவது என்பதும், காமினியை ஐ.தே.கட்சியில் உறுப்பினராக ஏற்றுக் கொண்டால் நம்பிக்கையில்லாப் பிரேரணையை வாபஸ் பெறுவதாக தொண்டமான் விடுத்த மாற்றுக் கோரிக்கையும். காமினி திசநாயக்காவை மத்திய மாகாண சபையின் முதலமைச்சர் ஆக்குவதோ அல்லது அவருக்கு ஐ.தே.கட்சியின் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொடுப்பதுவோ எவ்வகையில் மலையக மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு துணையாக இருக்கப் போகின்றது என்பதை தொண்டமான் என்றுமே கூறியது கிடையாது. ஆனால் இதன் மூலம் தொண்டமானின் முழுமையாக தன்னை ஐ.தே.கட்சி அரசினுள் முறையாக இருத்திக் கொள்ளும் நோக்கம் இருந்ததை மிகவும் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது.

இரண்டாவது; இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை காமினியின் துணையுடன் கொண்டுவர தொண்டமான் முயற்சி மேற்கொள்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு காமினி திசநாயக்கா மத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர்களிடம் கூறிய ''தொண்டமானின் ஆதிக்கத்திலிருந்து மலைநாட்டை மீட்டெடுப்பதற்காகவே ஜனாதிபதி விஜேதுங்கவுடன் ஒன்றிணைந்து செயற்பட முயற்சிக்கிறேன்'' என்ற கூற்று. 1981ம் ஆண்டு மாவட்ட சபையின் தேர்தல்கள் நடைபெற்ற அன்று யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது உட்பட அங்கு நடைபெற்ற அடாவடித்தனங்களுடன் நேரடித் தொடர்பு உடையவர் என ஐ.தே.கட்சியின் தலைவர்களினாலேயே வெளிப்படையாக பெயர் கூறப்பட்டவரும் 1983ம் ஆண்டு இனக்கலவரங்களின் போது நுவரெலிய நகரத்தில் கலவரம் ஏற்படக் காரணமாக இருந்தவர் எனவும் சந்தேகிக்கப்பட்ட காமினி திசநாயக்காவின் இக்கூற்று சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டிய தொன்றாகும்.

எது எப்படி அமைந்தாலும், காமினியும், தொண்டமானும் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்டுள்ளார்கள். காமினி திசநாயக்க ஐ.தே.கட்சியினுள் மிகவும் பலமான இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளார். கண்டிய சிங்களவர்களை கட்சிக்குள் பலப்படுத்தும் விஜேதுங்கவின் நோக்கம் காமினிக்குச் சாதகமாக அமைந்து விட்டது. இன்று தொண்டமானும், காமினியும் ஒருவருக்கொருவர் புகழ்பாடும் செயலில் இறங்கியுள்ளனர். இத்தகைய பின்னணியுடன்தான் இ.தொ.கா - ஐ.தே.கட்சி தேர்தல் கூட்டு அமைந்துள்ளது.

**செல்லச்சாமியின் எதிர்காலம்!**

தொண்டமானினதும், இ.தொ.காவினதும் எல்லாவிதமான ஜனநாயக விரோதப் போக்குகளுக்கும், அடாவடித்தனங்களுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்கி தொண்டமானின் தலைமைக்கு ஜனநாயக முகமூடி அணிவித்து வந்தவர் இ.தொ.காவின் பொதுச்செயலாளர் செல்லச்சாமி. இதன் மூலம் தனது பொதுச் செயலாளர் பதவியை கடந்த 27 வருடங்களாக தன்னிடம் தக்க வைத்த இவர் இப்போது ''அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட நிலைக்கு'' ஆளாகியுள்ளார். இ.தொ.காவினுள் தோன்றிய உட்பூசல்களின் காரணமாக ஏற்பட்ட முரண்பாட்டை அம்பலப்படுத்துவதற்காக ஐ.தே.கட்சியின் அரசு சார்பாக நின்று செயற்பட்டதனால் இ.தொ.காவிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். தேர்தலில் வெற்றி பெற வேண்டுமேயானால், செல்லச்சாமியை விட தொண்டமானின் ஆதரவு ஐ.தே.கட்சிக்கு மிகவும் தேவையானது என்பதால் தொண்டமானின் கோரிக்கைக்கு இணங்கி செல்லச்சாமியை ஒதுக்கி வைத்துள்ளது ஐ.தே.க. சிறுபான்மையினமான மலையக மக்களின் நலன்களுக்கு எதிரான ஐ.தே.கட்சியின் பேரினவாதத்தைத் தோற்கடிப்பதை விட செல்லச்சாமியை இல்லாதொழிப்பது தொண்டமானுக்கு மிகவும் முக்கிய விடயமாகப்படுகின்றது. எனவே, ஐ.தே.கட்சியுடன் ஒன்றிணைவதன் மூலம் செல்லச்சாமியை ஐ.தே.கட்சியிலிருந்து வெளியேற்றுவது, தனது எதிர்பார்ப்பான பேரனுக்குப் பட்டம், பதவிகளைப் பெற்றுக் கொடுத்து தலைமைத்துவத்துக்கு கொண்டு வருவதற்குள்ள தடைகளை பலாத்காரமாக இல்லாதொழிப்பது போன்ற எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்து கொண்டுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட இனவாதிகளையெல்லாம் வாரி அணைத்து தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் அளித்துள்ள ஐ.தே.கட்சிக்கு, அக்கட்சிக்கு ஆதரவாக செயற்பட்டதனால் பிரச்சினையை ஏற்படுத்திக் கொண்ட செல்லச்சாமி ஒரு தமிழர் என்பதால் அவரை ஒதுக்கித் தள்ளுவது ஒரு பிரச்சினையாக அமையவில்லை. எனினும் தொண்டமானின் இக்கூட்டு எந்தளவுக்கு மலையக மக்களின் பிரச்சினையைத் தீர்க்கப் போகின்றது என்பதில் தொண்டமானுக்கு எள்ளளவும் அக்கறை இருப்பதாகத் தெரிவில்லை. இ.தொ.கா உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டால் அவர்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்பை தன்னகத்தே வைத்துக் கொள்ளும் உடன்படிக்கை ஒன்றை மட்டுமே இவர் ஐ.தே.கட்சியுடனான தேர்தல் கூட்டாக இணங்கியுள்ளார்.

**மலைஞானி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## மட்டக்களப்பில் ஒரு நாடகப்பட்டறை:
# என்றென்றும் தோல்வியுறா அணிவகுப்பு!

— என்.எஸ்.குமரன்

மீன் பாடும் தேன்நாடு எனப்படும் மட்டக்களப்பில் இருநாள் நாடகப்பட்டறை ஒன்று நடத்தப்பட்டது. மேற்படி நாடகப் பட்டறை யூன் 13, 14 ஆம் திகதிகளில் மட்டக்களப்பு 'மன்றீசா'வில் நடத்தப்பட்டது.

இதனை கொழும்பில் இருக்கின்ற விபவி நிறுவனம் நடத்தியது. மட்டக்களப்பு சமூக... அபிவிருத்தி நிலையைத்தைச் சேர்ந்தவர்கள் ஏற்பாட்டுக்கு உதவியிருந்தார்கள்.

மட்டக்களப்பு ஊறணியில் அமைந்துள்ள தடைமுகாம் உள்ள பிரதான வீதியிலிருந்து பனை அபிவிருத்தி சபையின் பனை வளர்ப்பு பிரதேசத்தினூடாக உள்ளே செல்ல வேண்டும். மரங்களடர்ந்த பிரதேசம் காட்டுக்குள் நுழைவதைப் போன்ற உணர்வு ஏறத்தாழ ஒன்றரை கிலோமீற்றர் தொலைவு உள்ளே சென்றால் களைப்பை மறக்குமளவுக்கு 'மன்றீசா' கட்டடமும் அச்சூழலும் அமைந்துள்ளது. அதைச் சூழ அழகான மரங்கள் சிலைகள் நாற்சாலிகள் அமைக்கப்பட்டுள்ளன. கட்டடத்திற்கு பின்புறமாக மட்டக்களப்பு வாவி. பார்க்க அழகான காட்சி.

இந்தியப்படை மட்டக்களப்பில் நிலைகொண்டிருந்த நேரம் ''மன்றீசா'' மட்டக்களப்பின் பிரதான முகாமாக மாற்றப்பட்டிருந்தது. மாடியில் ஹெலிகொப்டர் இறங்கக் கூடிய வசதிகள் இருந்ததை இன்னும் பார்க்கக்கூடியதாக உள்ளது. 125க்கும் மேற்பட்ட அறைகள் கொண்ட இரு பெரிய மண்டபங்கள். ஒரு பெரிய சாப்பாட்டு அறை உட்பட பலவசதிகளுடன் உள்ளது.

இந்த அருமையான சுற்றுச்சூழலில் நாடகப்பட்டறை நடத்தப்பட்டது. ஏற்பாட்டாளர்கள் சார்பில் ஏழு பேர் உட்பட நாடகப்பட்டறையில் மொத்தம் 47 பேர் கலந்து கொண்டனர். இவர்களில் 18 பேர் பெண்கள். கலந்து கொண்ட எல்லோரும் இளம் தலைமுறையினர்.

ஏற்பாட்டாளர்கள் சார்பில் விபவி நிறுவனத்திலிருந்து திரு.போல், அரங்காடிகள் அமைப்பிலிருந்து அ.ரவி, ஜீவா, மற்றும் சிலரும் சிங்கள சினிமா, நாடக கலைஞர் றொஜர் செனவிரத்ன என்போர் கலந்து கொண்டனர்.

இந்த நாடகப்பட்டறை கலந்து கொண்டோரின் மிகுந்த பாராட்டைப் பெற்றிருந்தது இங்கு குறிப்பிட வேண்டியது. அந்த பாராட்டு ஏற்பாட்டாளர்களை திருப்தி கொள்ள வைத்திருந்தாலும் ''ஒரு நாடகப் பட்டறை' என்பதன் இறுதி இலக்கை அடைந்ததா என்பது கேள்விக்குரியதே.

முதலில் இவ்வாறான நாடகப்பட்டறைக்கு இரு நாட்கள் போதுமான காலமல்ல. அவசரத்தில் செய்யப்பட்ட நாடகப்பட்டறை என்றளவில் சில குழப்பங்கள் தென்பட்டன. பங்குபற்றுனர்களில் பலர் இவ்வகையான பட்டறைக்கு புதிதானவர்களாக இருந்ததனால் பட்டறையில் செயற்படுத்தப்பட்ட உல்லாச சுதந்திர, நகைச்சுவையான, விசித்திர்மான சில செயற்பாடுகள் பட்டறையின் முழுமைத் தன்மையை மறைத்திருந்தது. இந்நடவடிக்கைகள் நாடகப்பட்டறையை போதாமைக்கு உள்ளாக்கியிருந்தது.

நாடகப்பட்டறையின் போது அ.ரவியின் உடற்பயிற்சி முறைகள் உடற்பயிற்சியின் போது பின்னணியில் ஒலி மெட்டு, பாடல்கள் என்பவை உடற்பயிற்சியின் சிரமம், களைப்பை மறக்கச் செய்திருந்தது எனலாம். இவ்வுடற்பயிற்சி முறைகள் எல்லோரையும் கவர்ந்திருந்தது.

அத்துடன் அவரால் செய்யப்பட்ட குரல் பயிற்சியிலும்; ஒருவரால் தனது குரலை இத்தனை வகையில் வித்தியாசப்படுத்த முடியும் என்பதையும் எல்லோருக்கும் உணரச் செய்தது. அடிவயிறு, நெஞ்சு, தொண்டை, மூக்கு தலை என்பவற்றினூடாக் குரலின் ஒலித்தன்மையை வித்தியாசப்படுத்த முடியும் என்பதைக் காட்டியதுடன் அது அர ங்கத்துக்கு சாத்தியமாகும் சூழலையும் விளக்கினார்.

இதைவிட முகபாவத்தையும் உடல் இயல்பையும் நடிப்புக்காக மாற்றிக் கொள்வது பற்றிய பயிற்சியின் போது இருவர், இருவராக ஒருவரை ஒருவர் நேரெதிரில் அருகில் அமர்ந்து ஒருவர் செய்யும் அசைவை மற்றவர் செய்து காட்டிய பயிற்சி வினோதமாகவும் குறிப்பிட்ட இலக்கின் சாத்தியப்பாட்டையும் வெளிப்படுத்தியது. இப்பயிற்சி இருநாளும் செய்யப்பட்டது.

நடிப்புத்தன்மையை வெளிக்காட்டும் இன்னொரு பயிற்சியாக; ஒருவரை அசைவொன்றை நிகழ்த்தக் கூறிய போது அவர் குடிபோதையில் நடிப்பதைப்போல் நடித்தார். திடீரென்று அவர் அதே அசைவில் நிறுத்தப்பட்டார். ஏனையோர் ஒவ்வொருவராக அவரருகில் சென்று தங்கள் சிந்தனைக்கிணங்க ஏதாவது செய்து அந்த இடத்திலேயே அந்த நிலையிலேயே அசையாது நிற்குமாறு கேட்கப்பட்டனர். ஒருவர் அவருக்கு அடிப்பதைப் போல் கையோங்கி நின்றார். இன்னொருவர் அதைப்பார்த்து தலையில் கைவைத்து அப்படியே உட்கார்ந்தார். இன்னொருவர் ஒரு கையை மடித்து இடது பக்கமாக கையைக் காட்டி தலையை இடது பக்கம் தொங்கலிட்டு 'இந்த வேடிக்கையைப் பாருங்கோ'' என்பதைப் போல வந்து நின்றார் இன்னொருவர் இவர்களுக்குப்பின்னால் குதிக்காலை உயர்த்தி எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தார். இந்த முறையானது எல்லோரையும் அதில் ஈடுபடத்தூண்டியது ஒவ்வொருவரும் வித்தியாசமான எண்ணங்களை வெளிப்படுத்தினார்கள். சிறிது சிறிதாக அந்த காட்சி வளர்ந்தது. இறுதியில் அந்தக் காட்சி எவரையும் மறக்கமுடியாமல் பண்ணியதென்றால் அது மிகையாகா.

இப்பயிற்சியின் போது எல்லோரையும் மகிழ்ச்சியான சூழலில் வைத்திருப்பதில் காட்டிய அக்கறை எல்லோரையும் பயிற்சினூடு ஒன்றச் செய்தது.

சிங்கள நாடக, சினிமா கலைஞரான றொஜர் செனவிரத்னா இரண்டாவது நாள் 'ஒரு எழுத்தாளரின் மரணம்' (இது அன்டன் செகோவ்ப் எனும் ரஷ்ய எழுத்தாளரின் 'The Death of Clerk' எனும் சிறுகதையைத் தழுவியது) எனும் நாடகத்தை பயிற்சியின் கலந்துநர்வுகளைக் கொண்டு நடிக்க வைத்தார் நாடகத்தின் முடிவில் அதில் உள்ள குறைநிறைகளை விளக்கினார். புதிய சில உத்திகளையும் நாடகத்தில் புகுத்தியிருந்தார்.

றொஜர் செனவிரத்னவின் விளக்கங்களை மொழிபெயர்த்து விளக்க வேண்டிய கட்டாயம் இருந்தமை ஓரளவு சலிப்பை ஏற்படுத்தியிருந்தாலும் வேற்று மொழியைச் சேர்ந்த கலைஞரிடமிருந்து வித்தியாசமான கருத்துக்களைப் பெறும் ஆர்வத்தில் சகித்துக் கொண்டிருந்த தன்மையைக் காணக்கூடியதாக இருந்தது.



பட்டறையில் பங்குபற்றுநர்களைக் கொண்டே ஐந்து குழுக்களாக அமைத்து அவர்களால் தயாரிக்கப்பட்ட ஐந்து நாடகமும் பட்டறையின் கணிசமான வெற்றிக்கான சாத்தியத்தைக் காட்டியது. ''வாழ்க்கை வாழ்வதற்கே'', ''விடையைத் தேடும் கேள்விகள்'', ''சிதறும் நெஞ்சங்கள்'', ''கல்வியில் களங்கம்'', ''மனித நேயம் மரணிக்கிறது'' எனும் தலைப்புகளைக் கொண்டு உடனடியாக தயாரிக்கப்பட்ட மேற்படி நாடகங்களில் உள்ளடக்கமாக மட்டக்களப்பு பிரதேச மக்கள் எதிர்நோக்கும் நடைமுறைப் பிரச்சினைகளை வெளிக்காட்டின.

முக்கியமாக ரியுசன் கல்வி, இராணுவத்தின் அடாவடித்தனம். காரணமாக ஏற்படும் உடல், உளப்பிரச்சினைகள், அத்தியாவசிய பொருட்களில் சில இன்னமும் பற்றாக்குறையாக இருப்பதால் ஏற்படும் விளைவுகள் என்பன எல்லோர் மனங்களிலும் பதியுமளவிற்கு தத்ரூபமாக செய்து காட்டியிருந்தார்கள்.

இரு நாளைய அமர்வுகளும் முடியும் போது கலந்து கொண்டவர்களின் உற்சாகத்தை தக்க வைப்பதற்காக ஒரு பாடல் பாடப்பட்டது. (அது பாலஸ்தீனக் கவிதை எனப் பின்னர் அறியக் கிடைத்தது)

''துயரங்களின் தோழர்களே
தலையுண்ட நண்பர்களே
வாருங்கள், வாருங்கள்
என்றென்றும் தோல்வியுறா
அணிவகுத்துச் சென்றிடுவோம்
வாருங்கள் வாருங்கள்''

எனும் பாடல், அதன் எழுச்சித் தன்மை வாய்ந்த மெட்டு எல்லோரையும் உண்மையிலேயே உற்சாகம் கொள்ளத்தான் வைத்தது.

பட்டறை முடிவின் போது அ.ரவி உரையாற்றுகையில் ''இப்பட்டறை உங்கள் மனத்தடைகள் அகற்றியிருந்தால் அதுவே இப்பட்டறையின் பெறுமதிமிக்க வேலை. தளைநீக்கத்துக்கான பட்டறையே இது...'' எனும் ஆழமான அமைதியான உரை பலரை உளவியல் ரீதியாக தாக்கச் செய்தது. அதனைப் பலர் பட்டறையின் முடிவில் குறிப்பிட்டார்கள்.

இந்தப் பயிற்சியின் சாத்தியப்பாடு பற்றிய சில கேள்விகளும் எழாமல் இல்லை. ஏறத்தாழ ஒரு நாடகம் மேடையேற்றப்படுவதற்கு முன்னர் கொடுக்கப்பட்ட விளக்கம், பயிற்சி என்பது போன்ற உணர்வுடனேயே இறுதியில் எஞ்சச் செய்தது. ஏனெனில் 'அரங்கவியல் அதன் வளர்ச்சி பற்றிய நடைமுறையில் தன் தன்மை தற்போதைய நிலை என்பன போன்ற அடிப்படை அறிவு வழங்கப்படவில்லை. அப்படி வழங்கப்பட்டிருந்தால் சில வேளை பூரண திருப்தியை வழங்கியிருக்கும். அதற்கான நேரம் போதாமை ஒரு காரணமானாலும் இவ்வாறான பயிற்சிப்பட்டறையில் நெறிப்படுத்தப்பட்ட விரிவுரைகளும் இருந்திருந்தால் கூடிய பலனை வழங்கியிருக்கலாம். இந்நிலையில் இப்பயிற்சிப்பட்டறை ஒரு நீண்ட கால மனப்பதிவை ஏற்படுத்துமா என்பது கேள்விக்குரியதே.



மட்டக்களப்பை பொறுத்தவரை 'நவீன அரங்கம்' (Modern Theatre) முறையின் அறிமுகப்படுத்துவதில் தவராஜா போன்ற சிலர் உழைத்திருக்கிறார்கள் என்பது பலரின் மூலம் அறியக்கிடைத்தது. இப்போது தான் இவை வளர்ந்து வருகிறது. இந்தச் சூழலில் இப்பட்டறை அதனை வளர்ச்சிக்கு நிச்சயமாக கணிசமான தாக்கத்தை செலுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிராஜாவுரிமையை இழந்த போதே உருப்படியான போராட்டமொன்று நடை பெற்றிருந்தால், அரசியல் கட்சிகள் மலையகத் தமிழ் மக்களை ஒதுக்கிவைத்திருந்து தங்கள் அரசியலை நடத்தியிருக்க முடியாது. அரசாங்கத்தின் ஓர் அங்கம் என்று சொல்கின்ற, மலையகத்தின் சக்திவாய்ந்த தலைவர்கள், "அரசாங்கத்துடன் பேசி பிராஜாவுரி

விட முன்னேற்றக்கழக அரசாங்கம் வடிகால் அமைத்துக் கொடுத்தது. கல்விகற்ற மலையக இளைஞர்களின் சிந்தனை எழுச்சியைக் கவனிப்பார் யாருமில்லை. மலையக மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த தொழிற்சங்கத் தலைவர்கள் இந்த எழுச்சி தங்கள் மூச்சைப் பறிக்க வந்த 'நஞ்சு" என நினைத்து ஒதுக்கினர். எழுச்சி

கிடந்தது. இந்த உத்தியோகஸ்தரின் ஆதிக்கமே பெரிய கங்காணிமார்களின் செல்வாக்குகள் குறைக்கப்பட்டபின் தோட்டங்களில் இடம்பிடித்துக் கொண்டது. தோட்டங்களின் பெரிய கங்காணிமாரின் ஆதிக்கம் குறைக்கப்பட்டதே ஒழிய அதன் அடிநாதம் அகற்றப்படவில்லை. இந்தச் சூழ்நிலையில் மலையக சமூகப் பிரச்சினைகளை வைத்து நாட

## மலையக அரசியலில் சமூக கலாசார அமைப்புகள்

மைப் பிரச்சினையைத் தீர்ப்போம் என பல ஆண்டுகாலமாக முழங்கிக் கொண்டிருந்திருக்க வேண்டிய அவசியமில்லை. காணி பெற்றுத் தருகிறோம், வீடு கட்டித்தருகிறோம், சம்பள உயர்வு பெற்றுத்தருகிறோம் என பத்திரிகை மூலம் கூக்குரலிட வேண்டிய அவசியமில்லை.

பெற்ற இளைஞர்கள் நாடகங்கள் நடத்துவதன் மூலமும், இரவுப் பாடசாலைகள் நடத்துவதன் மூலமும், பத்திரிகையில் எழுதுவதன் மூலமும் மலையக மக்களின் அபிலாசைகளை வெளிக்கொண்டுவர முயற்சித்தனர்.

மலையகத்தின் ஆரம்பகால கலை

கங்களை தோட்டங்களில் மேடையேற்ற முடியவில்லை.

மலையக சமூகப் பிரச்சினைகளை வைத்து நாடகங்கள் தயாரித்து அளிக்கும் மனப்பாங்கு முதலில் பாடசாலைகளில் ஏற்பட்டது. நகரங்களில் சில கலைக் குழுக்கள், சமூகப்பிரச்சினைகளை வைத்து

# இளைஞர் எழுச்சியும் திரட்சியும்!

அரசியல் உரிமையை இழந்த மக்களின் வாழ்வில் இருள் சூழ்ந்துவிட்டது. ஆங்கிலேயர் எப்படி இந்தமக்களின் வாழ்வைப்பற்றி அக்கறை கொள்ளவில்லையோ அதைப் போல் சுதந்திர இலங்கையை ஆண்ட கட்சிகளும் அவர்களின் நல்வாழ்வைப் பற்றி அக்கறை காட்டாத நிலை உருவாக்கப்பட்டது. பெரும்பான்மை மக்கள் மலையக மக்களை அந்நியர், பிழைக்க வந்த வந்தேறு குடிகள் என்ற கண்ணோட்டத்தோடு பார்த்து ஒதுங்கினர். இந்தப்பார்வையில் சகோதரத்துவம் இல்லை. பகை உணர்வும் படிப்படியாக வளர்ந்தது. இந்தப் பயங்கரமான சூழலுக்கு முகம் கொடுத்துக் கொண்டு, மரத்துப் போன உணர்வுடவேயே மலையக மக்கள் வாழ்ந்தனர்.

கஸ்ரமான, இக்கட்டான நிலையில் வாழ்ந்தபோதும் சிலர் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைத்தனர். அக்காலகட்டத்தில் கல்வி கற்றவர்கள் தங்கள் சமூகம்படும் இன்னல்களை பார்த்து வேதனை அடைந்தனர். வேதனைப்பட்ட உள்ளங்களிலிருந்து எழுச்சியான உணர்வுகள் முளைவிடத் தொடங்கியது. 1956ற்குப் பின் இலங்கையில் எற்ப்ட்ட அரசியல் எழுச்சி மலையகத்தில் கல்விகற்றவர்களிடம் தலை காட்டியது. இலக்கியப் படைப்புகள் மூலமும், கலைத்துறையின் மூலமும் தங்களின் எண்ணங்களை வெளிப்படுத்த முனைந்தனர். இலங்கையிலும், தமிழகத்திலும் எழுந்த சிந்தனை எழுச்சி, மலையகத்தில் கற்றவர் மனதிலும் எழுந்தது. தோட்டங்களில் தொழிற் சங்கங்களின் நடவடிக்கைகளுக்கு அப்பால், சமூக மட்டத்தில் சில செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

### இளைஞர்களின் சிந்தனை எழுச்சி:-

இலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்ட சமூக எழுச்சிக்கு அரசாங்கம் ஈடு கொடுத்தது. தமிழகத்தில் எழுந்த சமூக எழுச்சிக்கு திரா

அம்சங்களாக புராண நாடகங்களும், கூத்துக்களும், கரகாட்டம், காவடி, சிலம்படி, தப்பு, உறுமியாட்டம், ஒயிலாட்டம், கும்மி போன்றவைகள் இடம் பெற்றன. இவைகள் அனைத்தும் தமிழகத்தில் வழக்கில் இருந்த கலைகளாகும். பவளக்கொடி, சிறிவள்ளி, அல்லி அரசாணிமாலை, அர்ச்சுனன் தவசு, பொன்னர் சங்கர் போன்ற புராண நாடகங்களும், காமன் கூத்து போன்றவைகளும் தோட்டங்களில் நடைபெற்று வந்தன. தமிழகத்தில் இருந்து நாடக சபாக்கள் இங்குவந்து நாடகம் நடத்தியதோடு கலையார்வமுள்ள தொழிலாளர்களையும் தங்களுடன் இணைத்துக் கொண்டு பலபகுதிகளுக்கும் சென்று நாடகங்களை நடத்தினர். மலையக இளைஞர்கள் புராண நாடகங்களைத் தொடர்ந்து சினிமாக் கதைகளை நாடகமாகத் தயாரித்து மேடையேற்றினர். பின் தி.மு.காவின் செல்வாக்குப் பெற்ற நாடகமும் மேடையேற்றப்பட்டன.

மலையக சமூகப் பிரச்சினைகளை கருவாகக் கொண்டு இக்காலத்தில் நாடகங்கள் எழவில்லை. அந்த எண்ணங்கள் இளைஞர்களுக்கு இருந்தபோதிலும் தோட்டச் சூழ்நிலை அதற்கு இடம் கொடுக்கவில்லை. துணிவு படைத்த சில இளைஞர்கள் சமூக சீர்திருத்த நாடகங்களை மேடையேற்றினார்கள்.

நாடகங்களை மேடையேற்ற முயன்றுள்ளன. ஆனால் இவர்களுக்கு மண்டப வசதிகள் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது. உதாரணமாக இராகலையில் "தூக்குக்கயிறு" என்ற நாடகம் ஒன்று மேடையேற்றத் தயார் நிலையில் இருந்தது. இந்நாடகம் மலையக சமூகப்பிரச்சினை, தொழிற்சங்கப் பிரச்சினைகளை மையக்கருவாகக் கொண்டு எழுதப்பட்டதனாலாகும். இந்நாடகம் கடைசி நேரத்தில் அரசியல் தலையீட்டினால் மேடையேற்றப்படாமல் முறியடிக்கப்பட்டது. தொண்டர் ஸ்தாபனங்களால் தயாரித்தளிக்கப்பட்ட போட்டிகளில் மலையகப் பிரச்சினைகளை மையக் கருவாக வைத்து நாடகங்களும் கலை நிகழ்ச்சிகளும் மேடையேற்றுவதற்கு ஊக்குவிக்கப்பட்டது. மலையக மறுமலர்ச்சி மன்றம் (HACSEC) அட்டனில் இயங்கிய போது திருவாளர் பி.எஸ்.திருச்செந்தூரன் அதன் பிரதான நிர்வாகியாக கடமை ஏற்றார். இவரின் காலப்பகுதியில் நாடகப் பயிற்சிகள் இவ் அமைப்புகள் மூலம் இடம் பெற்றது. பல சிறு நாடகங்கள் இவ் அமைப்புக்குரிய அவ் மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது. இதன் மூலம் இயற்கையான நடிப்பு இளைஞர்களிடம் வளர்ந்தது. தோட்டங்களில் நடைமுறையில் காணப்பட்ட பிரச்சினைகள்

## வி.ரி.தர்மலிங்கம்

கலைஞர் மு.கருணாநிதியின் "நச்சுக்கோப்பை" நாடகத்தை மேடையேற்றிய போது அதில் காணப்பட்ட சாதியைச் சாடும் கருத்துக்களையும், வசனங்களையும் தோட்ட உத்தியோகத்தர் எதிர்த்தனர். நாடகத்தில் இடம் பெறும் பாத்திரங்களுக்கு ஏற்ப உடைகள் அணிந்து (லோங்ஸ்) நடித்ததைக் கூட பொறுத்துக் கொள்ள முடியாத உத்தியோகஸ்தர்கள் அக்காலத்தில் வாழ்ந்தனர். தொழிலாளர்களின் பிள்ளைகள் தங்களுடன் சமனாக வளரக்கூடாது என்ற எண்ணம் இவர்கள் மனதில் புரையோடிக்

மேடைக்குக் கொண்டு வரப்பட்டன. இதன் வளர்ச்சி அட்டனில் ஒரு கலைக்கூடத்திற்கு அத்திவாரம் போடும் அளவிற்கு சென்றது. ஆனால் 1983ன் ஆடிக் கலவரம் அனைத்தையும் அடக்கிவிட்டது.

உரும்

## அடித்து முறித்துப் போட்டதான சவுப்பு



விழிகளுக்கெட்டிய தூரமான வானத்தில்
வேர்கள் மட்டுமே
தொங்கிக் கொண்டிருந்தன
அந்தரத்தில்

அப்போதும்
மாடுகள் வந்தன, போயின;
மனிதர்கள் போனார்கள், வந்தார்கள்;
இடைக்கிடை மயில்களும் அகவின.

மேகப் பூச் செண்டுகள்
பாக்கு வெட்டிகளாலும்
கூர் இடுக்கைகளாலும்
குத்தியும் வெட்டியும்
நொருக்கிக் கொண்டிருந்தன
தன் இதழ் கட்டிகளை.

அருகில் இருக்கும்
இலுக்குப் பத்தைக்கும் உர்ரெனும்....
வல்லூறுச் சத்தங்களின் டியூனில்
பூச்சி புழுக்கள்
ஒன்றை ஒன்று அவதியில்
கவ்விக் கொள்ளுமே...

அந்த அப்பாவித் தனமான
பொழுது.

புறம்பாகவேனும் வானத்தில்
பூக்கள் பூக்கவில்லை
காய்கள் காய்க்கவில்லை

வானத்தின் உச்சாரத்தில் இருந்து
தற்சமயம்
துலக்கப்படாத ஒட்டறைகள்
விழுந்து விடுமோவென்ற கூச்சத்தில்
தற்பாதுகாப்புக்காக வேனும்
தலைக்கு மேலால்
தங்கள் கரங்களை உயர்த்திப் பிடித்தபடி
ஒடுங்கிக் கொண்டிருந்தன
காய்ந்திருந்த மரங்கள்.

பின் இருவருமான நாங்கள்
அவ்விடம்
தனிமைப் படுத்தப்பட்டோம்
ஒருவரை ஒருவர் உற்று நோக்கினோம்.

மிக அச்சமானது.

பீதியான என்னுடைய அவள்
எப்போதும் போலவே
கைகளால் நெய்யப்பட்ட
தனது கூந்தலை விரித்துக் கொண்டாள்
மேலுமான இருட்டுக்களைப்போல
நீண்டு அடர்ந்து கொண்டிருந்தது.
அதற்குள்
எங்களால் ஒழிந்து கொள்ளலாம் போலிருந்தது.
இன்னும் செக்கலாகின
அல்லது
கடும் மசண்டையாகின
மரத்தில் இருந்த கிளைகளும் முறிந்தன.

கந்துகள் ஆட ஆட...
அச்சமான நாங்கள்
ஒருவரை ஒருவர் இறுகப் பிடித்தோம்
உள்வாங்கினோம்
ஒத்துழைத்தோம், ஒழிந்திருந்தோம்

விழிகள் திறக்கவில்லை
இன்னும் விடியவில்லை.

மேலெல்லாம் பசைபசைத்தது
வேர்த்துக் கொட்டியது
அன்றைய ராவில்
ஈரத்தொப்பில்
மிகவுமேயான சுகத்தின் உச்சத்தில்
தங்களை அறவே மறந்த பரவசத்தில்
கட்டுண்டு கிடந்தோம்
காட்டுப்பனியில்.

ஓடி விளையாடும் குழந்தை
தரையில் விழுந்து கிடந்து
தனது கவுட்டுக்குள்
மணலை வாரி வாரி
அள்ளி, அணைத்து மகிழுமே...
அந்த உணர்வில்
அழகான சவுப்பில்.
என்ன நினைத்திருக்குமோ....
முன்பொரு கணம்
மூக்கானது நெடுத்த அவளால்
சற்றேனும் நான் அழைக்கப்படாத திருமணத்தின்
மார்ச் பத்தொன்பதாவது தினத்தின்
பலத்த கொடுமையைப் போல
வெறிச்சோடிப் போய்
சோர்ந்து கிடந்த அந்த ஆலமரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உடைத்துப்போட்ட தெருவிளக்கு

''அந்த கேவில இருந்த லைற்ற ஆரோ உடைச்சுப் போட்டினம்''
பல் மினுக்க முதல்லேயே இந்தச் செய்திதான் எனக்குப் பற்பொடியாய் வந்தது.
எனக்குச் செம சந்தோசம்.
அத் உடைக்க வேணும் எண்டு நானே எண்ணிக் கொண்டிருந்த நான் ஆரோ உடைச்சுப் போட்டினம்.
பின்ன, அது என்ன சும்மா லைற்றே?

எத்தனைபேர்ர பச்சை ரெத்தம் பார்த்திருக்கும் எத்தினை பேர்ர ரெத்தத்தால அதுர கட்டைக்குப் பட்டை போட்டிருக்கும். அரசாங்கம் போடேக்கை முப்பதடிக்கும் கறுப்பாத்தான் இருந்தது. இப்ப ஏனோ தெரியாது. ஒரு அஞ்சு - ஆறடி உயரத்திக்கு சிவப்பாத்தான் கிடக்கு. அதுகும் முன் பக்கம் கொஞ்சம் கூடுன சிவப்பு. ம்ம்ம்.....அத உடைக்கத்தான் வேணும்.
அப்புட சவத்தைக் கொண்டு வந்து கட்டேக்கை பக்குப் பக்கெண்டு முழிச்சுக் கொண்டுதானே இருந்தது. அப்ப இது ஒரு வார்த்தை சொல்லிச்சுதோ 'அப்பு ஒண்டுமே செய்யயில்லயெண்டு' ஓ! இதுக்குப் பேசத் தெரியாது போல, பேசத் தெரியாட்டியென்ன ஒருக்காத் தன்ன நூத்துக் கொண்டாச்சிலும் எதிர்ப்பக் காட்டியிருக்கலாம் தானே.

அட அதவிடுவம் இது காட்டியென்ன, காட்டமலென்ன, எதிர்ப்புக் காட்டியிருந்தா அப்பு என்ன பிழைச்சிருப்பாரே?

எண்டாலும் இத உடைச்சது மட்டும் எனக்குச் சந்தோசமாத்தான் கிடக்கு. ராத்திரிகள்ல இந்த லைற்றிட வெளிச்சத்தக் காணுற நேரமெல்லாம் செத்துப் போற நான்.

ஓம், அப்புவிட்டப் போறநான்.
அப்பு செத்துப் போயிற்றாரு, நான் அப்புவிட்டப் போரதெண்டால் நானும் செத்துத்தானே போக வேணும்.
நான் அடிக்கடி கூப்பிடுற நான்
''அப்பு, நான் செத்துச் செத்து பிழைக்கிற மாதிரி, நீங்களும் ஒருக்காப் பிழைச்சுப் பாருங்கோ எண்டு''

அவர், மாட்டன் எண்டு சொல்லிப் போடுவார், அவருக்கு இந்த ஊரை விட அங்காளை எல்லாமே சுகமாகக் கிடக்குதாம். என்னைப்பத்தின கவலையைத் தவிர வேற ஒண்டுமே இல்லயாம்.

ம்ம்ம்.... அன்னேரம் உசிரோடை இருக்கேக்கை எவ்வளவெல்லாம் சொல்லுவாரு.
''இந்த ஊர்தான் எண்ட உயிர். எங்கடை சனத்தின்ர முன்னேற்றம்தான் என்ர சுவாசம், எங்கட சனத்திலயிருந்தும் நாலு எஞ்சினியர், நாலு டொக்டர் நாலு வாத்தி வரோணும். வந்து அவங்க நாற்பது மடங்காய்ச் பெருப்பிச்சுக் காட்டோணும்.....'' இப்படி எவ்வளவோல்லாம் சொல்லுவாரு.

எனக்கெண்டால் அப்புசொல்றதெல்லாம் அவ்வளவாய் பிடிக்கிறயில்ல. எனக்கு, எங்கட ஊரில அப்பு மட்டுமே அரசாங்க உத்தியோகம் பார்க்கிறத நினைச்சுப் பெருமையிலும் பெருமை.

''வாத்யார்ர பெட்டியன், வாத்தியார்ர பெடியன்'' எண்டு என்ன மட்டும்தான் கூப்பிட வேணும் எண்டு கொள்ளை ஆசை.
எங்கட பள்ளிக்கூடத்திலை நான் எண்டு சொன்னால் எல்லாப் பெடியன்களும் கொஞ்சம் பயப்பிடுவாங்கள், பள்ளியில மட்டுமென்ன, வெளியிலயுந்தான். பக்கத்து வீட்டுப் பெடியனுகளோட சேர்ந்து மாங்காய் களவெடுக்கப் போற நான், எனக்கு மரத்தில ஏறத் தெரியாது. ஆனா அவங்கள் ஏறி எனக்கும் சேர்த்துப் பிடுங்கித் தருவாங்கள். அதிலயும் நான்தான் முதல்க் கடிகடிக்க வேணும்.

ஆக்களின்ர பல்லுப்பட்டதச் சாப்பிடக்கூடாதெண்டு அப்பு பள்ளியிலயும் வீட்டிலயும் வெச்சு, ஒரே சொல்லித் தாரவரு.
என்ர கூட்டாளிமாருக்கும் இது தெரியும்தான். ஆனாலும் அவங்க ஒண்டுமே பேசமாட்டாங்கள். அவங்களுக்கு எப்படியோ மாங்காய் கிடைச்சால் சரியெண்ட மாதிரித்தான். இல்லாட்டியும் என்ன எதிர்த்துப் பேசேலுமே?

அப்புவிட்டச் சொல்லி அடிவேண்டித் தந்திருவனோ எண்டு பயம். அவங்களுக்குத் தெரியாது, நான் மாங்காய் களவெடுக்கப் போரதத் தெரிஞ்சாலே அப்பு என்ர தோலை உரிச்சுப் போடுவாரெண்டு.

அப்புவுக்கு கோபம் வந்தால் நான் அவர்ர முகத்தப் பார்க்க மாட்டன். பார்க்க ஏலாது. கண்ரெண்டும் வெளியில பிதுங்க, உதடு ரெண்டங்குலம் முன்னுக்கு வரும். அவரு அடிக்கத் தேவையில்ல, இப்பிடிப்பார்த்தாலே போதும். இப்பிடிப் பார்த்துப் பார்த்தே கனநாள் என்ர காற்சட்டையை ஈரமாக்க வைச்சிருக்காரு.

ஆனா, அப்பு ஒரு நாளும் எனக்கு அடிக்கயில்ல அடிக்காட்டியும் எனக்குப்பயம் போறதில்ல.

இப்படித்தான் ஒருநாள், நான் அப்புவிட்டச் சொல்லாம பெடியன்களோட இரவில பக்கத்தூர் கோயிலுக்கு நாடகம் பார்க்கப் போட்டன். அன்னேரம் நாங்க எந்த நேரத்திலயும் போகலாம். பேய்க்கு மட்டும்தான் கொஞ்சம் பயம்.



அதுகும் பெடியன்களோட சேர்ந்து போகேக்கை பயம் அவ்வளவாய்க் காட்டிறயில்ல.

போன இடத்தில எனக்குச் சரியான கறள் ஆணி ஒண்டு குத்திப் போட்டுது. என்ர காலெல்லாம் ரெத்தம். எனக்கு வீட்ட போக வேணும் போல கிடந்தது. அவங்கள் நாடகம் பார்க்கிற உஷாரில மாட்டன் எண்டு சொல்லிப் போட்டான்கள். அவங்களுக்கென்ன, அவங்கட கால்லயே குத்தினது. நான் கெந்திக் கெந்தி ஓடி வாரன். கால்ல மண் அப்பிப் பிசுபிசுப்பர்ய்க் கிடந்தது. ஆச்சி சொல்ர பேய்க்கதையெல்லாம் ஞாபகத்தில் வந்து பயம் காட்டிச்சு.

ஆச்சி சொல்றவ, வேப்பமரத்தில வைரவன் இருக்காம், வைரவன் இருக்கிற இடத்தில பேய் முடுகாதாம் எண்டு. எனக்கு வைரவெனெண்டாலும் பயம்தான். ஆனால் பேயெண்டால் இன்னும் பயம். நான் வேப்பமரம் கூட இருக்கிற ரோட்டாப் பார்த்து ஓடிவாரன். எப்பிடியோ இளைக்க, இளைக்க வீட்ட வந்து சேர்ந்திட்டன். நான் வரும் வரைக்கும் அப்பு நித்திரை கொள்ளாம சிமிலி லாம்பை அரை வாசியாகத் தூண்டி விட்டுக் கொண்டு அவர்ர சாய்மானைக் கதிரையில படுத்துக் கிடந்தாரு.

ஆச்சி எப்பவோ தூங்கியிருக்க வேணும். ஆச்சியெண்டால் அப்புட அம்மா. என்னக் கண்டதும் அப்பு ஆத்திரத்தோட அடிக்கிறதுக்குக் கையை ஓங்கிக் கொண்டு வந்தாரு.

நான் கண்ணமூடிக் கொண்டே கெந்திக் கெந்தி நடந்தன். என்னப்பிடிச்சு ஒரு கை நிப்பாட்டிச்சு. பிறகு என்ர காலைத்தூக்கிச்சு. இது ரெண்டும்தான் என்னால உணர முடிஞ்சுது. பிறகு,

'படீர் படீர்' எண்டு சத்தம்தான் கேட்டிச்சு. கண்ண முழிச்சுப் பார்த்தன்.அப்பு அவர்ர தலையில அவரே அடிச்சுக் கொண்டிருந்தாரு. இந்தச் சத்தம் கேட்டு ஆச்சி ஓடி வந்தா. என்ர முதுகில ரெண்டு வச்சா, பிறகும் அடிக்க அப்பு விடயில்ல.

''அவன் காயத்தோட வந்திருக்கான் அடிக்காதீங்கோ அம்மா'' எண்டு தடுத்துப் போட்டாரு. ஆச்சி என்ர கண்ணைத் துடைச்சு விட்டுற்று காயத்தையும் துடைச்சா. பிறகு கொஞ்சம் மண்ணெண்ணைய காயத்தில விட்டா. நான் துடிச்சன். ஆச்சி என்ர த்லையத்தடவி மெல்லமாச் சிரிச்சா.

ஆச்சி என்னைப் பார்த்துச் சிரிச்சாலும், எனக்கு ஆச்சியோட கோபமாய்த்தான் இருந்தது. அடிச்ச அடுத்த நிமிஷமே அம்மா எண்டால் காயத்தோட வந்திருக்கிற எனக்கு இப்படி அடிச்சிருப்பாவோ'' எண்டுதான் நினைச்ச நான்.
ஓ! நான் என்ர அம்மாவைப் பத்தியொண்டும் சொல்லாமில்லயென்ன? எனக்கு அம்மாவத் தெரியாது.

நான் பிறக்கும் போதுதான் அம்மா செத்துப் போனாவாம். போட்டோவைக் காட்டினாங்கள் அம்மா எண்டு.
சின்னப்பிள்ளையாய் இருக்கேக்கை ''அம்மா'' எண்டு கூப்பிடுவன் அவ பேசமாட்டா. பிறகுதான் தெரிஞ்சுது அது யோட்டோ எண்டு. ஆனா போட்டோ என்டால் என்னெண்டு தெரியயில்ல. அம்மா பேசமாட்டா ஏண்டு மட்டும் தெரிஞ்சுது.

அடுத்த நாள் அப்பு என்ன ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக் கொண்டு போனாரு. அங்க ஊசியெல்லாம் போட்டாங்கள். வலிதாங்காம நான் கத்திக் கத்தி அழேக்கை அப்புட கண்ணிலயும் தண்ணியப் பார்த்த நான். அண்டைக்குத்தான் அப்புட கண்ணில முதன் முதல் தண்ணியக் கண்ட ந்ான். அதுக்குப் பிறகு நான் அவ்வளவாய்க் குழப்படியொண்டும் செய்யிறயில்ல. அப்பு என்ன சொன்னாலும் கேட்டுக் கொண்டு நல்ல பிள்ளையா நடப்பன். அப்பு என்னக் கூட்டிக் கொண்டு ஆத்தோரத்துக்குப் போவாரு, கடற்கரைக்குப் போவாரு, படத்துக்குப் போவாரு. (எனக்குப் பீப்பில போரதெண்டால் சரியான விருப்பம்) ஒருநாள் அம்மாவைப் புதைச்சு இருக்கிற இடத்துக்குக் கொண்டு போய் ஒரு கட்டிடத்தைக் காட்டி,

''இதுதான் மகன் உன்ர அம்மாட கல்லறை. இதுக்குள்ளதான் மகன் அம்மா நித்திரை கொள்ளுறாவு'', எண்டாரு. எனக்கு அம்மா எப்படி நித்திரை கொள்றா எண்டு பார்க்க ஆசை. ஆனால் அப்பு விட்டச் சொல்லயில்ல.

அப்பு அந்தக் கட்டிடத்தையே கொஞ்ச நேரம் முறைச்சுப் பார்த்துக் கொண்டு நிண்டாரு. பிறகு என்ர விரலைப் பிடிச்சுக் கொண்டு விறு, விறுவெண்டு திரும்பிற்றாரு.

இன்னும் கொஞ்சக் காலம் அப்புட சொல்லக் கேட்டுக் கொண்டு நல்ல பிள்ளையாய் நடந்தன்.

ஆனால் அப்பு மட்டும் வரவர மாறத் தொடக்கிற்றாரு. என்னேரமும் யோசிச்சுக் கொண்டிருப்பாரு, ''சே...சே'' என்று தன்பாட்டில சொல்லிக் கொள்ளுவாரு. ராத்திரகள்ல நெடுநேரம் மட்டும் முழிச்சிருந்து எழுதிக் கொண்டிருப்பாரு. நான் எட்டு மணிக்கே நித்திர போர நான். பயங்காரக் கனவேதும் கண்டால் எந்த நேரத்திலும் முழிப்பு வந்து விடும் எனக்கு. அப்பிடி முழிக்கிற நேரம் அப்புவைப் பார்த்தால் அவரு மோட்டைப் பார்க்கிறதும் தலையாட்டிறதும் எழுதுறதுமாய் முழிச்சிக் கொண்டிருப்பாரு, எப்ப படுப்பாரு எண்டு எனக்கெண்டால் தெரியாது.

அப்பு மட்டுமென்ன, ஊரும்தான் மாறத் தொடங்கிச்சு. சந்திக்குச் சந்தியும் கோவில் மடத்திலயும் கடதாசி விளையாடுற ஆக்கள் எல்லாம் விளையாட்டை மறந்து எதைப்பற்றியோல்லாம் பெரிசா வாக்கு வாதம் பண்ணினாங்கள்.

சில நேரங்கள்ள கோவில் மரத்தடியில எல்லாரும் கூடுவினம். அப்புதான் பேசுவாரு. ஆக்கள் எல்லாம் அங்க, இங்க பார்க்காமல் அசையாமல் அப்புவையே பார்த்துக் கொண்டிருப்பாங்க.

www.tamilarangam.net



''என்ன இருக்கிறது எங்களுக்கு? ஏன் வாழ வேண்டும் இப்படி? எண்ணிப் பாருங்கள், பக்கத்து ஊரோடு ஒப்புப் பாருங்கள். ஒழுங்கான ஒரு தெரு இருக்கிறதா? ஒரு தபால் நிலையம்? ஒரு சங்கக்கடை? எது? எது இருக்கிறது? ஆக, ஒரு பள்ளிக்கூடம் மட்டும் அதுவும் மாரி வந்தால் மூடினமாதிரி. சரி எல்லாம் விடுவோம் ஒரு பிரசவத்தை அவசரமாய்ப் பார்க்க ஒரு ஆஸ்பத்திரி? இல்லை! எதுவுமே இல்லை! இதுவும் இல்லை! இல்லை என்பதே எமது குறியீடு.

எத்தனை பெண்கள் ஈன்ற பிள்ளையின் முகம் பார்க்காமலே மாண்டு போனார்கள். சுந்தரத்தின் தேவகி போல், சிவலிங்கத்தின் கமலத்தைப் போல், என் ஜானகி போல் எத்தனை பேர் இப்படி....''

அப்பு ஒருநாளும் பேசி முடிக்கமாட்டாரு, தொண்டை அடைச்சுப் போயிடும்.

ஒருநாள் அப்பு வரும் போதே சிரிச்சுக் கொண்டு வந்தாரு நேரே அம்மாட போட்டோக்குக் கிட்டப் போனரு.

எல்லாம் சரிவரும். இனி எல்லாம் சரிவரும் ஜானகி. எங்கட பிள்ளைகள் முழிச்சிற்றான்கள், எழுந்திட்டாங்கள், இனி எல்லாம் சரிவரும்'' அப்பு சொல்லேக்கை கண்ணில நீர் முட்டி நீண்டது.

அதுக்குப் பிறகு, எங்கட வீட்டிற்கும் புதுப்புது அண்ணமார் எல்லாம் வந்தினம். அவங்கள் வந்தால், அப்பு அவங்களைக் கூட்டிக் கொண்டு அவர்ர அறைக்குப் போவாரு.

கனநேரத்துக்குக் கதைக்கிற சத்தம் கேட்கும். சிலவேளை அந்த அண்ணாமார் எங்கட மண்டபத்திலேயே படுத்துக் கொள்ளுவினம்.

இடுப்புல ஏதோ கட்டியிருக்கிறமாதிரி கூட்டிக் கட்டின அவங்கட ஒரு பக்கத்துச்சாரன் உப்பித் தெரியும். அதைத் தொட்டுப்பார்க்க எனக்குச் சரியான ஆசை. அவங்கள் விடமாட்டாங்கள். அதுக்குள்ள பாம்பிருக்குது எண்டு சொல்லுவாங்கள். அதுக்குப் பிறகு நான் அவங்களுக்குக் கிட்டப் போறயில்ல. சிலநேரம் யோசிக்கற நான் பாம்பு இவங்களைக் கடிக்காதோ எண்டு. கேக்கப்பயம். பாம்பை வெளியில விட்டிற்றா?

பாம்புக்கார அண்ணாமாரை ரோட்டிலயும் காணுறநான். ஆக்களும் அவங்களைக் கண்டால் தள்ளித்தான் நிப்பாங்கள். உடன உண்மையா நம்பித்தன் இவங்கள் பாம்புக்காரங்கள் தான். கூட்டங்களுக்கும் அப்புவோட அவங்களும் வந்தாங்கள். அப்பு பேசிறது குறைஞ்சு போச்சு. அந்த நெடிய அண்ணாதான் கனக்கப் பேசுவார். நல்லாத்தான் பேசுவார். இப்பயும் ஆக்கள் அசையாமல் ஆடாமல்... அப்புவப் பார்த்த மாதிரி பார்த்துக் கொண்டிருப்பாங்கள்.

''பெடியன் நல்லாப் பேசிறான்''

''பாவம் எங்களுக்காக எவ்வளவு கஷ்டப்படு

இருக்கிற பாம்போட தோள்ள கருப்புக் குழலும் தொங்கிக் கிடக்கும். இது மாதிரி நீட்டுக் குழல் ஒண்ட எங்களுக்கு மான் இறைச்சி தார நடேசண்ணண்ட கையிலயும் கண்டதாய் எனக்கு ஞாபகம். அதாலதான் அவரு மானைச் சுடுற எண்டு சொல்லுவாங்கள்.

சுடுறது எண்டால் எனக்கு எப்படியெண்டு தெரியாது. இவங்களும் இதாலதான் பாம்பையும் சுட்டிருப்பாங்கள் எண்டு நினைச்சன்.

முன்னை மாதிரியல்லாமல் கனக்க அண்ணமார், புதுப்புது அண்ணமார் எல்லாம் வந்தாங்கள். ஒரு நாள் வரும் போதே அப்புடமுகம் தொங்கிக் கிடந்தது. அண்டைக்கு மாதிரியே நேரே அம்மாட போட்டோக்குக் கிட்டப் போனாரு.

''போச்சு எல்லாம் போச்சுது. ஜானகி, இவங்கள் குடும்பத்திற்குள்ளேயே அடிபடுறாங்கள். போச்சு என்ர கனவு, உன்ர கனவு, கனவின்ர கனவு எல்லாம் போச்சுது''

அண்டைக்கு வீட்ட வந்த பாம்புக்கார அண்ணாமாருக்கும் அப்பாவுக்கும் இடையில உரத்த சத்தத்தில வாக்குவாதம் நடந்திச்சுது. கடைசியாக இனிமேல் வீட்ட வரவேண்டாம் எண்டு அப்பு சொல்லிப்போட்டாரு.

அடுத்த நாள் வேற பாம்புக்கார அண்ணமார் வந்தாங்கள். அவங்களோடும் அதே மாதிரித்தான். சனங்களைக் கூப்பிட்டு அப்பு எல்லாம் சொன்னாரு. அதுதான் அவர்ர கடைசிக் கூட்டம். அதுக்குப் பிறகு அவர் கூட்டத்துக்குப் போகயில்ல, போக விரும்பயுமில்ல, போக இருக்கயுமில்ல.

இந்தக் கரண்ட கட்டையில கட்டையாய்க் கிடந்துதான் கூட்டம் கூட்டினாரு. அப்புட சவத்தைப் பார்க்க கூட்டம் கூட்டமா வந்தினம், பாத்தினம். ஒண்டுமே பேசயில்ல போயினம்.

ஆச்சி மட்டும் நெஞ்சிலடிச்சி அழுதா, மண் அள்ளித்திட்டினா, ஏனெண்டு விளங்காயலே நானும் அழுதன். அப்புவப் பார்த்து விம்மினன்
''

எனக்கு இப்ப ந்த கரண்ட கட்டையை பார்க்க வேணும் போல இருக்குது. போறன் ஆ.அந்தா தெரியுது.

குலை வெட்டின பனமரம் போல, லைற்றை இழந்து ஒத்தையாய் நிக்குது. கிட்டப் போரன். கீழே கண்ணாடித் துண்டுகள் சிதறிக் கிடக்குது.

''ஊருக்கே வெளிச்சம் குடுக்க மாதிரி இருந்தது. ஆரோ கோதாரி பிடிச்சதுகள் உடைச்சுப் போட்டுதுகள்''

ஒருவன் நிண்டு பார்த்து விட்டு இப்படிச் சொல்லி விட்டு போனான். எனக்கு மின்னல டிச்ச மாதிரி ஆச்சி திட்டினது ஞாபகம் வந்தது.

## திருக்கோவில் கவியுவன்

கிறாங்கள்''

பின்னுக்கிருக்கிற ஆக்கள் எல்லாம் இப்படி ஒவ்வொண்டைச் சொன்னாங்கள். எனக்கும் பாம்புக்கார அண்ணமார் மீது விருப்பம் வந்திச்சுது.

கொஞ்சக் காலத்தில எங்கட ஊரில ரோட்டுகள் எல்லாம் திருத்தினாங்கள். சில ரோட்டுக்கள்ள கறுப்புக் கறுப்பாக் கட்டையெல்லாம் கொண்டு வந்து போட்டாங்கள். ரோட்டோரம் இருந்த மரங்களையெல்லாம் வெட்டானாங்கள்.

ஆண்டுக்கொருக்கா ஊசி போடுற சோதினகாரய்யா வாரமாதிரி இப்ப ஒவ்வொரு சனியிலும் ஊசிப் பெட்டியோட அஞ்சாறு பொம்பிளையளும், ரண்டு மூண்டு ஆம்பிளையளும் பள்ளிக்கு வந்து, பள்ளிக்கூடம் போகாத ஆக்களுக்கும் ஊசிப் போட்டாங்க, மருந்து குடுத்தாங்க. பாழடைஞ்ச வளவொன்றில் கட்டிடம் ஒண்டு எழும்பிச்சுது. அதுதானாம் ஆஸ்பத்திரியெண்டாங்கள். பிறகு கரண்டு வந்தது. லைற்றும் வந்தது. அப்புதான் முதன் முதலாய் லைற்றிட சுவிச்சுப் போட்டார்.

அப்புட முகத்தில இப்ப ஒரே செஞ்சலிப்பு. என்னேரமும் சிரிப்பு. கிழமைக்கு ரெண்டு மூணுதரம் பாம்புக்கார அண்ணாமாருக்கு விருந்து நடக்கும். இப்பெல்லாம் இடுப்பில

''டேய்! உன்ரை கொப்பு, இந்த ஊருக்கே தொண்டு செய்தானேடா பாடையில போறவங்கள் இப்படிச் செய்து போட்டாங்களேடா''

நான் கட்டையைப் பார்க்கிறேன். அப்புவ இழந்த என்னைப் போல, லைற்றை இழந்து அதுவும் ஒத்தையாய் .......பாவம்!

ஓடிப் போய் கட்டிப்பிடிச்சன். முன்னுக்கும் பின்னுக்கும் தடவிக்குடுத்தன்.

''பூரணைக்கு முத்திட்டது போல கிடக்கு'' ஒருவன் என்னைப் பார்த்துச் சொல்லிற்றுப் போனான். தோளை ஆரோ தொட்ட மாதிரியிருந்திச்சுது. திரும்பிப் பார்த்தன். ஆச்சி நிண்டா.

''ஆச்சி பூரணைக்கு முத்திட்டுது எண்டால் என்ன ஆச்சி'' அவ பேசாமல் நிண்டா. நான் உலுக்கிக் கேட்டன்.

''வெளிக்கிடு ராசா, நாம எங்கயாச்சும் கண் காணா தேசத்துக்குப் போவம்'' எண்டா.

இந்தா, இப்ப ஆச்சிர விரலைப் பிடிச்சுக் கொண்டு பின்னால போறன். கரண்ட கட்டையில விட்டுக் கனக்கத் தூரம் வந்தாச்சு. திரும்பிப்பார்க்கிறன். பாவம் அது ஒத்தையாய் தடவிக் குடுக்க ஆளில்லாமல்........

# சிறு புத்தகங்கள் நிகழ்வுகள் சிறு குறிப்புகள்




**ஒரு ஜனனத்தின் அஸ்தமனம்.**
**நீர்கொழும்பூர் முத்துலிங்கம்.**
**வெளியீடு: தேசிய கலை இலக்கியப்பேரவை.**

!. முன்னுரையில் குறிப்பிட்டதைப் போல, சரசு, கௌரி, அவள் குழந்தை ஆகிய மூன்று தலைமுறைகளைச் சந்தித்த கணபதிப்பிள்ளை (கணபதி சாமி) யின் கதையைக் கூறும் இந்நாவல் கௌரியின் அஸ்தமன காலத்திலிருந்து ஆரம்பித்து முன்னோக்கிச் செல்கிறது.

2. இந்நாவலில் வரும் சகல பாத்திரங்களும், ஏன் ஒரே ஒரு தடவை வந்துபோகும் மாதா கோவில் பாதிரியாரும் மனதில் நிற்கக் கூடிய அளவு நன்கு இயக்கப்பட்டுள்ளனர்.

3. கணபதியின் இந்து மதத்தீவிரப்பற்றும், பொன்னாச்சிப்பாட்டி கிறீஸ்தவ மதத்திற்கு மாறாதிருந்தும் யேசுவையும் முருகனையும் ஒன்று போல் மதிக்கும் சமரசப் பாங்கும், பாதிரியாரின் கல்லறையையே வணக்கஸ்தலம் போல் கொண்டொழுகியமையும், பாதிரிமார் சமூக சேவை எனும் பெயருடன் மதமாற்றத்தினை இணைப்பவர்கள் எனும் பொதுவான எண்ணத்தைப் போக்கும் வகையில் பிரான்சிஸ் சுவாமியார் அந்தோனி ஆகியோரது பாத்திரப் படைப்பும் அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

இக்குறிப்புகள் நாவலைப் பற்றியது. சில சிறுகதைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. உருவெளி மனிதர்கள், சில நிஜங்கள், அக்கினி, ஒருமகன் தன் தாயைத்தேடுகிறான், விசாரம் ஆகிய கதைகளும் இதனுள் அடங்கும். சிறுகதைகள் பற்றிப் பெரிதாகச் சொல்ல ஒன்றுமில்லை. வழமையான வீரகேசரியின் சிறுகதைகள் தான்.

முடிவாக நீர்கொழும்பூர் முத்துலிங்கம் இன்னும் தரமான உடைப்புகள் தருவதற்கு இடம் உண்டு.




**'எழுதுவதைத் தவிர வேறு வழியில்லை'**
**எம்.பௌஸர்**
**தடம் வெளியீடு**

''தமிழில் 'பசுவய்யாவின்' கவிதைப் படைப்புகளைப் போல நான் ஒரு கவிதையும் எழுதவில்லை'' என்று ஆதங்கப்படுகிற பௌஸரின் கவிதைகள். இவ்வாறு ஆதங்கப்படுகிற அளவுக்கு பசுவய்யா என்ன எழுதி இருக்கிறார் எனும் கேள்வி ஒருபுறம் இருக்கட்டும். பசுவய்யாவின் மனதைத் தொடாத கவிதைகளுடன் ஒப்பிடுகிற போது பௌஸரின் சில கவிதைகள் மனசைத் தொடுகிறது.

''ஒரு பூவைப் போலிருந்த/ எனது கிராமம்/ பிணந்தின்னிக் கழுகுகளின்/ கூடாரமாயிற்று ஒரு பகற் பொழுதில்.''

என்று தொகுப்பில் வருகிற பல வரிகள் அவ்வாறனவை. காதலையும், அரசியலையும் ஒரு பேனாவே எழுதியது என்பது ஆச்சரியமாக இருக்கிறது. காதலைப் போலவே அரசியலையும் மென்மையாகச் சொல்கிற இதயம் இவர்க்கு வாய்த்திருக்கிறது.

''வந்தார்கள், போனார்கள்/ விழிகளை உருட்டித் திரட்டி/ வஞ்சினத்துடன் பார்த்தார்கள்/ நான் அறுவைக்கு கட்டி வைக்கப்பட்டிருந்த/ ஆடு போல்/ இருந்திருக்க வேண்டும்/ இன்றுவரை விசாரிக்கப்படவில்லை/ சுடுவதாகத் தீர்மானித்திருந்தால்/ கதை முடிந்திருக்கும்..../ இருள் எங்கும் பரவிக்கிடக்க/ பின்னறையில் கதைப்பது/ தெளிவாய்க் கேட்குது/ ''நள்ளிரவில் அந்த நாயை/ டயர் போட்டு எரித்து விடுங்கள்'' என்று.

இந்த மொழிநடை இவர் தொகுப்பில் பல கவிதையில் வந்து விழுகிறது. வாசித்து முடிக்கிற போது சுமாரான ஒரு கவிதைத் தொகுதி என்று தான் சொல்லலாம்.

பின்வரும் வரிகள் உமா வரதராஜன் சம்பந்தப்பட்டது. தொகுப்பில் உமா வரதராஜன் சிறுகுறிப்பு எழுதியிருந்தார். புரட்சி பற்றிக் கவிதை எழுதியவர்களும், போராட்டம் குறித்துக் கவிதை எழுதியவர்களும் உமா வரதராஜனின் கிண்டலுக்கு ஆளாகியிருக்கிறார்கள். இத்தகைய கவிதைகளில் போலியும் உண்டு. நேர்மையான கவிதையாக எழுதியவையும் உண்டு. உமா வரதராஜன் இதனை இனங்காணத் தவறி விடுகின்றார். அவர் இதனைக் கவனிப்பது நலம்.

# முகங்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண்களின் குரல்: அரசியல் கட்சிகளுக்கு ஏழு கோரிக்கைகள்!

அரசியல் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்படுவதற்காக பெண்ணுரிமை அமைப்புகள் ஒன்றிணைந்து முக்கியமான கோரிக்கைகளை முன்வைத்துள்ளன. அவற்றின் சாராம்சம்:

முதலாவது கோரிக்கை பெண்கள் பட்டயம் (Women's Charts) தொடர்பானது. மார்ச் 1993 இல் அமைச்சரவையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பெண்கள் பட்டயம் இன்னும் சட்டமாக்கப்படவில்லை. எனவே அது சட்டமாக்கப்பட வேண்டும் என்பதோடு தேசியப் பெண்கள் ஆணைக்குழு ஒன்றும் நியமிக்கப்பட வேண்டும்.

இரண்டாவது கோரிக்கை தனித்தனியாக இயங்கிவரும் பெண்கள் பணியகம், பெண்கள் விவகாரம் தொடர்பான அமைச்சு இரண்டையும் ஒரேயமைப்பாகத் திட்டமிடல் திட்ட அமுலாக்கல் அமைச்சோடு சேர்க்க வேண்டும் என்பதாகும்.

சட்டச் சீர்திருத்தங்கள் பற்றிய மூன்றாவது கோரிக்கை, பெண்களுக்கான திருமண வயதை 12இலிருந்து 16ஆக உயர்த்த வேண்டும் எனவும் விவாகரத்துச் சட்டங்கள் முற்றாகச் சீரமைக்கப்பட வேண்டும், எனவும் நிலவுரிமை பெண்களுக்கு சமமான முறையில் கிடைக்கும் வகையில் 1935ஆம் ஆண்டின் சட்டங்கள் திருத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது. மேலும் பாலியல் வன்முறை தொடர்பான சட்டமூலங்கள் திருத்தப்பட வேண்டும். குடும்ப வன்முறை, தகாப்புணர்வு, பாலியல் இம்சை போன்ற அம்சங்கள் தொடர்பான சட்டமூலங்கள் வரையப்பட வேண்டும்.

பொருளாதார நடவடிக்கைகள் பற்றிய கோரிக்கை நான்காவதாகும். எல்லாத் தொழில் வாய்ப்புகளிலும் பெண்களுக்குச் சமமான வாய்ப்புகள் தரப்பட வேண்டும். தோட்டங்கள், சுதந்திர வர்த்தக வலயங்களில் வேலைத்தள நிலைமைகள், சுகாதார வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். தொழிற்சங்க உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

கல்வி சம்பந்தமான ஐந்தாவது கோரிக்கை கட்டாயக் கல்வியை வலியுறுத்துகிறது. 2000ஆம் ஆண்டளவில் 5-16 வரையான எல்லா வயதினருக்கும் கட்டாயக் கல்வி வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

சுகாதாரம் தொடர்பான ஆறாவது கோரிக்கை குழந்தைகள், பெண்கள் அனைவரதும் போஷாக்கு அதிகரிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பானது. கடந்த காலங்களில் போஷாக்கின்மை இவர்களையே மிகவும் மோசமாகப் பாதித்துள்ளமையால் இது ஒரு முக்கியமான கோரிக்கையாகும்.

ஒரு பெண்ணுக்குத்தான் தனது இனப்பெருக்க இயல்புமீதான ஆட்சியும் கட்டுப்பாடும் இருக்க வேண்டும் என்று இந்தக் கோரிக்கை வலியுறுத்துகிறது. குடும்பக் கட்டுப்பாடு மற்றும் திட்டமிடல் நடைமுறைகளிலும் அவளின் உரிமைகள் பேணப்பட வேண்டும்.

அரசியலில் பங்கெடுப்பது தொடர்பான ஆறாவது கோரிக்கை பிரதேச, தேசிய மட்டங்கள் அனைத்திலும் பெண்களுக்கும் நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று சொல்கிறது.

ஏழாவதும் மிகவும் முக்கியமானதுமான கோரிக்கை சமாதானம் தொடர்பானதாகும். இன்றைய யுத்த நிலைமையில் இனத்துவ சுபீட்சமும் சமாதானமும் நிலவும் வகையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் இடம் பெயர்ந்தவர்களின் குறிப்பாகப் பெண்களினதும் குழந்தைகளினதும் உரிமைகளும் பாதுகாப்பான மீளக் குடியமர்த்தல் உரிமைகளும் அங்கீகரிக்கப் பட வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளில் பெண்கள் ஆய்வு நிறுவனம் (CENWOR), பெண்களும் தொடர்புசாதனமும் தொடர்பான ஆய்வுக் கூட்டமைப்பு, முஸ்லீம் பெண்கள் ஆய்வு மற்றும் இயக்க முன்னணி (MWRAF) இலங்கைப் பல்கலைக்கழகப் பெண்களமைப்பு (SLFUW), பெண் கல்வி மற்றும் ஆய்வு நிலையம் (WERC), குடும்ப சேவைகள் நிலையம் (CFS), பெண்ணின் குரல், காந்தா சக்தி, சூரியா, அபிவிருத்தியிலும் விவசாயத்திலும் பெண்கள் தொடர்பான ஆய்வு நிறுவனம் (IAWD), உட்பட முப்பத்து மூன்று பெண்ணுரிமை அமைப்புகள் கையெழுத்திட்டுள்ளனர்.

# சம்மாந்துறையில் வன்முறை!

பாராளுமன்றத் தேர்தல்களின் ஜனநாயகத் தன்மையை விளங்கிக் கொள்ளத் திராணி இல்லாத சம்மாந்துறை ஐ.தே.கட்சி அரசியல்வாதிகள் சென்ற பிரதேச சபைத் தேர்தலின் போது காட்டுமிராண்டித்தனமான அரசியல் அராஜகத்தில் ஈடுபட்டிருந்தமையை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. கிழக்கில் பல தசாப்தங்களாக ஆட்சி பீடத்திலிருந்த ஐ.தே.கட்சி அரசியல்வாதிகள் எதிர்க்கட்சிகளின் பலம் கையோங்கி வருவதைச் சகிக்க முடியாமல் சம்மாந்துறையில் வரலாற்றில் இல்லாதவாறு பிரதேச சபைத் தேர்தல்களில் அரசியல் வன்முறையில் ஈடுபட்டிருந்தனர். இதற்கேற்றவாறு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய பொலிஸாரும் இதற்கு ஒத்துழைத்திருந்தனர். எதிர்க்கட்சி அரசியலில் ஈடுபட்டார் என்றே ஒரே காரணத்துக்காக இளம் சட்டபீட மாணவனொருவர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கூண்டில் அடைக்கப்பட்டார். பின்னர் முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் தலையீட்டால் விடுதலை செய்யப்பட்டார். அது மட்டுமல்லாமல் எதிர்க் கட்சி ஆதரவாளர்கள் பலர் தாக்கப்பட்டனர், பயமுறுத்தப்பட்டனர். பிரச்சாரக் கூட்டங்களைத் தடை செய்வதற்கு தங்களாலான வித்தைகளையெல்லாம் கையாண்டனர். அக்கட்சியிலுள்ள படித்த உத்தியோகத்தினர்கள் கூட அராஜகத்தில் ஈடுபட்டதும் வெறித்தன அரசியலுக்கு ஆதரவளித்ததும் எம் கண்முன்னாலேயே நிகழ்ந்தது. பிரதேச சபைத் தேர்தலுக்கு முதல்நாள் இரவு எக்கச்சக்கமாக குடித்துவிட்டு ஆயுதம் தரித்தவர்களாக அராஜகத்தில் ஈடுபட்டனர். இந்தக் குடிகாரக் கூட்டத்தில் ஒரு அதிபரும் அடங்கியிருந்தார்.

இப்போது மக்கள் கவலையெல்லாம் சென்ற பிரதேச சபைத் தேர்தல்போல இம்முறையும் பொதுத் தேர்தலில் அப்படியான மிரட்டல் சம்பவங்களும் அடாவடித்தனங்களும் நடக்குமா என்பது தான். அதற்கு சான்றாக சென்றமுறை நியமனப்பத்திரம் தாக்கல் செய்துவிட்டு ஊர்வலம் வந்த எதிர்க்கட்சி வாகனத்தின் மீது கல்லெறிந்து இருவரைக் காயப்படுத்தியது போல இம்முறையும் ஆளுங்கட்சியினர் கல்லெறிந்து தங்களது வீரத்தைக் காட்டினர். நல்லவேளை எவருக்கும் காயம் ஏற்படவில்லை. ஆளுங்கட்சியினரின் வன்முறைகள் தொடருமா என்பது போகப்போகத்தான் தெரியும்.

புயலன்

# அரசியல் கட்சிகளுக்கு அம்னெஸ்ரியின் வேண்டுகோள்!

அம்னெஸ்ரி இன்ரநஷனலின் செயலாளர் நாயகம் பியர் ஸானே அவர்கள் இலங்கைப் பொதுத் தேர்தல்களை முன்னிட்டு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் பகிரங்கக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இலங்கையில் மனித உரிமைகள் மீறலைத் தடுத்து நிறுத்துவதற்கு இந்த அரசியல் கட்சிகள் என்ன நடவடிக்கைகள் எடுக்கப் போகின்றன என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்க வேண்டுமென பியர் ஸானே அவர்கள் இந்தக் கடிதத்தில் கேட்டுள்ளார்.

அவருடைய கடிதத்தின் சாராம்சம்: கடந்த பத்து வருடங்களில் மிகவும் மோசமான மனித உரிமை மீறல்கள் இலங்கையில் பரவலாக இடம் பெற்றுள்ளன. மனித உரிமைகளைப் பேணுவதற்கான சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள போதிலும் இலங்கையின் எல்லா மக்களதும் மனித் உரிமைகளை யுத்த நிலைமையிலும் யுத்தமற்ற சூழலிலும் பேணுவதற்காக ஏராளமான நடவடிக்கைகள் தேவை.

இலங்கையின் எல்லா முக்கியமான அரசியல் கட்சிகளும் மனித உரிமைகள் தொடர்பான தங்களுடைய நிலைப்பாட்டையும் மனித உரிமைகள் பேணப்படுவதைப் பாதுகாக்கும் வழியில் தாம் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் பற்றியும் பகிரங்கமாகத் தெரியப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

பின்வரும் மூன்று அம்சங்கள் கவனத்திலெடுக்கப்பட வேண்டும் என்று விரும்புகின்றோம்.

● அரசியல், குடியியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச ஒப்பந்தத்துக்கும் (International Covenant on Civil and Political Rights - ICCPR) இயைவாக இலங்கையின் அரசியல் யாப்பும் ஏனைய சட்டங்களும் திருத்தப்பட வேண்டும்.

● ஜெனிவா ஒப்பந்தங்கள் சிலவற்றிலும் ICCPR இன் சில ஒப்பந்தங்களிலும் இலங்கை இதுவரை கையெழுத்திடவில்லை. இவையனைத்திலும் இலங்கை கையெழுத்திட வேண்டும்.

● இலங்கையில் தொடர்ந்தும் நிகழும் மனித உரிமைமீறல்களுக்கு இன்னுமொரு முக்கிய காரணம் ஆயுதப் படையினருக்குச் சட்ட மூலம் வழங்கப்படும் தண்டனை தவிர்ப்பு (IMPUNITY) சலுகையாகும். இது நீக்கப்பட வேண்டும்.

தேர்தல்கள் ஒகஸ்ட் 16ம் திகதி நடைபெற இருப்பதால் மனித உரிமைகள் தொடர்பாகத் தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்கவும் அவை பேணப்படுவது தொடர்பாகத் தாம் செய்யவிருப்பதை மக்களுக்கு உறுதியாகத் தெரிவிக்கவும் இது ஒரு நல்ல சூழல் என்று நாம் கருதுகிறோம்.

# திருமலை நகரசபைத் தலைவரின் ஜீவகாருண்ணியம்

## பசுக்கள் மூன்று நாட்கள் பட்டினி கிடந்தன!

திருகோணமலையில் ரெலோ இயக்கம் நகரசபை அதிகாரத்தை ஊடகமாகக் கொண்டு கப்பம் கேட்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. முதலாவது கட்டமாக நகரசபை எல்லைக்குள் இயங்கி வந்த மினிசினிமா எனப்படும் வீடியோ பட உரிமையாளர்களை நகராட்சி மன்ற அதிகாரத்தை உபயோகித்து அழைத்து, மாதா மாதம் ரெலோ இயக்க வளர்ச்சிக்கு கப்பமாக ஒரு குறிப்பிட்ட தொகையைத் தரச் சம்மதமானால், நகரசபையின் அங்கீகாரம் தரப்படும் எனக் கூறப்பட்டது. ''நகரசபைக்கு வரியும் கட்டி உங்களுக்குக் கப்பமும் கட்டவா லைசன்ஸ்?'' என்று தொண்டை வரை வந்த வார்த்தையை அடக்கிக் கொண்டு ''ஆம்'' என்று தலையசைத்தனர் வீடியோ உரிமையாளர்கள்.

இதற்கான முயற்சியாக தியேட்டர் உரிமையாளர்களை அழைத்த சூரியமூர்த்தி (நகரபிதா) ''வீடியோ உரிமையாளர்கள் பாவம்'' எனப் பரிதாபம் காட்டி ''அவர்களுக்கு லைசன்ஸ் கொடுத்தால் என்ன?'' என்று வினவினார். தங்கள் வியாபாரத்துக்கு எதிரான சட்டவிரோதத் தொழிலுக்கு லைசன்ஸா? என வெருண்ட தியேட்டர் உரிமையாளர்கள் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக நகரசபைத் தலைவரைப் பயமுறுத்த ''பிச்சை வேண்டாம் நாயைப்பிடி'' என்ற நிலையில் வீடியோ திரையரங்குகளை மூடிவிட வேண்டும் என்று உத்தரவிட்டு விட்டார். ஆனால் அவை மூடப்படவில்லை என்பது வேறு விடயம்.

தனது கட்சிக்கு வேறு எவ்வாறு வருமானம் தேடலாம் என்று சிந்தித்த நகரசபைத் தலைவருக்கு அண்மையில் புதிய ஐடியா பிறக்கவே இறைச்சிக்கு மாடு அறுப்பவர்களைத் தேடிப் புறப்பட்டார்.

நகரசபை வாகனத்தை தூர நிறுத்தி விட்டு இறங்கி நடந்து போன சூரியமூர்த்தியின் கண்ணில் மூன்று பசுமாடுகள் பட்டுவிடவே ''இவற்றை ஏன் அறுவைக்கு கொண்டு வந்தாய்?'' என்று வீராவேசங் கொண்டதோடு அப்பசுக்களை திரும்பவும் உரியவர்களிடம் சேர்க்க வேண்டுமென்று கட்டளையும் இட்டார். மூன்று பசுக்களும் வேறாகக் கட்டப்பட்டன. அறுவைக்காரர்களை அலுவலகத்துக்கு வரும்படி சொல்லி விட்டுத் திரும்பி விட்டார்.

பாவம் அறுவைக்காரர். நகரசபை அலுவலகத்துக்குப் போனபோது ''இங்கல்ல ரெலோ அலுவலகத்துக்குப் போங்கள்'' என்றார். அங்கே விழுந்தடித்துக் கொண்டு போன போது ''நீங்கள் பசமாடுகளை வெட்டினாலும் பரவாயில்லை. ஆனால் எங்கள் கட்சி வளர்ச்சிக்கு மாதா மாதம் பணம் தந்தால் போதும்'' என்று பேரம் பேசப்பட்டது. ''ஐயா இது சரியா?'' என்று அறுவைக்காரர் சூரியமூர்த்தியிடம் திரும்பி வந்து கேட்ட போது ''அவர்கள் முடிவை மீறக் கூடாது'' என்று பதில் சொல்லியுள்ளார்.

நிலைமை இவ்வாறிருக்க அதற்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தலைவரை அணுகி ''ஐயா, இது எம்.ஓ.எச். அலுவலகப் பணி. நாங்கள் தலையிடக்கூடாது. நீங்கள் தேர்தலில் வந்தவர்கள். போய்விடுவீர்கள். எமது வேலைக் கல்லவா நிரந்தர ஆபத்து வரக்கூடும்'' என்று புலம்பி ''ஓஹோ! அப்படியா?'' என்று கேட்டு விட்டுப் போய்விட்டார்.

கடைசியில் நடந்தது என்ன? பசுக்கள் தான் பாவம். இந்த விவகாரம் இழுபட்ட மூன்று நாட்களும் பட்டினி கிடந்த பின் வெட்டப்பட்டன.

ஆனால் நகரசபைத் தலைவரோ நாளிதழ் நிருபர் ஒருவருக்கு 'கூல் றிங்ஸ்' கொடுத்து, பசுக்களைக் காப்பாற்றி விட்ட ஜீவகாருண்யத்தையும் தன்னைப்பற்றிய செய்தியையும் போட்டு விட்டார்.

என்னே அரசியல் கேவலங்கள்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# 'நான் ஒரு சுத்தமான இணுவில் தமிழன்!'

-ராஜரட்ணம்



பொது சன ஐக்கிய முன்னணியின் சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் திரு.ராஜரத்தினம் அவர்களைச் சந்தித்தோம். அவருடனான உரையாடலின் போது அவர் தெரிவித்த கருத்துக்களின் சில பகுதிகள்:

''ஜூலை 8ம் திகதி மதியம் சந்திரிகா அவர்களிடமிருந்து எனக்கு அழைப்பு வந்தது. அழைப்பை ஏற்று அங்கு சென்ற போது அவர் என்னைத் தனது பட்டியலில் போட தெரிவு செய்துள்ளதாகக் கூறினார். 'நல்ல தகுதியுள்ள இளம் தமிழர்கள் ஒருவரும் இல்லை. உங்களுக்குச் சம்மதமா?'' எனக் கேட்டார். என் விருப்பத்துக்கு ஏற்றபடி பேசுவதற்கும், எனது அப்பா முன்பு சுதந்திரக்கட்சியில் இருந்த போது இருந்த தடைகள் ஒன்றும் இருக்கக் கூடாது என்றும் கோரிக்கைகளை முன்வைத்தேன். ''இராணுவ ரீதியில் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. பேச்சுவார்த்தை மூலம் தான் தீர்க்கலாம் என்று அவர் கூறினார். எல்லாம் சரிவந்தால் நீங்கள் என்னுடன் யாழ்ப்பாணம் வரவேண்டும்'' எனச் சந்திரிகா கேட்டுக் கொண்டார். அவருடைய பாணி என்னை ஈர்த்து விட்டது.

17 வருட யூ.என்.பி ஆட்சிக் காலத்தில் தமிழர்கள் நிறையவே கஷ்டப்பட்டுள்ளார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியும் 13வது திருத்தச் சட்டம் வந்த பிற்பாடு பாராளுமன்றத்திற்குத் தம்மை அனுப்பிய வர்களைப் பற்றி யோசிக்காமல், விட்டு விட்டு இந்தியாவுக்கு ஓடி விட்டார்கள். அந்த நேரத்தில் தான் பல இயக்கங்கள் வந்தன. இயக்கங்கள், தமிழ் மக்களுக்கு நிறையச் சேவை செய்துள்ளன. இனப் பிரச்சினைக்கான தீர்வை குமார் பொன்னம்பலத்தாலோ, நீலன் திருச்செல்வத்தாலோ, சிவசிதம்பரத்தாலோ காணமுடியாது. பிரபாகரன் தான் அதற்குச் சரியானவர்.

இன்று தமிழர்கள் தலைநிமிர்ந்து நடப்பது, பிரபாகரனால்தான். மற்ற இயக்கங்களைப்பற்றி எனக்கு ஒரு கோபமுமில்லை. ஆனால் கூட்டணி, தமிழ் காங்கிரஸ் ஆகியவற்நிலும் பார்க்க இயக்கங்கள் தமிழர்களுக்கு நிறையச் சேவை செய்துள்ளன என்று நான் கருதுகின்றேன்.

நான் பிரபாகரனை மதிக்கின்றேன். ஆனால் பொன்னம்பலத்தையும், சிவசிதம்பரத்தையும் கோழைகளாகவே கருதுகின்றேன்.

நீலன் திருச் செல்வத்திற்கும் நான் பொது சன முன்னணியில் சேர்ந்த தற்கும் எதுவித சம்மதமும் எல்லை.

பொ.ஐ.முன்னணி, யூ.என்.பி பட்டியலில் யாழ்ப்பாணத் தமிழர்கள் இல்லையென, குமார் பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டுள்ளார். யூ.என்.பியில் இல்லை என்பது உண்மை. முன்னணியில் இல்லை எனக் கூறியுள்ளார். அது சுத்தப் பொய். நான் ஒரு சுத்தமான இணுவில் தமிழன். என்னுடைய பெயரே தெல்லிப்பழை சின்னப்பா ராஜரட்னம்.

பொ.ஐ.முன்னணி எந்தத் தீர்வையும் இனப்பிரச்சினைக்கு முன் வைக்கவில்லை என்று கூறப்படுகிறது. ஆனால் நாங்கள் முதலில் சத்தியபிரமாணம் ஒன்று எடுத்தோம். இனம், சாதி, மதம் என்றடிப்படையில் கதைப்பதில்லை என்று. அப்படிக் கதைத்தால் கட்சியில் இருந்து விலக வேண்டும் என்று. அவர் (சந்திரிகா)எனக்கு வாக்குறுதி தந்துள்ளார். அரசியல் ரீதியாகத்தான் இப்பிரச்சினையைத் தீர்க்கலாம்' என்றும் தனக்கு ஒரு சந்தர்ப்பம் வேண்டும் தமிழர்களுக்கு ஏதாவது செய்வதற்கு என்று கூறியுள்ளார்.

நான் பாராளுமன்றம் சென்று ஆறு மாதத்துக்குள் தமிழ் மக்களின் பிரச்சினை தீராவிட்டால், நான் பதவி துறப்பேன். அப்படி நான் செய்யாவிட்டால் எந்தத் தமிழனும் என்னைச் சுடலாம்.

# கொஞ்சம் வேதம் கேளுங்கள்!

## வேதவாக்கு 1

''கடந்த 77ஆம் ஆண்டு 29ஆயிரம் மேலதிக வாக்குகளால் தலைவர் சிவசிதம்பரம் தேர்தலில் வெற்றிவாகை சூடினர். 89ம் ஆண்டு தேர்தலில் ஊர் பேர் தெரியாதவர்கள் கள்ள வோட்டு போட்டு தில்லுமுல்லு செய்து 40 ஆயிரம் வாக்குகளை மேலதிகமாகப் பெற்றார்கள். இதை யாரிடம் போய் சொல்வது? பாராளுமன்றத்துக்குப் போய் பார்த்து வாசிக்கும் இந்த தம்பிமார்தான் பிரச்சினைக்குத் தீர்வு காணப் போகிறார்களா?'' **-கூட்டணி ஆனந்தசங்கரி**

## வேதவாக்கு 2

''நாங்கள் படிக்காதவர்கள் தான். ஆனால் போராடத் தெரிந்தவர்கள். மக்களின் மனதை அறிந்தவர்கள். எங்களுக்குத்தான் இனப்பிரச்சினையைத் தீர்க்கத் தெரியும். எங்களை அனுப்புங்கள் பாராளுமன்றத்திற்கு. பிரச்சினை குறித்து ஒருதரத்துக்கு நாலுதரம் பேசுவோம். மேசையில் அடித்துப் பேசுவோம். கேட்காவிட்டால் கவனிக்கா விட்டால் அவங்களோடு எப்படிப் பேசுவது என்று எங்களுக்குத் தெரியும்''.

**தமிழ்த் தேசிய ஒற்றுமை முன்னணியின் -ரெலோ தலைவர் அ.செல்வம்**

## வேதவாக்கு 3

''கூட்டணித் தலைவர்கள் ஓடிப்போனவர்கள். இங்கே தமிழ் மக்கள் கஷ்டப்பட்ட நேரத்தில் கொழும்பிலும் இந்தியாவிலும் சொகுசு வாழ்க்கை நடத்தினார்கள். பொதுத்தேர்தல் என்றதும் பதவிக்கு ஆசைப்பட்டு விழுந்தடித்து இங்கு ஓடி வந்து விட்டார்கள். இந்த வாடிவீட்டுத் தலைவர்களுக்கு மக்களின் கஷ்டங்கள் மனநிலைகள் புரியுமா? ஒரு அவசரத் தேவையென்றால் இவர்களை கொழும்பில் எங்கே போய் தேடுவது?''

**-தமிழ்த் தேசிய ஒற்றுமை முன்னணி**

## வேதவாக்கு 4

''ஆம் நாங்கள் வாடி வீட்டுத் தலைவர்கள் தான். எங்களுக்கென்று இங்கு ஒரு மாளிகை போன்ற வீடு ஒன்று இருக்கின்றது. எமது கட்சியாளரும் முன்னாள் வவுனியா பாராளுமன்ற உறுப்பினருமாகிய தா.சிவசிதம்பரத்தின் வீடுதான் அது. அது இப்போது அவரது மனைவி பிள்ளைகள் உறவினரிடமா இருக்கின்றது? நாங்கள் வாடிவீட்டில் சும்மாய் இருக்கவில்லை. சொந்தப் பணத்தைக் கட்டித் தான் தங்கி இருக்கிறோம், கொள்ளையடித்த பணத்திலல்ல .'' **- கூட்டணித் தலைவர்கள்**

# சந்திரிகா: கொலை முயற்சி!

சந்திரிகா பண்டாரநாயக்காவை கொலை செய்வதற்கான திட்டம் போடப்பட்டுள்ளது எனும் செய்தியை கடந்த சில நாட்களாக பல சிங்கள மாற்றுப் பத்திரிகைகள் வெளியிட்டு வந்தன. அச்செய்திகளில் குறிப்பிட்ட கொலை சந்தேக நபர் ஊருகஹா சந்திரசேன அல்லது 'சமலையா' எனப்படும் நபர் 23ம் திகதி ரத்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்நபர் மறைந்திருந்த வீடொன்றினை முற்றுகையிட்டு பிடிக்கச் சென்ற பொலிஸாருடன் கத்தியால் சண்டை போட்டு தப்பிக்க எத்தனித்த வேளையில் பொலிசினர் மடக்கிப் பிடித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**அடுத்த இதழ் ஓகஸ்ட் 4ல்.**

# தேர்தல் வன்செயல்கள் 685!

இம்முறை பொதுத்தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் முடிவுத் தினத்திலிருந்து (ஜூலை 11) ஜூலை 25ம் திகதி வரையான தேர்தல் சட்டமீறல் புகார்களின் எண்ணிக்கை 685 ஆக உயர்ந்துள்ளது என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அதிகளவு புகார்கள் ஐ.தே.கவினரும் பொது முன்னணியினருமே செய்துள்ளனர் என்றும் தெரியவருகிறது. ஆளும்கட்சி அல்லது ஆட்சியை அமைக்க துடிக்கும் கட்சிகள் தான் அதிகளவில் குற்றம் செய்வார்கள் போலும்!

வேட்புமனுத்தாக்கலின் இறுதித் தினமான ஜூலை 11 ஆம் திகதி யன்று நடந்த அசம்பாவிதங்களினால் மட்டும் 200க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்திருந்ததுடன் 100க்கும் மேற்பட்ட வாகனங்கள் சேதத்துக்குள்ளாகியிருந்தன. ஒரு பெண் உட்பட ஐவர் கொல்லப்பட்டனர்.

# வெட்கத்துக்குத் தடை.....

பதினைந்து நூல்களோ தடைசெய்யப்படவில்லை. இவற்றுள் ஐந்து நாவல்களும், ஆறு கவிதைத் தொகுப்புகளும் நான்கு கட்டுரைக் கோவைகளும் அடங்கும்.

இன்றைய இலங்கையின் சூழலில் லஜ்ஜா தடைசெய்யப்பட வேண்டிய நூலல்ல. பரவலாக வாசிக்கப்பட வேண்டிய நூலாகும். கலாபூர்வமற்ற நாவல் என்றாலும் பங்களாதேஷில் இந்துக்களுக்கெதிரான இனத்துவ வன்முறையின் போது பாதிக்கப்படும் ஒரு இந்துக் குடும்பத்தின் வாழ்வு பற்றிய நாவல் லஜ்ஜா. இந்து-முஸ்லீம் என்னும் பாத்திர வார்ப்புகளை மறந்து விட்டால் சிங்கள - தமிழ் என்றோ அல்லது சேர்பிய - பொஸ்ஸியர் என்றோ அல்லது யூதர் - முஸ்லீம் என்றோ எல்லாவகையான சூழலுக்கும் பொருந்திப் போகிற ஒரு அனுபவம் தான் நாவலில் பேசப்படுகிறது.

மக்கள் படிக்க வேண்டியவை எவை, சமுதாயத்துக்கு நல்லது கெட்டது எது என்று தீர்மானிக்கிற அதிகாரம் அஸ்வர் அவர்கள் போன்ற குருட்டுச் சிந்தனையுள்ள ஐ.தே.கட்சி அரசியல்வாதிகளிடம் இருப்பது தேசத்தின் துர்ப்பாக்கியம்!

வெட்கம் என்ற சொல்லுக்கே இங்கு அர்த்தமில்லாமல் போய் விட்டது.

# கருணாகர.......

துக் கொண்டார். சிறிசபாரட்ணத்தின் பின் ரெலோவின் தலைவராக செயலாற்றி வந்த செல்வம் என்ற திரு.அடைக்கல நாதனுக்கு பெயரளவில் ஒரு பதவி கொடுக்கப்பட்டது.

சிறிகாந்தாவும் மீண்டும் இணைந்து கொண்டார்.

இப்பின்னணியிலேயே ரெலோவின் புதிய தலைமைப்பீடம் மட்டக்களப்பில் ஜனாவை ஓரங்கட்டி பேட்டோவை தமக்குச் சாதகமாக வளர்த்தெடுக்க முற்பட்டது என இயக்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இயக்க நிதிகள் இன்று சிவாஜிலிங்கத்திடம் முடங்கிக் கிடப்பதாகவும் அதில் ஒரு பகுதியை தேர்தல் வேலைக்காக ஜனாவிற்கு கொடுக்காமல் காலந்தாழ்த்தியதாலேயே சிக்கல் தோன்றியது எனவும் அவை கூறின. சிவாஜிலிங்கம் த.கா.விலிருந்து ஐ.தே.கவிற்குக் கட்சி மாறிய திரு.மோதிலால் நேருவின் நெருங்கிய உறவினர் என்றும் அவருடன் தொடர்ந்து அவர் தொடர்பு வைத்திருக்கிறார் எனவும் ரெலோ அதிருப்தியாளர்கள் கூறுகின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திருமலை தேர்தல் நிலை:

# பாடம் கற்பிக்கத் தயாராகும் மக்கள்!

திருமலை தேர்தல் நிலவரம் இன்னும் சூடுபிடிக்கத் தொடங்கவில்லை போல் தெரிகிறது. சுவரொட்டிகளும் (அதுவும் ஏனைய மாவட்டங்களைப் போல் அதிகளவிலும் இல்லை) கட்சி வாகன பவனிகளும் தான் திருமலை நகரின் தேர்தல் நிலவரத்தை எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. பிரதமர் ரணில் கலந்து கொண்ட ஐ.தே.கட்சிப் பிரச்சாரக் கூட்டத்தின் பின்னரும் அக்கட்சியின் பிரசார வேலைகள் மும்முரப்படுத்தப் படவில்லை. கந்தளாய்ப் பகுதியில் பொதுஜன ஐக்கிய முன்னணி பற்றிய நக்கல் பாடல்களை ஒலிபரப்பிக் கொண்டு ஐ.தே.க பிரசார வாகனமொன்று வலம் வந்து கொண்டிருக்கிறது. எனினும் அப்பிரதேசத்தில் இரு முக்கிய கட்சிகளுக்கும் சம அளவில் வாக்குக் கிடைக்கும் என்று பரவலாகப் பேசப்பட்டாலும் கூட்டு முன்னணியினருக்கு ஆதரவு அதிகம் இருப்பதாகத் தெரிகிறது. இதேவேளை ஒரே கட்சி வேட்பாளர்களான ஆரியபாலவின் (இவர் திருமலையில் ஐ.தே. கட்சியின் பிரதான பொறுப்பு வகித்தவர்) ஆதரவாளர்கள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான எம்.ஈ.எச்.மஹ்றூபினைத் தாக்க முற்பட்டதாக செய்தி உலவுகின்றது. முஸ்லீம்களின் வாக்கு இம்முறை முஸ்லீம் காங்கிரஸ் பக்கம் அதிகம் சார்ந்து இருப்பதால் இவரின் நிலை கேள்விக்குறியானதாகவே இருக்கின்றது. ஐ.தே.கட்சியின் இன்னொரு வேட்பாளரான ரஞ்சனி ஐ.தே.கட்சியின் திருமலை அமைப்பாளராக இருந்த வேளையிலேயே அதிக எதிர்ப்புக்களைச் சம்பாதித்தவர் என்பதால் இவரின் நிலை பின்தள்ளப்பட்டதாகவே இருக்கிறது.

இதே வேளை திருமலை மாவட்டத்தில் முஸ்லீம் காங்கிரஸ் மிகுந்த நம்பிக்கையுடையதாக இருக்கிறது. முஸ்லீம்களின் ஆதரவு மூதூர், தோப்பூர், கிண்ணியா போன்ற ஊர்களில் பெருமளவில் இருப்பதாக வேட்பாளர்கள் தெரிவிக்கின்றனர். இவர்கள் நகரையண்டிய பிரதேசங்களுக்குச் சென்று தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொள்கின்றனர். நகருக்குள்ளும் தெரிந்தவர்களை அணுகி வாக்குக் கேட்டுத் திரிந்து கொண்டிருக்கின்றனர். முஸ்லீம்கள் அதிகமாக வாழும் கிண்ணியா. மூதூர் பிரதேசங்களைச் சேர்ந்த இருவர் முதன்மை வேட்பாளர்களாக இருக்கின்றனர். இவர்களில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியில் தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சராக இருந்து பின்னர் சுட்டுக்கொல்லப்பட்ட அப்துல் மஜீத்தின் மகனான நஜீப்(புர்கான்) என்பவர் போட்டியிடுகிறார். இவர் கடந்த பிரதேச சபைத் தேர்தலில் ஸ்ரீ.ல.சு.கட்சி சார்பில் போட்டியிட்டு அதிக வாக்குகளைப் பெற்றவர். இப்போது முஸ்லீம் காங்கிரஸில் சேர்ந்து போட்டியிடுகிறார். மூதூர்ப் பிரதேச வேட்பாளரான அனஸ் என்பவருக்கும் அதிகளவில் ஆதரவு இருப்பதாகத் தெரிகிறது. மிகக் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெறுவதில் இவர்கள் இருவரிடையே போட்டி நிலவுவதாகவும் பேசப்படுகிறது.

திருமலையில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகளின் நிலைமை பற்றி ஒன்றும் கூறமுடியாதிருக்கின்றது. ஒரே கட்சியில் போட்டியிடும் சம்பந்தர், தங்கத்துரை இருவரிலும் தங்கத்துரைக்கு அதிக ஆதரவு இருப்பதாகவும் அவர் எம்.பியாக தெரிவு செய்யப்படலாம் என்றும் மக்கள் · பேசிக்கொள்கின்றனர். மூதூர்ப் பிரதேச தமிழ் மக்களின் ஆதரவு இவருக்கு இருப்பது குறிப்பிடத்தக்கது.

**ஸ்நேகன்**

ஈரோஸின் வெளிச்ச வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் சுயேட்சைக் குழுவுக்கு எந்தளவு ஆதரவு இருக்கிறது எனச் சொல்ல முடியாமலுள்ளது. பிரதேச சபைத் தேர்தலில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற ஈரோஸ் - ரெலோ கூட்டுக்கு இம்முறை அந்நிலையை எதிர்பார்க்க முடியாது எனத் தோன்றுகிறது. ஏனெனில் இந்தத் தேர்தலில் பலமான ஒரு கட்சியாக கூட்டணியும் ராஜகாரியர் தலைமையில் சுயேட்சைக் குழுவும் பிரதான கட்சிகளில் தமிழ் முக்கியஸ்தர்களும் போட்டியிடுவதால் தமிழர்களின் வாக்கு பிரிந்து செல்லும் நிலையில் இருக்கிறது. அதேவேளை நகர சபை ஆட்சியைக் கைப்பற்றிய கட்சியினர் அவர்களின் சமீபகால நடவடிக்கைகளால் மக்களின் அதிருப்திக்குள்ளாகியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. பிரதேச சபைத் தேர்தலில் ஈரோஸ் சார்பில் போட்டியிட்டு அதிக வாக்குகள் பெற்ற நந்தகுமாரும் இத்தேர்தலில் போட்டியிடுகிறார். முன்னர் கிடைத்த ஆதரவு ஈரோஸ் சார்பில் இம்முறை கிடைக்குமா என்பது சந்தேகமே! அத்துடன் திருமலை மாவட்டத்தில் ஈரோஸின் பொறுப்பு வாய்ந்த பதவி வகித்த ரட்னராஜா தனது பொறுப்புக்களில் இருந்தும் நீங்கி இருப்பதாகத் தெரிகிறது. இவர் முன்னாள் ஈரோஸ் எம்பியாக இருந்தவர்.

ஜனாதிபதி பங்கு கொள்ளும் ஐ.தே.கட்சி கூட்டமொன்றும் திருமலையில் நடைபெறவுள்ளது. புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வைத்தியசாலைக் கட்டிடத் திறப்புவிழாவிலும் அவர் கலந்து கொள்கிறார். இது வாக்குப் பெறுவதற்கான உத்திகளில் ஒன்றாக இருந்தாலும் தமிழ் முஸ்லீம் மக்கள் தங்களை வேறு பக்கங்களுக்குத் திருப்பிக் கொண்டுள்ளது ஐ.தே.கட்சிக்கு இவ்வுத்தி வெற்றியளிக்கும் என்பதை சந்தேகத்திற்குள்ளாக்கியுள்ளது. ஐ.தே. கட்சி அரசாங்கத்தின் நடவடிக்கைகள் சிலது அக்கட்சியை விட்டும் மக்கள் திசை திரும்பக் காரணமாக இருக்கிறது. திருமலை தோப்பூர் பிரதேசத்தில் ஒரு பாடசாலை (அல்ஹம்ரா மகா வித்தியாலயம்) முன்னர் இராணுவத்தினரதும் தற்போது பொலிசாரினதும் முகாமாக மாறியிருப்பதாகத் தெரிய வருகிறது. இவர்களை அப்புறப்படுத்தி பாடசாலை வளர்ச்சியில் கரிசனை காட்டாத முன்னைய உறுப்பினர்களுக்கு அவ்வூர் மக்கள் வாக்களிக்கத் தயாராக இருக்க மாட்டார்கள் என்பதும் ஆளுங்கட்சிக்குள்ள பலவீனங்களில் ஒன்றாகும்.

ஆக ஐ.தே.கவுக்கும், பொ.ஐ.முன்னணிக்கும் பாடம் கற்பிக்கத் தயாராக இருக்கிறார்கள் திருமலை வாழ் தமிழ் பேசும் மக்கள் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

# வரதருக்கு அஞ்சும் றோ?



வரதராஜப் பெருமாள்

ஏறத்தாழ மூன்றரை வருடங்களுக்கு மேலாக இந்திய அரசின் பாதுகாப்பில் வடமாநிலமொன்றில் வாழ்ந்து வரும் திரு.வரதராஜப் பெருமாள் அரசியலில் ஈடுபடுவதற்கென இலங்கை வர அனுமதிக்கப்படுவாரா என்பது கேள்விக் குறியாக உள்ளது. அவர் திருப்திப் படக்கூடிய ஒரு கௌரவமான பதவி அவருக்கு இங்கு உத்தரவாதப் படுத்தப்படும் பட்சத்திலேயே அவரை இங்கு அனுப்புவது உசிதமானது என றோ கருதுவதாக சென்னையிலிருந்து அண்மையில் வந்த ஒரு தமிழ் இயக்கப் பிரமுகர் தெரிவித்தார்.

பெருமாள் வெறுமனே இலங்கைக்கு மீள அனுமதிக்கப்பட்டால், ஏற்கன்வே விரக்தியில் இருக்கும் அவர் 89-90 இல் வடகிழக்கில் றோவின் செயல்பாடுகள் பற்றியும் அவர் ஏன் ஈழப்பிரகடனம் செய்ய வேண்டியதாயிற்று என்பது பற்றியும், இன்னும் வேறு சிக்கலான பின்னணித் தகவல்களையும் வெளியிட்டு விடலாம் எனவும் றோ அஞ்சுகிறது எனவும் அப்பிரமுகர் குறிப்பிட்டார். அத்துடன் தற்போது யாருடனும் அதிகம் தொடர்பற்று வடஇந்தியாவில் அமைந்துள்ள இராணுவக் குடியிருப்பு (Cantonment) ஒன்றில் வாழ்ந்து வரும் பெருமாள் அவர்கள் அடிக்கடி அங்குள்ள தனது இந்தியத் தொடர்பாளர்களுடன் பிரச்சினைப் படுவதாகவும் இது தமக்கு கவலையளிப்பதாகவும் சென்னையிலுள்ள றோ பொறுப்பாளர் ஆரணி ஈ.பி.ஆர்.எல்.எப் முக்கியஸ்தர்கள் சிலரிடம் தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

# நீ பாதி நான் பாதி!

யாழ் மாவட்டத்தில் சுயேட்சைக் குழுவாக போட்டியிடும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி) வேட்பாளர் பட்டியலில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த நான்கு வேட்பாளர்களது பெயர்களும் சேர்க்கப்பட்டிருப்பதாக ஐ.தே.க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னைய ஜனாதிபதி காலத்திலிருந்து யாழ். மாவட்டத்தில் குறிப்பாக தீவுப்பகுதியில் ஈ.பி.டி.பியினர் ஆற்றியுள்ள சேவை காரணமாக நிச்சயம் அவர்களுக்கு அங்குள்ள மக்கள் ஆதரவளிப்பார்கள் என தாம் நம்புவதாக இந்த ஐ.தே.க வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

சுப்பையா ஜெகநாதன், நடராஜா சிவராஜா, மொஹமட் சுல்தான் ரஹீம், உமாபதி சிவம் பாஸ்கரன் உட்பட நால்வர் ஈ.பி.டி.பியின் பட்டியலிலுள்ள ஐ.தே.க. வேட்பாளர்களாவர்.

சுப்பையா ஜெகநாதன் 1981இல் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் ஐ.தே.கட்சி சார்பில் போட்டியிட்டவர். இவரே அத்தேர்தலில் யாழ் மாவட்டத்தில் ஐ.தே.கவுக்கு அதிகமான வாக்குகளைப் பெற்றுக் கொடுத்திருந்தார்.

ஈ.பி.டி.பிக்கு கிடைக்கும் ஆசனத்தில் சரிபாதி ஐ.தே.கவினருக்கு வழங்கப்பட வேண்டும் எனவும், ஒற்றைப்பட ஆசனங்கள் கிடைக்குமாயின் அந்த மேலதிக ஒன்றை ஈ.பி.டி.பிக்கு விட்டுக் கொடுப்பதாகவும் உடன்பாடு காணப்பட்டுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும் இது தொடர்பாக ஈ.பி.டி.பி எவ்வித அறிவிப்பும் செய்யவில்லை.

# சோதனைக்குச் சோதனை காசுக்குக் காசு!

சில வாரங்களுக்கு முன்னர் நொச்சிமோட்டையில் உள்ள இராணுவத்தினர் புலிகளின், ஓமந்தைப் பகுதி சோதனைச் சாவடித் தொகுதியைத் தாக்கி அழித்ததையடுத்து புலிகளும் புதுமையான பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றார்கள். ஓமந்தை பத்து வீட்டுத் திட்டப் பகுதியில் ஒரு தற்காலிக சோதனை முகாம் அமைத்து, வவுனியா நோக்கி வரும் மக்களை இப்போது சோதனையிடுகின்றார்கள். பின்னர் சுமார் ஒன்று அல்லது ஒன்றரை மைல் தூரம், நொச்சி மோட்டைப் பகுதியில் உள்ள நரசிம்மர் ஆலயம் வரையில் பயணிகளை லொறிகளில் ஏற்றி வந்து இறக்குகின்றார்கள். இதற்கு ஆள் ஒன்றிற்கு 50 ரூபா கட்டணமாக அறவிடப் படுகின்றது.

நரசிம்மர் கோவிலடியில் இருந்து சுமார் முக்கால் மைல் தூரமுள்ள, படையினரோ புலிகளோ இல்லாத போர் முனைப் பிரதேசத்தை கால் நடையாகக் கடந்து வந்து படையினரின் பாதுகாப்பு அரணுக்குள் பிரவேசிக்க வேண்டியுள்ளது. ஒருபக்கம் பாதுகாப்புக்கான நடவடிக்கை மறுபக்கத்தில் வருவாய்க்கான வாய்ப்பு!


ரசிகர் அவைக்காக

அரங்காடிகள் வழங்கும்

'கொள்கரி'



(நாடகம்)

1994 ஜூலை 29 வெள்ளி மாலை 630 மணிக்கு

பம்பலப்பிட்டி மிலாகிரிய மண்டபத்தில் (கற்பகத்துக்கு முன்னால்)

டிக்கட்டுக்கள் மண்டப வாயிலில்


சரிநிகர் மாதமிருமுறை இதழ் இல. 18/3 அலோ சாலை, கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்
அச்சுப்பதிவு: 334, காலிவீதி இரத்மலானை நவமக அச்சகம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்